# பொருளியல் நோக்கு

மார்ச் 1995




## மகளிரும் பொருளாதாரமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிரும்


## மகளிருக்கு கல்வியூட்டுதல்

மகளிர் கல்வி தாக்கமான குடும்பத் திட்டமிடலில் ஒரு முக்கியமான செல்வாக்கினைக் கொண்டிருந்த போதிலும், வளர்முக உலகெங்கிலும் வாழ்ந்து வரும் மகளிர், ஆண்களிலும் பார்க்க குறைந்த அளவிலான கல்வியையே பெற்று வருகிறார்கள். ஒவ்வொரு மட்டத்திலும் கல்வியில் சேர்பவர்களின் சதவீதத்தை இத்தரவுகள் காட்டுகின்றன.




## வேளாண்மை

உலக உணவில் அரைவாசிப் பகுதியை மகளிர் உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் பெரும்பாலான வேளாண்மை வல்லுனர்கள் ஆண்களாக இருப்பதுடன், ஆண்களுக்கே ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார்கள்.




### உன்னிப்பான பார்வை




மகளிர் வேளாண்மைத் துறையில் செய்யும் வேலைகள் பெருமளவுக்கு குறைவாக மதிப்பிட்டு வருகின்றன.

| | தேசிய தரவுகள் | உள்ளூர் தரவுகள் |
|---|---|---|
| எகிப்து | 3.6% | 35 – 50% |
| பெரு | 2.6% | 86% |

Source: FAO

## நிலம் இழப்பு


சட்ட விதிகளும் அபிவிருத்திக் கொள்கைகளும் பெருமளவுக்கு ஆண்களுக்கு மட்டுமே காணிகளை ஒதுக்கி வருவதனால் மகளிர், - குறிப்பாக ஆபிரிக்க மகளிர் - நிலம் தொடர்பான உரிமைகளை இழந்து வருகிறார்கள்




# அவர்களுடைய நிலையும்

## குடும்ப் பெண்

பெண் வெளியே வேலை செய்தாலும் சரியே, வேலை செய்யாவிட்டாலும் சரியே வீட்டு வேலை அவளுடைய வேலையாகவே இருந்து வருகின்றது.





மூலம் : Worldwatch Institute



சமையல்காரர், துப்பரவு தொழிலாளர், தாதிமார் போன்றவர்களின் k is சேவைகளுடன் வேலையை it to ஒப்பிட்டு நோக்கினால், அது .ͻy பெரும்பாலான நாடுகளின் rses. மொத்த தேசிய உற்பத்தியின் ne அரைவாசிப் பகுதி வரையில் இருந்து வருவதனை காண முடிகிறது.

## ஊழியம்

ஆபிரிக்க மகளிர் தமது வீட்டு வேலைகளுக்கு மேலதிகமாக விவசாய வேலைகளில் முக்கால் வாசிப் பங்கின செய்து வருகிறார்கள்




மூலம் : UN Economic Commission for Africa.

நன்றி : *Women & the World Economic Crisis*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் நோக்கு

மலர் 20 இதழ் 12 மார்ச் 1995

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு 2,
இலங்கை.

## சிறப்புக் கட்டுரைகள் / நிரல்கள்


| | | |
|---|---|---|
| டப். பீ. அமரபந்து | 35 | நிலைத்து நிற்கும் அபிவிருத்தியில் சமூகப் பாதுகாப்பு |
| லால் ஜயவர்தன | 38 | சந்தை நோக்கிலான கொள்கைகள் ; ஒரு மதிப்பீடு |


## விசேஷ அறிக்கை
## மகளிரும் பொருளாதாரமும்


| | | |
|---|---|---|
| யோகா இராசநாயகம் | 5 | அபிவிருத்தியும் மகளிரை வலுப்படுத்தலும் |
| சேபாலி கோட்டகொட | 7 | குடும்பம் குறித்த வரைவிலக்கணம் : இலங்கையிலிருந்து சில சான்றுகள் |
| ஸ்வர்ணா ஜயவீர | 11 | மகளிர், கல்வி மற்றும் அபிவிருத்தி |
| பொன்மலர் ராஜேஸ்வரன் | 18 | போர் சூழ்நிலையில் மகளிர் |
| எம்.ஐ.லஷ்கர் | 19 | மகளிர் முன்னேற்றம்: பாகிஸ்தான் சமுதாயத்தின் ஒரு புதிய கூறு |
| ரஞ்சித் மலிகஸ்பே | 31 | இயற்கை இறப்பர் சர்வதேச விலை உறுதிப்படுத்தல் வழிமுறைகள் |


அடுத்த இதழ் :

வரவு செலவுத்திட்டமும்
புதிய கொள்கைகளும்

அட்டைப்படம் : அபிவிருத்தி தொடர்பான ஆசிய பண்பாட்டு மன்றத்தின் தென்னாசிய மகளிருக்கான பயிலரங்கொன்றின் சுவரொட்டியொன்றினை அடிப்படையாக கொண்டது.


பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளிவிவரத்தரவு-களையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.

பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் முழு ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதி-பலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாசிய மகளிர் தலைமை







## இலங்கை ஜனாதிபதி

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் 1945 ஜூன் மாதம் 29ஆம் திகதி கொழும்பில் பிறந்தார். அவர் 1956 முதல் 1959 வரையில் இலங்கைப் பிரதமராக இருந்த திரு.எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவினதும், 1960 தொடக்கம் 1965 வரையும் 1970 தொடக்கம் 1977 வரையும் இலங்கையின் பிரதமராக இருந்த திருமதி ஸ்ரீமாவோ ஆர்.டி. பண்டாரநாயக்காவினதும் புதல்வியாவார். 1988 இல் படுகொலை செய்யப்பட்ட திரைப்பட நடிகரும் அரசியல் கட்சி தலைவருமான திரு. விஜயகுமாரதுங்காவின் விதவையுமாவார். யசோதரா என்ற மகளும் விமுக்தி என்ற மகனும் இவருக்கு உண்டு.

கொழும்பு சென். பிரிஜெட் கல்லூரியில் கல்விகற்ற இவர் பின்னர் பாரிஸிலுள்ள சோபோர்ன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து அரசியல் விஞ்ஞான பட்டதாரியானார். 1972 முதல் 1977 வரை தனது தாயாரின்

( 24 ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் பிரதமர்

1993 அக்டோபர் 19ஆம் திகதி திருமதி பெனாசிர் பூட்டோ (40) பாகிஸ்தான் பிரதமராக பதவி ஏற்றார். இவர் அந்நாட்டின் வரலாற்றில் பொது மக்களால் இருமுறை தெரிவு செய்யப்பட்ட இரண்டாவது பிரதமர் என்ற பெருமையை ஈட்டியவர். முதலாமவர் இவரது புகழ்மிக்க தந்தை ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோ ஆவார். 1977 ஜூலை முதல் 1988 வரை பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் என்ற வகையில், தனது நாட்டில் ஜனநாயகத்தை கட்டியெழுப்புவதில் அவர் கடுமையான போராட்டமொன்றை மேற்கொண்டிருந்தார். பல முறை சிறைவாசமும் அனுபவித்தார். தந்தை தூக்கிலிடப் பட்டமை, தனயனின் மர்ம மரணம் போன்ற துயரச் சம்பவங்களை சந்தித்தார். தனக்கு எதிரான அடக்கு முறைகளை துணிவுடனும் திடசங்கற்பத்துடனும் எதிர்கொண்டார்.

1981 இல் ஜனநாயகத்தை மீளமைக்கும் ஒன்பது கட்சிக் கூட்டணியை உருவாக்குவதில் இவர்

( 24 ஆம் பக்கம் பார்க்க)

## பங்களாதேஷ் பிரதமர்


பேகம் காலிதா ஸியா 1945 ஆகஸ்ட் 15 இல் டினாஜ்பூர் மாவட்டத்தில் பிறந்தார். இவரது தந்தை இஸ்கத்தர் மஜும்தார் இங்கு வியாபாரியாக குடியேறி வாழ்ந்தார். பேகம் ஷியா இஸ்கந்தர் மஜும்தார், தைதபா மஜும்தார் தம்பதிகளின் ஐந்து பிள்ளைகளில் மூன்றாமவராவார். 1960 இல் டினாஜ்பூர் அரசாங்க பாடசாலையில் பயின்று மெட்றிக் குலேசன் பரீட்சையில் சித்தியெய்திய அவர் டினாஜ்பூர் சுரேந்திரநாத் கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்டார். தனது கல்லூரி வாழ்க்கையின் போது பாகிஸ்தான் இராணுவத்தின் கப்டனாக இருந்த ஸியாவுல் ரஹ்மானைத் திருமணம் செய்தார். ஸியாவுல் ரகுமான் பின்பு பங்களாதேஷ் பிரதம மந்திரியானார்.

திருமணத்திற்குப் பின் 1965 வரை சுரேந்திரதாத் கல்லூரி வாழ்க்கையைத் தொடர்ந்த பேகம் ஸியா, அவ்வாண்டில், மேற்கு பாகிஸ்தானில் கடமையாற்றிய தனது கணவருடன் இணைந்து கொண்டார்.

( 25 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிரும் பொருளாதாரமும்



ஐ.நா.வின் மகளிர் தசாப்தத்தின ஆரம்பத்தின் போது இலங்கையின் மகளிர் நிலை பற்றிய முதல் விரிவான அறிக்கை ஒன்றை 'பொருளியல் நோக்கு' 1976 இல் வெளியிட்டது. இவ் அறிக்கையில், சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் மகளிரின் பால் ரீதியான தாழ்வு நிலை பற்றி கவனம் செலுத்தப்பட்டிருந்தது. பத்து வருடங்களின் பின்னர் 1981 இல் 'நோக்கு' இதே விடயத்தை மீண்டும் கவனத்தில் எடுத்ததுடன், சூழ்நிலையில் பெருமளவு வித்தியாசம் எதுவும் காணப்படவில்லை என குறிப்பிட்டிருந்தது. தசாப்தத்தின் முடிவில் - 1986 இல் - மகளிரின் சமூக, பொருளாதார, அரசியல் அந்தஸ்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் பற்றி 'பொருளியல் நோக்கு' மீண்டும் ஒரு முறை மதிப்பீடு செய்தது. இத் தசாப்தத்தில் உலகம் முழுவதும் மகளிர் பற்றிய பிம்பத்தை உயர்த்தும் வகையில் விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அரசு சார்பற்ற மகளிர் தாபனங்கள், பெண்ணியல் குழுக்கள் எழுச்சியும் பலமும் பெற்றமையால் பால் ரீதியான பாரபட்சத்துக்கும், ஏனைய துன்புறுத்தல்களுக்கும் எதிரானதும் மகளிர் இயக்கங்களின் கொள்கைகளுக்குச் சார்பானதுமான சட்ட அமைப்பு, கொள்கை மாற்றங்கள் மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டன.

இத் தசாப்தம், இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையுடன் ஓரளவு சமகாலத்தில் இடம் பெற்றது. மகளிர் பற்றிய ஆர்வம், பிரசாரம், அதிகரித்த பிரக்ஞை என்பன ஒரு சில துறைகளில் மகளிருக்கான வாய்ப்புக்களை உயர்த்திய போதிலும், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மகளிரின் மீது எதிர்பார்க்கப்பட்ட அளவில் சாதகமான தாக்கங்களை எடுத்து வந்திருக்கவில்லை. ஒரு சில விதிவிலக்குகளைத் தவிர, அதிகரித்த வறுமை, உணவுப் பாதுகாப்பின்மை, நிதிப் பற்றாக்குறை மற்றும் குடும்பத் தாக்கங்கள் போன்ற நெருக்கடிகளின் விளைவாக, மகளிர், பொருளாதார வளங்கள், வருமானம், தொழில் என்பவற்றை அடையும் வழிகள் மோசமடைந்து, அவர்களது வேலைப்பளு அதிகரித்து, அவர்களின் சுகாதாரம், போஷாக்கு மற்றும் கல்வி அந்தஸ்துகள் குன்றியுள்ளன.

இவ்வாறான ஒரு பின்னணியில், 1995 மார்ச் 8 ஆந் திகதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, பொருளாதார தாராண்மைவாத வழிமுறைகளில் மகளிரின் நிலையை ஆராய நாம் மீண்டும் ஒரு முறை முயற்சிக்கின்றோம். இலங்கையின் பொருளாதார மாற்றங்கள் வர்த்தக தாராண்மைவாதம், அரச தாபனங்களை தனியார்மயப்படுத்தல் போன்ற பிரயத்தனங்களுடன் தொடர்புபட்டுள்ளது. எனினும், திறந்த பொருளாதார கொள்கையின் அனுகூலங்களை எல்லோரும் ஒரே அளவில் பகிர்ந்து கொள்ளவில்லை. நாட்டின் வேலை இல்லாத் திண்டாட்டமும் கீழுழைப்பும் தொடர்ந்து அதிகரித்துவரும் அதே வேளையில், முறைசாராத் துறையின் நடவடிக்கைகள் விரிவடைந்து செல்கின்றன. எனவே, வாழ்க்கையை நடாத்தும் பொருட்டு மகளிர் தமது வீட்டுச் சூழலிலிருந்து வேளியே வந்து, முறைசாராத் துறையில் தொழில் வாய்ப்புக்களை தேட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளமை அவர்களின் முன்னைய மீள் உற்பத்திப் பொறுப்புக்களை விட முக்கியத்துவம் பெற்றுள்ளது. இதன் விளைவாக, மகளிரில் அதிக செயற்பாடு உள்ள வயதுக் குழுவினர் ஊழியர் படையில் பங்கெடுப்பது அதிகரித்துள்ளது. இலங்கையின் ஊழியப்படையில் சேரும் 20 க்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட மகளிர் விகிதாசாரம் 1981 இல் 35.9% த்திலிருந்து 1993 இல் 58.5 % ஆக உயர்ந்துள்ளது. இரண்டாவது உயர் பங்களிப்புச் செய்வோர் 35 க்கும் 39 வயதிற்கும் இடைப்பட்டோராவர். இப் பிரிவினரின் பங்கேற்பு 1981 இல் 31.7 சதவீதமாக இருந்து 1993 இல் 53.7 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் ஊழியர் கணிப்பீட்டின் மூலம் பெறப்பட்டதாகும்.

( 4 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை முதல் குவைத் வரை

1990 ஆகஸ்ட 02 ஆந் தேதியன்று இராக் குவைத் மீது ஆக்கிரமிப்பு நடத்தியது. இலங்கை தொழில் அமைச்சின் தகவலின்படி, 96,000 பேருக்கு மேற்பட்ட இலங்கையர் இராக்கிலும் குவைத்திலும் வேலை செய்து வந்தனர். இவர்களில் பெரும்பான்மையானோர் எண்ணெய் வளமிக்க குவைத்திலும், சிறு தொகையினர் இராக்கிலும் தொழில் புரிந்தனர். இவர்களில் சுமார் 80 சதவீதத்தினர் 20 முதல் 45 வயதிற்குட்பட்ட மகளிராவர். இவர்கள் அனைவரும் குவைத்தில் வீட்டுப் பணிப் பெண்களாக தொழில் புரிந்தனர். சமூகத்தின் பரம ஏழைகளான இவர்களில் பெரும்பாலானோர் தமது முகவர் கட்டணம், விமானப் பிரயாணச் சீட்டு என்பவற்றிற்காக அதிகளவு கடன்பட்டோராவர். இதற்காக அதிகளவு கடன் வாங்குதல், வீடு, காணிகளை அடகு வைத்தல் எனபன சர்வ சாதாரணமானவை. இவர்களில் 15 சதவீதமானோர் தாம் நாட்டைவிட்டு வெளியேற்றப்படும்பொழுது தமது ஒப்பந்தக் காலத்தில் ஒரு வருடத்திற்கும் குறைவான காலமே தொழில் புரிந்திருந்தனர். அவர்கள் தமது கடன்களை தீர்க்கக்கூடிய அளவுக்கு எத்தொகைப் பணத்தையும் சேமித்திருக்கவில்லை.

சில மத்தியகிழக்கு தொழில் தருநர்கள், இப்பணியாளர்கள் இலங்கை திரும்பும் பொழுது ஒரு தொகைப் பணத்தை மொத்தமாக வழங்குவது வழக்கமாகும். ஏனையோர், அவர்களுக்கு எவ்வித கொடுப்பனவையும் வழங்கவில்லை. இலங்கையர்கள் தமது சம்பளத்தை தாமாகவே சேகரித்து நாடு திரும்பும் பொழுது மொத்தமாக பெருந் தொகையினைக் கொண்டு வந்தனர். ஏனையோர் புடவை, நகை, இலக்ட்ரொனிக் உபகரணங்கள் எனபவற்றை பெருமளவு கொள்வனவு செய்து வந்தனர். வளைகுடா யுத்தத்தின் போது பெரும்பாலான இப்பணியாளர்கள் தாம் தேடிய அனைத்தையும் இழந்தனர். இத்தகைய பௌதீக நிதி இழப்புகளுக்கு மேலதிகமாக இலங்கைப் பெண்கள் உளவியல் ரீதியாகவும் சொல் லொணாத் துன்பங்களை அனுப வித்தனர்.

1981 க்கும் 1987 க்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு செய்யப்பட்ட முறைப்பாடுகளில் 80 சதவீதமானவை மேற்காசியாவில் தொழில் புரியும் வீட்டுப் பணிப்பெண்கள் தொடர்பானவையாகும். மூன்று பிரதான முறைப்பாடுகளில் ஒன்று வீட்டு எஜமானரால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுவது பற்றியதாகும். பெரும்பாலான பெண்கள் வெட்கம், கௌரவக் குறைவு என்பன காரணமாக பாலியல் துன்புறுத்தல்களை வெளியே சொல்ல விரும்பாததால் இதனைக் கண்டுபிடிப்பதோ அல்லது நிரூபிப்பதோ கடினமாகும். ஏனைய முறைப்பாடுகளாவன: இணங்கிய வேதனத்தைக் கொடுக்க மறுத்தல், போதிய வீட்டு வசதியன்மை, வைத்திய கவனிப்பு இன்மை என்பனவும் மிதமிஞ்சிய வேலைப் பளுவுமாகும் (பெரும்பாலான பெண்கள் ஒரு நாளில் 12 முதல் 15 மணித்தியாலங்கள் வேலை செய்கின்றனர்). அதிகளவு சம்பளங்கள் சவுதி அரேபியா, குவைத், லெபனான் முதலிய நாடுகளில் வழங்கப்படுகின்றன. இது போன்ற துஷ்பிரயோகங்கள் ஏனைய மத்திய கிழக்கு நாடுகளிலும் இடம் பெற்று வருவதற்கான சான்றுகள் உண்டு.

மத்திய கிழக்கிற்கு புலம் பெயர்ந்த பெண்கள் கடுமையான தொழில், வாழ்க்கைச் சூழ்நிலைகளை அனுபவிக்கின்றனர். அவர்கள் குறிப்பாக சுரண்டலுக்கு இரையாகின்றனர். ஏனெனில், அவர்களுக்கு சட்டங்களாலோ அல்லது விசேட ஏற்பாடுகளாலோ பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை. இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக அதிகாரியொருவர் இலங்கைப் பெண்கள் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்: "அவர்கள் சாந்தமானவர்கள், அவர்கள் மலிவாக கிடைக்கின்றனர்; அவர்கள் பெரும்பாலும் உயர் எழுத்தறிவு உடையவர்கள். எனவே, அனுசரணையாளர்கள் அவர்களை எப்பொழுதும் விரும்பித் தேர்ந்து கொள்கின்றனர்".

*நன்றி:* 'World of work' சஞ்சிகை பிரசுரம்

## மகளிரும் பொருளாதாரமும்

( 3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த தசாப்தத்திலிருந்து பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகளில் மகளிரின் பங்களிப்பு தொடர்ச்சியாக பரவலடைந்து வந்த போதிலும், அவர்களுக்கு அதிகாரமளித்தல் தொடர்பான சில விடயங்கள் தீர்க்கப்படாதுள்ளன. விசேடமாக தொழிற்சாலைக் கைத்தொழில்களிலும் முறைசாராத் துறைகளிலும் காணப்படும் பால் ரீதியான தொழில் பிரிவுமுறை மகளிருக்கு அதிகாரம் அளித்தலுக்கும், அதிக பொறுப்புக்களை அளிப்பதற்குத் தடையாக உள்ளது.

தமது குடும்ப வருமான நட்டங்களை ஈடு செய்வதன் பொருட்டு நீண்ட வேலை நேரங்கள் அவர்களுக்குத் தேவைப்படும் அதேசமயம், அதற்கு மேலதிகமாக குடும்பப் பொறுப்புக்கள் அவர்கள் மீது சுமத்தப்படுவதால் அவர்களின் நேரத்திற்கான தேவைகள் மேலும் அதிகரித்துள்ளன. இரண்டாவதாக, சுகாதாரம் மற்றும் சமூக சேவைகளுக்கான அரசாங்கத்தின் செலவினங்களில் துண்டு விழுந்துள்ளமையால் அவர்களின் சுகாதாரத் தரம் குன்றியுள்ளது. ஆண்களுக்கான வேலைவாய்ப்பு வீழ்ச்சி, விலைவாசி உயர்வு, மகளிரை நீண்ட நேரமும், கடுமையாகவும் உழைக்க பலவந்தப்படுத்துவதுடன், அவர்களின் மீள் உற்பத்தி பணியையும் ஊழியர் படையில் அவர்களின் பங்களிப்பையும் அதிகரித்துள்ளது. மூன்றாவதாக, குடும்ப வருமானத்திற்கு தமது ஆண் துணையின் பங்களிப்பு வீழ்ச்சியினை ஈடு செய்யவும் ஊழியர் படையில் மகளிர் அதிகளவில் பங்கேற்பது முறைசாராத் துறையில் குறைந்த சம்பள வேலை வாய்ப்புகளுக்கு வழி வகுத்துள்ளது.

இவற்றுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு விடயங்களும் பிரச்சினைகளும் அடுத்து வரும் பக்கங்களில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தியும் மகளிருக்கு வலுவூட்டலும் : சில அவதானிப்புக்கள்

பேராசிரியர் யோகா இராசநாயகம்
(புவியியல் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம்)

கடந்த இரு தசாப்தங்களாக மகளிரை அபிவிருத்தி நிகழ்வுப் போக்கில் பங்காளிகளாக்குவதில் பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளும் சர்வதேச நிறுவனங்களும் பிரதானமாக கவனத்தைச் செலுத்தி வந்துள்ளன. உலகின் பெரும்பாலான நாடுகள் அபிவிருத்தியில் மகளிரின் விசேடத் தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்யும் வழிமுறைகளை அபிவிருத்தி செய்யும் அவசியத்தை உணர்ந்துள்ளன. மற்றொரு வகையில் கூறுவதாயின், மகளிர் தமது சொந்த உழைப்பின் பயன்களுக்கு உரித்துடையவர்கள் என்பதனை அவை உணர்ந்துள்ளன. அப் பயன்களின் விளைவாக ஏற்படும் உற்பத்தி அதிகரிப்பு அவர்களின் பௌதீக மேம்பாட்டிலும் சமூகத்தில் அவர்களுக்குள்ள அந்தஸ்திலும் நேரடியான தாக்கங்களை ஏற்படுத்த வேண்டும்.

'அபிவிருத்தி' என்ற பதம் மனித நலனின் எல்லாக் கோணங்களையும் உள்ளடக்கியதாகும். 'பொருளாதார நலன்' என்பது இதன் ஒரு கூறு மட்டுமேயாகும். 'முழுமையான அபிவிருத்தி' என்பது சமூக, கலாசார மற்றும் அரசியல் பரிமாணங்களை உள்ளடக்கிய ஒரு பன்முகமான வழிமுறையாகும். இந்த அபிவிருத்திக் கோட்பாடு மக்களையும் சமூகத்தையும் முழுமையாக நோக்குகிறது. அது அபிவிருத்தியை, முழுச் சமூகத்தினையும் அதன் எல்லா தனிநபர்களினதும் நலன்கள், ஆற்றல்கள் என்பவற்றை இடையறாது வளர்ச்சி பெறச் செய்யும் ஒரு வழிமுறையாகக் கருதுகிறது. இக் கோட்பாட்டினை புரிந்துகொள்ளும் பொருட்டு, அத்தோடு இணைத்து கருதப்பட வேண்டிய அபிவிருத்தியின் ஏனைய மூன்று முக்கிய பெறுமானங்கள் வாழ்க்கைத் தேவைகள், சுய மரியாதை, சுதந்திரம் என்பனவாகும்.

எனவே, அபிவிருத்தி என்பது, மக்கள், மகளிர், ஆண்கள், சமூகங்கள். அவர்களது வாழ்க்கைத் தரம் அவர்களின் ஆற்றல்களை வளர்த்தல் தெரிவுகள் என்பனவாகும். 1990 இன் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் மனித அபிவிருத்தி அறிக்கையில் குறிப்பிடப்படும் மிக முக்கியமான மனித ஆற்றல்களும், தெரிவுகளும் எவையெனில், நீண்ட ஆரோக்கிய வாழ்வுக்கான வாய்ப்பு, மதிப்பும் தரமுமிக்க வாழ்க்கைக்குத் தேவையான வளங்களைப் பெற இயலுதல் என்பன வாகும்.

மேற்குறித்த வரைவிலக்கணங்களின் அடிப்படையில் நோக்கும் பொழுது, மூன்றாம் உலக நாடுகளின் மகளிர் தொடர்ந்து அனுகூலமற்ற நிலையிலேயே வாழ்கின்றனர் என்பதனை காண முடிகிறது. அவர்கள் தொடர்ந்து உயர்வீத எழுத்தறிவின்மை, செல்வ வளமின்மை என்பவற்றால் துன்புறுகின்றனர். பல வளர்முக நாடுகளில் மக்களுக்காக - குறிப்பாக மகளிருக்காக - உருவாக்கப்பட்ட சுகாதாரம், கல்வி, மற்றும் சமூக நலத் திட்டங்களை வழங்க உருவாக்கப்பட்ட சமூகக் கோட்பாட்டு விதிமுறைகள் கூட போதியதாக இல்லை. எனினும், சமூக நலனைப் பொறுத்தவரையில், மகளிர் கல்வி மேம்பாடு ஆரம்ப நிலையில் சிறப்பாக இயங்குகிறது. மகளிர் கல்வியின் அதிகரிப்பினால் மகளிரின் உற்பத்தித்துறை வளர்ச்சி, குடும்ப போஷாக்கு மற்றும் வறுமை ஒழிப்பு என்பன ஏற்பட்டுள்ளன. மேலும், வாழ்வின் எல்லாத் துறைகளிலும் காணப்படும் தெரிவுகள் பற்றிய மகளிரின் அறிவு, ஆற்றல்களை அது விரிவடையச் செய்துள்ளது. எனவே, மகளிர் கல்வி என்பது தார்மீக உரிமை மட்டுமன்றி நடைமுறைச் சமூகத்தின் தேவைப்பாடுமாகும்.

இவ் வசதிகளைப் பெறுவது வரையறுக்கப்படும் பொழுது அல்லது புறமொதுக்கப்படும் பொழுது மகளிர் ஆண்களை விடப் பலவீனர்களாகவும் சம அந்தஸ்து அற்றவர்களாகவும் மாறுகின்றனர். சம அந்தஸ்து இன்மையால் ஏற்படும் தாழ்வு நிலை பிராந்தியத்திற்குப் பிராந்தியம் வேறுபடுகிறது. இவ்வேறுபாடு பெரும்பாலும் பாரம்பரிய கலாசாரத் தன்மைகள் மகளிரின் உற்பத்திப் பங்களிப்பு, அப் பிராந்தியங்களின் அரசியல் பெறுமானங்கள், அமைப்புக்கள் என்பவற்றில் தங்கியுள்ளது. பல்வேறு கலாசார குழுக்களின் மகளிர் பற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டுமாயின், அவர்கள் எவ்வாறு நோக்கப்படுகிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்வதுடன், அக்குழுக்களில் மகளிருக்கு வழங்கப்படும் பாத்திரம், தொழிற்பாடுகள் என்பவற்றை பிரதிபலிக்கும் 'அடிப்படை விதிமுறைகள்', 'சமூக வரைபடம்' என்பவற்றையும் புரிந்து கொள்வது அவசியமாகும்.

பல ஆய்வாளர்கள், பாலியல் ஏற்றத்தாழ்வுக்கு ஆதரவளிக்கும் பாரம்பரிய பெறுமானங்களை வெறுமனே விமர்சிக்கும் அணுகுமுறைகளைப் பற்றி தமது அதிருப்தியை தெரிவித்துள்ளனர். மகளிரின் அந்தஸ்து, பங்களிப்பு என்பன தொடர்பான ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக் கணத்தில் ஒரு மாற்றத்தை அவர்கள் விரும்புகின்றனர். இம் மாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார உறவு முறைகளில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாக மட்டுமே ஏற்பட முடியுமென அவர்கள் நம்புகின்றனர்.

கால ஓட்டத்தில் ஆண்/பெண் பேதம் பாலியலாக மாற்றம் பெற்று மனித சூழல் மிக வேகமாக மாறி வருவதனால், பெண்ணடிமைத் தனம் அதிகரித்துள்ளது. இவ்வாறு ஏற்பட முக்கிய காரணம் நவீன சமூகங்களின் பொருளாதார அபிவிருத்திப் போக்குக ளாகும். முதலாளித் துவத்தினதும் காலனித்துவத்தினதும் பாதிப்புக் களால் பாரம்பரிய பொருளாதாரத்தில் ஏற்பட்ட நவீனமயமாக்கலும் மறு சீரமைப்புக்களும் அசௌகரியங் களால் கஷ்டப்படும் மகளிரின் நிலையை மேலும் மோசமாக்கின.

விவசாய நவீனமயமாக்கல் ஆண்/பெண் தொழில் பகுப்பை மாற்றமடையச் செய்ததுடன், மகளிரின் வேலைப் பளுவை மட்டுமன்றி அவர்களின் தங்கி வாழும் நிலையையும் அதிகரிக்கச் செய்தது. நிலம் முதலிய வளங்கள் மீது மகளிர் கொண்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்வடைந்து, நவீன தொழில்நுட்பத்தை பெறுவதிலிருந்து பொதுவாக அந்நியமயப்படுத்தப் பட்டனர். இத்தகைய இழிநிலைக்கு மத்தியிலும் அவர்கள் விரிவடைந்து வரும் சம்பளம் பெறும் தொழில் களுக்கு மேலதிகமாக இரு அல்லது மும்மடங்கு வேலைப்பளுவை தொடர்ந்து செய்து வருகின்றனர். உண்மையில் நவீனமயப்படுத்தலால் முதலாளித்துவத்தின் கீழ் உற்பத்தித் துறை அதிகளவு திறம்பட செயல்பட்டபோதிலும் மகளிரின் பின்தங்கிய நிலையை அது மேலும் மோசமடையச் செய்துள்ளது. உற்பத்தி முறை மகளிருக்கு இட்டுள்ள கால் விலங்கு பன்மடங்காக இறுக்கப்பட்டு, பலப்படுத்தப்பட்டுள்ளது.

மகளிரின் தேவைகள் மற்றும் அபிவிருத்தியில் அவர்களின் பாத்திரம் என்பன குறித்த அக்கறை அபிவிருத்தித் திட்டமிடலில் பல்வேறு வகையான தலையீடுகளுக்கு இட்டுச் சென்றுள்ளது. மகளிர் தொடர்பான கொள்கை அணுகுமுறைகள் நலன் காப்பிலிருந்து சம அந்தஸ்து, வறுமை ஒழிப்பு, செயல்திறன், அதிகாரம்

அட்டவணை 1.1

சமூக அமைப்புக்கள், கலாசார காரணிகள் மற்றும் மகளிர் சுயாதிபத்தியம்

*சமூக அமைப்புக்களும் கலாசார காரணிகளும்*

(1) உறவுமுறை, குடும்பம், விவாக உறவுகள்
(2) வயது வேறுபாடுகள்
(3) சமயம் / நம்பிக்கை முறைகள்
(4) சட்ட, நிருவாக, அரசியல் நிறுவனங்கள்
(5) தொழில்பிரிவு (பால் அடிப்படையில்)

↓ பாதகம்

*மகளிர் சுயாதிபத்தியம்*

(1) இயக்க சுதந்திரம்
(2) வாழ்க்கைத் துணை, குடும்ப அளவு பற்றிய தெரிவு
(3) சொத்து கட்டுப்பாடு
(4) தகவல் பரிமாற்ற, ஒன்றுகூடல் சுதந்திரம்
(5) குடும்ப தீர்மானங்கள் எடுப்பதில் உள்ள பாத்திரம்.
(6) உடன் பிறப்புகளுடனான உறவு

→ தனிப்பட்ட சூழலை கையாளும் ஆற்றல்; மீள் உற்பத்தி நடத்தைகள் உட்பட . (மகளிர் சுயாதிபத்திய சுட்டெண்)

சாதகம்

↑ நவீனமயமாக்கல் சக்திகள்

(1) பிரதேசத்தை பொதுவாக அபிவிருத்தி செய்தல்
(2) தனிப்பட்ட அபிவிருத்திக்கான வாய்ப்பு - கல்வியும் தொழிலும்
(3) சட்டத்துறை சீர்திருத்தம்
(4) மாறுதல் முகவர்களின் பிரசன்னம்
(5) சிகிச்சை நிலையம் அமைத்தல்
(6) கிட்டிய சூழலில் புது மாதிரிகள் மற்றும மாற்றங்களை ஏற்படுத்தல்

அளித்தல் என நகர்வடைந்துள்ளது. இந் நகர்வுகள் மூன்றாம் உலக நாடுகளின் மகளிர் பற்றிய அபிவிருத்தித் திட்டமிடலில் மாறும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நோக்கிலும் கொள்கைகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை பிரதிபலித்து நிற்கின்றன (மோஸர் 1991).

சேமநலன் அணுகுமுறை மகளிரை அபிவிருத்தியின் செயலற்ற பெறுநர்களாக நோக்குகிறது. இவ் அணுகுமுறை பொருளாதார ரீதியில் மகளிர், ஆண் உழைப்பாளரை நம்பி வாழும் பாரம்பரிய குடும்பத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த அணுகுமுறையின் முக்கிய கவனம் மகளிரின் மீள் உற்பத்திப் பாத்திரத்தில் அவர்களின் நடைமுறைத் தேவைகளை எதிர்கொள்வதில் செலுத்தப்படுகிறது.

1970 களில் இவ் அணுகுமுறை விமர்சிக்கப்பட்டதன் விளைவாக, மகளிர் தொடர்பாக - குறிப்பாக, சம அந்தஸ்து, வறுமை எதிர்ப்பு, செயற்திறன், அதிகாரம் அளித்தல் என்பன தொடர்பாக - பல மாற்று அணுகுமுறைகள் வளர்ச்சியடைந்தன. சம அந்தஸ்து அணுகுமுறையின் அடிப்படை தத்துவம், மகளிர் சமூகத்தின் பின்தள்ளப்பட்டவர்கள் என்ற வகையில் அவர்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலான இடைவெளியை நடைமுறையிலுள்ள அமைப்புக்குள் குறிப்பிட்ட நடவடிக்கைகளால் நிரப்புவதைக் குறிக்கும்.

வறுமை எதிர்ப்பு அணுகுமுறை 1970 களின் பிற்கூற்றின் அடிப்படைத் தேவை உத்தியுடன் பெருமளவு

( 34 ஆம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பம் என்பதற்கான வரைவிலக்கணம்: இலங்கையில் இருந்து சான்றுகள்

*சேபாலி கோட்டேகொட*

குடும்பம் மற்றும் குடும்ப அங்கத்தவர்கள் என்போருக்கு இடையிலான உறவுமுறை பற்றிய ஆய்வு மகளிர் கல்வியின் முக்கிய ஒரு அம்சமாக கருதப்படுகிறது. குடும்ப அங்கத்தவர்கள் மத்தியில் வளங்கள் பகிரப்படும் பொழுது, - அவ்வளங்கள் குடும்பத்தின் தனிப்பட்டவர்களால் உருவாக்கப்பட்டவையாக இருந்தாலும் சரி அல்லது அரச நலன்காப்பு / அபிவிருத்திக் கொள்கைகளால் குடும்பத்தவர்களுக்கு வழங்கப்பட்டவையாகவோ இருந்தாலும் சரி - இது ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய முக்கியமான ஒரு அம்சமாக உள்ளது.

பொதுவாக, குடும்பத்தவர்கள் என்பது, குடும்பங்களைக் கொண்டதாகவும், அக் குடும்பங்கள் அவர்களது வளங்கள் ஒன்றாகப் பயன்படுத்தலை அல்லது பங்குகொள்ளல் என்பதனைக் குறிக்கிறது. இவ் விவகாரம் தொடர்பாக சமூக விஞ்ஞானத் துறையில் நிகழும் விவாதத்தின் முக்கிய அம்சங்கள் சிலவற்றை இக் கட்டுரை பரிசீலனை செய்வதுடன், தமது குடும்பத்தவர்களின் வாழ்க்கைக்காக நாளாந்தப் பிரச்சினைகளுக்கு பெருமளவு முகம் கொடுக்கும் மகளிரை "குடும்பத்தவர்கள்" என வரைவிலக்கணம் செய்வதன் சாதகமான அம்சங்களையும் குறித்துக் காட்டுகிறது. இவ் ஆய்வுக் கட்டுரைக்கான தரவுகள் 1980 இன் பிற்பகுதியில் கொழும்பில் நகர்ப்புற குறை வருமான குடியிருப்புகளிலும், 1990 இன் ஆரம்பத்தில் இரு கிராமப்புற ஊர்களிலும் நடாத்தப்பட்ட ஆய்வுகளிலிருந்தும் சேகரிக்கப்பட்டவைகளாகும்.

**குடும்பம் (Household) என்பதன் கோட்பாட்டாக்கம்**

"குடும்பம்" என்ற பதத்துக்கு கோட்பாட்டு விளக்கமளிப்பதில் மூன்று வெவ்வேறான அளவுகோல்களைக் கையாளலாம் : அவை வதிவிடம், உறவுமுறை அல்லது பொருளாதார நடவடிக்கைகள் என்பன. முதலில், ஒருவர் குடும்பம் என்பதை பௌதீக ரீதியில் - அதாவது, தனியான வதிவிட அலகு அல்லது வதிவிடத் தொகுதி அடிப்படையில் - நோக்க முடியும். இரண்டாவதாக, ஒரு அமைப்புக்குள் வாழும் மனிதர்கள் வகையினைப் பொறுத்து அதனைத் தீர்மானிக்கலாம். பெரும்பாலான சமூகங்களில் உள்ளூர் குழுவுனர் உறவுமுறை அடிப்படையில் அமைவதுடன், குடும்பத்தவர்கள் பற்றிய பெரும்பாலான நூல்கள் கலாசார வகையிலான உறவினர் தொடர்பை (அதாவது பெற்றோர் வழிவந்த உறவு முறைகள், திருமண ரீதியான பந்தங்கள்) இனங்காண்கின்றன. மேலும், ஒரு குடும்பத்தவர்கள் எதனை கொண்டு விளங்குகின்றனர் என்பதைப் பொறுத்தும், குடும்பத்தவரில் ஒருவருக்கொருவர் எவ்வாறு வேறுபடுகின்றனர் என்பதை பொறுத்தும் ஓரளவு இதனைத் தீர்மானிக்கலாம். மூன்றாவதாக, அதன் செயற்பாடுகளை பகுப்பாய்வு செய்வதனால், அதாவது குடும்ப பொருளாதார நிலைப்பாட்டிற்கு குடும்பத்தின் அங்கத்தவர்கள் எதனைச் செய்கின்றனர் என்ற ரீதியிலும் தீர்மானிக்க முடியும்.

**குடும்பத்தவர்கள் பற்றிய கோட்பாடுகள்**

பரந்துபட்ட மட்டத்தில், குடும்பத்தவர்கள் என்பது பொதுவாக உறவுமுறையினைக் கேந்திரமாகக் கொண்டு உருவாகின்றது என நூல்கள் வரையறை செய்கின்றன. குடும்ப அங்கத்தவர்கள் வெறுமனே வாழிடத்தை மட்டும் பகிர்ந்து கொள்பவர்கள் அல்லர்; அவர்கள் சில வகைப்பட்ட தொழிற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு நெருங்கிய உறவு முக்கிய அம்சமாகக் கருதப்படுகிறது. வம்சாவழி ரீதியில் வரையறை செய்யப்பட்ட உறவுமுறையின் அடிப்படையிலே குடும்பம் என்பது நோக்கப்படுகிறது. அத்தகைய பெரும்பாலான குடும்பங்களில் சொத்துக்கள் குறிப்பிட்ட சமூகங்களில் உறவு முறை அமைப்பின் அடிப்படையில் கட்டுப்படுத்தப்பட்டு, மாற்றப்படுகின்றன.

இலங்கையில், சம்பந்தப்பட்ட அமைச்சு அல்லது திணைக்களத்தைப் பொறுத்து 'குடும்பம்' என்ற பதத்துக்கான வரைவிலக்கணம் வேறுபடுகிறது. உதாரணமாக, திட்ட அமுலாக்கல் அமைச்சின் தொகைமதிப்பு புள்ளிவிவரத் திணைக்களம் (1987) பின்வருமாறு குறிப்பிடுகிறது: "ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் தமது உணவு மற்றும் அத்தியாவசிய வாழ்க்கைத் தேவைகளுக்காக பொதுவான ஏற்பாடுகளை செய்து சேர்ந்து வாழ்வது 'குடும்பம்' ஆக அமைகிறது. அவர்கள் உறவினர்களாகவோ அல்லது உறவுமுறை அற்றவர்களாகவோ அல்லது இரு சாராருமாகவோ அமையலாம். எனினும், அவர்கள் தமது வருமானத்தை ஒன்று திரட்டி, முழுமையாக அல்லாவிடினும், ஓரளவிலாவது பொதுவான வரவு செலவுகளில் பங்கேற்கின்றனர். மேலும், வழமையாக ஒன்றாக வாழும் ஆனால், அதே சமயம் தற்காலிகமாக தொலைவிலுள்ளவர்களும் குடும்ப அங்கத்தவர்கள் என்பதற்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களாவார்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுகர்வோர் நிதி, சமூக பொருளாதாரக் கணிப்பீட்டினை மேற்கொள்ளும் இலங்கை மத்திய வங்கி, குடும்பத்தவர் என்பதை பெருமளவுக்கு சிக்கலான முறையில் வரையறை செய்கின்றது. குடும்பத்திற்குள் பெரும்பாலும் சமூக அலகாக தென்படுவோரையும் பொருளாதார அலகாகத் தென்படுவோரையும் வேறுபடுத்திக் காட்டுகிறது. எனவே, குடும்பத்தவர் என்பது, "ஒன்றாக வாழும் பொதுவான சமையல் ஏற்பாட்டில் பங்கு கொள்ளும் நபர் அல்லது நபர்கள் குழுவினராவர். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கொருவர் உறவற்ற நபர்களும் உட்படுத்தப் படலாம்". செலவின அலகு ஒருவரையோ அல்லது மேற்பட்ட தொகையினரையோ கொண்டு விளங்கலாம். தமது வருமானத்தில் தங்கி வாழ்பவர்களை பொறுத்த வரை சுதந்திரமான முடிவுகளை மேற்கொள்பவர்கள் தனியான செலவின அலகாகக் கொள்ளப்படுவர். செலவின அலகு முழுக் குடும்பத்தினராகவோ அல்லது அதில் ஒரு பகுதியாகவோ கொள்ளப்படலாம்.

இலங்கை மகளிர்

சாதனைகள்

- தென்னாசிய மகளிரின் சராசரி எழுத்தறிவு விகிதம் 33 ஆகும்; இது இலங்கையைப் பொறுத்தவரையில் 83 சதவீதம் வரையில் உயர்வாக உள்ளது
- இலங்கை மகளிரின் ஆயுள் எல்லை 73 வருடங்களாகும்; ஏனைய தென்னாசிய நாடுகளில் வாழும் மகளிரின் ஆயுள் எல்லையிலும் பார்க்க இது 13 வருடங்கள் அதிகமானதாகும்.
- சிசு மரண விகிதம் இந்தியாவின் அளவிலும் பார்க்க நான்கில் ஒரு பங்காக உள்ளது.
- வெளி நாடுகளில் வேலை செய்து வரும் மகளிர் ஒவ்வொரு வருடமும் 40 கோடி அ.டொலர்களை இலங்கைக்கு அனுப்புகின்றனர். இது சுற்றுலாத்துறையின் வருமானத்திலும் பார்க்க மும்மடங்கு அதிகமானதாகும்.
- ஆண்களைப் போலன்றி, தம்மால் சமாதானமாகவும் இணக்கமாகவும் இணைந்து வேலை செய்ய முடியும் என்பதனை சிங்கள, தமிழ் மகளிர் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள்.

பிரதிகூலங்கள்

- கல்வி கற்ற பெண்களின் வேலையில்லாத் திண்டாட்டம் கல்வி கற்ற ஆண்களின் வேலையில்லாத்திண்டாட்டத்திலும் பார்க்க இரு மடங்காக உள்ளது.
- ஆக உச்சமட்டத்தில் உள்ள 20 சதவீதமான ஊழியர்கள்-பெரும்பாலும் ஆண்கள் - நாட்டின் குடும்ப வருமானத்தில் அரைவாசிக்குக் கூடிய பகுதியை சம்பாதிக்கிறார்கள். அதேவேளையில், கீழ் மட்டத்தில் இருக்கும் 20 சதவீதத்தினர் - பெரும்பாலும் மகளிர் - 5 சதவீதத்தை மட்டுமே பெற்றுக் கொள்கிறார்கள்.
- கடந்த 15 வ/ட காலத்தில், இயந்திரமயமாக்கல் மற்றும் ஆண்களின் ஆதிக்கம் நிலவி வரும் நகரத் தொழிற்சாலைகள் என்பவற்றின் விளைவாக, ஆயிரக்கணக்கான கிராமிய மகளிர் தமது பாரம்பரிய தொழில்களை இழந்துள்ளனர்.
- நீண்ட காலமாக நீடித்து வரும் இனப்போராட்டம் ஆயிரக்கணக்கான மகளிரை விதவைகளாக்கியுள்ளது.

பெரும்பாலான கலந்துரையாடல்களின் கருப்பொருள், குடும்பத்தவர்கள் என்போர் தமது இன விருத்தியையும் வாழ்க்கைத் தரத்தையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகளையும் அதன் நிலைப்பாட்டிற்கான தந்திரோபாயங்களையும் புத்திபூர்வமாக தீர்மானித்துக் கொள்ளும், கூட்டாக ஒன்றுபட்டு வாழும் குடும்ப அலகு என்பதாகும். தமது அங்கத்தவர்கள் அனைவரும் நலன் பெறும் வகையில் திறன்களை அதிகரித்த அளவில் இயங்க வைப்பதே குடும்பத்தனர்களின் பணி எனப் பிரதானமாக கருதப்படுகிறது. பயன்பாட்டை உச்சப்படுத்தும் அலகு என குடும்பத்தவர்களை நோக்கும் மனப்பாங்கினை பல்வேறு தத்துவார்த்தக் கருததுக்களில் காணக்கூடியதாக உள்ளது.

குடும்ப அலகு என்பது ஒரு சக்தி வாய்ந்த அலகாக இருந்து வருகின்றது என்றும், "ஒவ்வொரு வருக்கும் அவருடைய தேவைக்கு ஏற்ப" என்ற கோட்பாடு அதில் நிலவி வருகின்றது என்றும் டல்கொட் பார்ஸன்ஸ் என்பவர் குறிப்பிட்டுள்ளார். கைத்தொழில் சமூகத்தின் குடும்பத்தை அடிப்படையாகக் கொண்ட வீட்டுக் குடும்பம், தொழில் முறைகளுக்கு இடையில் நிலவி வரக்கூடிய வேறுபாடுகளை உறிஞ்சிக் கொள்ளும் ஓர் அமைப்பாக செயற்பட்டு வருகின்றது என்பது அவருடைய கருத்தாகும். குடும்பத்தின் இணக்கமான இயற்கை கட்டமைப்பின் அத்திவாரம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறு பாத்திரங்களை அளிப்பதிலேயே தங்கியுள்ளது. குடும்ப உறுப்பினர்கள் சமமானவர்களாகவும், தொழில் கட்டமைப்புக்குள் ஒருவருடன் ஒருவர் போட்டி போடக்கூடியவர்களாகவும் இருந்து வந்தால் குடும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரச்சினைகளும் கட்டுப்பாடுகளும்

சம்பளம், வேலை நிலைமைகள் என்பவற்றைப் பொறுத்தவரையில், இலங்கையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் பாரிய பாகுபாடுகள் இல்லை. எனினும், கலாசார, சமூக பொருளாதாரத்துறை சார்ந்த ஒரு சில காரணிகள் விஞ்ஞான, தொழில்நுட்பத்துறைகளில் மகளிரின் வாய்ப்புக்களை வரையறுத்து வருகின்றன. உதாரணமாக, பாரம்பரிய கலாசார விழுமியங்கள், மகப்பேறு, பிள்ளை வளர்ப்புக் கடப்பாடுகள் போன்ற பல காரணிகள் தகுதியுள்ள விஞ்ஞான பட்டதாரி மகளிரை களத்திற்கு செல்வதை தடுத்து, ஆசிரிய தொழிலை அல்லது அலுவலக தொழில்களை நாடச் செய்கின்றன. இது அவர்களின் தொழில்சார் எதிர்பார்ப்புக்களையும் தேர்வுகளையும் வரையறை செய்கிறது. அத்தோடு விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைகளில் மகளிரின் கல்விக்கு அரசாங்கம் வரையறுக்கப்பட்ட அளவில் மட்டுமே நிதி வளங்களை செலவிடுவதற்கு எதிரான வாதங்களை வலுவிலக்கச் செய் கின்றன.

மகளிர் குடும்ப ரீதியிலும் தொழில் ரீதியிலும் இரட்டைச் சுமைகளை சுமக்க வேண்டியுள்ளதுடன், தாய், தொழில் புரியும் பெண் ஆகிய இரு மாதிரிகளையும் இணைத்து பிரச்சினைகளுடன் போராட வேண்டியுள்ளது. தமது பிள்ளைகளை பேணி வளர்க்க விரும்பும் அதே சமயம் தமது குடும்பத்தின் மீது குறைந்த கவனத்தை செலுத்தக்கூடிய காலம் வரும் வரையில் தமது தொழிலில் ஓரளவுக்கேனும் தொடர்ச்சியாக இருக்க விரும்பும் மகளிருக்கு பொருத்தமான தீர்வு பகுதி நேர வேலையாகும். பல பட்டதாரி பெண்கள் ஆசிரியர்களாக அல்லது தனிப்பட்ட போதனாசிரியர்களாக பகுதி நேர வேலைகளை தேடியுள்ளனர். சிலர் தமது தகைமைகளுக்குப் பொருத்தமான தொழில்களை விட அதிகம் போட்டியற்ற தொழில்களைப் பெற விரும்புகின்றனர்.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் வேலைக்குத் திரும்புவதனாலும் மேலும் பிரச்சினைகள் கிளம்புகின்றன. குறிப்பாக, களத்தில் செயலூக்கத்துடன் தொழில்படாமல் இருப்பது விஞ்ஞான தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் புது முன்னேற்றங்களுக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையை ஏற்படுத்தலாம். விஞ்ஞான தொழில் நுட்பதுறையில் இலங்கை மகளிரின் எதிர்காலத்தைப் பொறுத்தவரையில், மகளிர் பாடசாலைகளில் விஞ்ஞான, தொழில் நுட்ப கல்வியினைப் பெற போதிய வசதியின்மை முக்கியமாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஓர் அம்சமாகும். கிடைக்கக்கூடிய வளங்கள், வசதிகள் என்பவற்றிற்கு இடையிலான வித்தியாசங்களும் மகளிர் பாடசாலை விஞ்ஞான போதனைகளின் தரம் பெரும்பாலும் ஆண்கள் பாடசாலைகளுடன் ஒப்பிடப்படுகின்றன. விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளில் ஆசிரியைகளைப் பயிற்றுவிப்பதற்கு போதியளவு வளங்களைப் பெறுவது இன்றைய அவசர தேவையாகும்.

பல பாடசாலைகளில் பௌதீக விஞ்ஞானத்து ¡றைகளில் குறைந்தளவு பெண்பிள்ளைகளே ஊக்குவிக்கப் படுகின்றனர். பொதுவாக, கல்வி, வைத்தியம் மற்றும் சுகாதார சேவைகளிலேயே மகளிர் பெருமளவுக்கு பிரவேசிக்கின்றனர்.

பொறியியல், பௌதீக விஞ்ஞானம் மற்றும் பிற தொழில்நுட்பத் துறையில் பெண்களின் குறைவான பிரதிநிதித்துவம், பெண்களின் தேவைப்பாடுகளில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. இதன் பயனாக, பல சமயங்களில் தொழில் நுட்ப அபிவிருத்தியும் தொழில் நுட்ப தேர்வுகளும் பெண்களை எதிர் மறையாகப் பாதிக்கின்றன.

விவசாயம், கைத்தொழில், மீன்பிடித்துறை முதலியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பெண்களின் பாரம்பரியத் திறன்களை ஓரங்கட்டி, பாரம்பரிய தொழில் மூலங்களையும் வருமானத்தையும் இல்லாமல் செய்துள்ளன. சில விடயங்களில் புதுத் தொழில் நுட்பம் பெண்கள் உழைப்பை மலிவாகச் சுரண்டுகிறது. விஞ்ஞான, தொழில்நுட்பத்துறைகளில் மகளிரின் தேவைகள் பற்றி சரிவர ஆய்வுகளும் அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அலகின் மீது பெருமளவுக்கு நெருக்குதல் மேற்கொள்ளப்பட முடியும். எனவே, இந்தப் பின்னணியில் ஆண்கள் (குறிக்கோள்களை சாதித்துக் கொள்ளல் மற்றும் குடும்பத்துக்கு இடையிலும், பரந்த சமூகத்துக்கிடையிலும் தொடர்புகளை மேற்கொள்ளல் போன்ற) முக்கியமான பங்குகளை வகித்து வருவதனையும், பெண்கள் (பிள்ளைகளை பிரசவித்தல், வளர்த்தல போன்ற) சாதாரண பணிகளை மேற்கொள்வதனையும் உறுதி செய்வதற்கு பால் பேதம் உருவாக்கப்பட்டுள்ளது.

பெக்கர் (1981) என்பார் இந்த இணக்கமான குடும்ப அமைப்பு குறித்து மிகவும் சிறந்த முறையில் விளக்கி உள்ளார். பயன்பாட்டை உச்சமட்டப் படுத்தும் அலகு என்ற முறையில் தனி நபரை அன்றி குடும்பத்தையே கருதவேண்டும் என அவர் தமது பகுப்பாய்வில் குறிப்பிடுகின்றார். குடும்பம் உருவாக்கப்பட்ட பின்னர், வீட்டுக்கும் சந்தைக்குமிடையிலான எல்லை உற்பத்திக்கான ஊழியத்தை அது அளிக்கின்றது. குடும்ப நடத்தையில் பொருளாதார ரீதியிலும் குடிசனவியல் ரீதியிலும் ஏற்படும் மாற்றங்கள் குடும்ப வருமானம் மற்றும் விலை மாற்றங்கள் என்பவற்றுக் கான எதிர்விளைவுகளாகும். குடும்பம் என்பது ஒரு தனி அலகாக நோக்கப்பட்டு வருவதனால் உறுப்பினர்களுக்கிடையே பொதுவான விருப்பத் தெரிவுகள் இருப்பதாகக் கருதப் படுகின்றது.

ஒரே இடத்தில் வசித்தல், உணவு தயாரிப்பினை பகிர்ந்து கொள்ளல் மற்றும் நுகர்வு, பிள்ளைகளை சமூகமயப்படுத்துதல் என்பன ஒரு பௌதீக அலகுக்குள் மேற்கொள்ளப்பட்டாலும் சரி, மேற்கொளளப்படாவிட்டாலும் சரி, குடும்பம் என்பதனை ஆகக் கூடிய கூட்டு கருமத்துடன் கூடிய மிகச் சிறிய குழு என நெட்டிங் (1984) என்பார் வரைவிலக்கணம் செய்கின்றார். ஒரு குடும்பம் 5 கருமங;களை மேற்கொண்டு வருவதாக அவர் கருதுகிறாா:

அ. உற்பத்தி : மூலவளங்களின் மதிப்பினை பெற்றுத் தரக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அதிகாரிக்கக்கூடிய மனித நடவடிக்கையே உற்பத்தி என வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. இது வீட்டுப் பராமரிப்பினையும் வீட்டு வேலைகளையும் உள்ளடக்குகிறது.

ஆ. விநியேகம் : குடும்பத்துக்குள்ளும் குடும்பங்களுக்கிடையிலும் உற்பத்தியாளர்களிடமிருந்து நுகர்வோருக்கு பொருட்களை விநியோகம் செய்தல். குடும்பங்கள் பொதுவாக மூலவளங்களை ஒன்றாகச் சேகரித்துக் கொள்வதற்கூடாக - அதாவது, பொதுமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கூடாக - ஒரு பொது நிதி உருவாக்கப்படு கின்றது என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இ. ஊடுகடத்துதல் : வரையறுக்கப்பட்ட மூலவளங்களுக்குள் சொத்துக்களை ஊடுகடத்துதல் என்பது சமூகத் தன்மை குறைந்ததாகவும் தனி நபர் இயல்வு மேலோங்கியதாகவும் இருந்துவர முடியும். சொத்துக்களுக்கான வாரிசுகள் மிகச் சிறு குழுக்களாக அல்லது தனி நபர்களாக குறைக்கப்பட்டு விடுவார்கள்.

ஈ. மீள் உற்பத்தி : சமூகமயப்படுத்தல் மற்றும் பிள்ளைகளை கலாசாரமயப்படுத்தல் என்பவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்திலும் இது ஏற்படுகின்றது.

உ. சேர்ந்து வாழுதல் : உணவைப் பகிர்ந்து கொள்ளல், பொதுவான சமையல், தனித்தனியான படுக்கை அறைகள் என்பவற்றுடன் இணைந்து சேர்ந்து வாழுதல்.

மேலே எடுத்துக்காட்டப்பட்ட கருத்துக்கள், குடும்ப உறுப்பினர்கள் பகிர்ந்து கொள்ளல், ஒன்றாகச் சேகரித்தல், ஊழியச் சந்தை நடவடிக்கைகளில் பங்கேற்றல், மூலவளங்களின் முகாமை, பல்வேறு வீட்டு வேலைகளை ஊழியர்களுக்கிடையில் பிரித்தல் மற்றும் வாரிசுகளுக்கு சொத்துக்களை கையளித்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக பொதுவான முடிவுகள் மேற்கொள்கின்றார்கள் என்ற எடுகோளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

குடும்பத்துக்குள் அதன் உயிர்வாழ்க்கைக்கு அவசியமாக வழிமுறை ஒன்று என்ற முறையில், ஊழியத்தை பால் பிரிவின் அடிப்படையில் பிரிப்பதனை நியாயப்படுத்துவது பார்சனின் வரைவிலக்கணத்திலுள்ள முக்கிய குறைபாடுகளில் ஒன்றாகும். ஊழியத்தின் பால்ரீதியான பிரிவினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விநியோக முறை குறித்து அது கேள்வி எழுப்புவதில்லை. மறுபுறத்தில், பெக்கரின் கோட்பாடு குடும்பம் என்பது ஒரு தனியான அலகு என்ற தவறான எடுகோளில் தங்கியுள்ளது. ஒரு குடும்ப உறுப்பினர்கள் முழுக் குடும்பத்தினதும் பொருளாதார நலனைக் கருத்திற் கொண்டே செயற்பட்டு வருகின்றார்கள் என்ற எடுகோள் முரண்பாடானது என பொல்பர் (1986) சுட்டிக் காட்டுகின்றார். ஏனெனில், சந்தையில் சிய ஆர்வத்தினால் தூண்டப்படும் தனி நபர்கள் குடும்பத்துக்குள் இயல்பாகவே சுயநலமற்றவர்களாக செயற்பட்டு வருகின்றார்கள் என அது கருதுகின்றது.

இந்த மாதிரிகள் அனைத்தும் குடும்பம என்பதனை ஏனைய அனைத்து விதமான குடும்பங்களிலிருந்தும் மாறுபட்ட தனித்துவமான ஓர் அலகாக நோக்குகின்றன. ஒரு குடும்பம் சுதந்திரமானதாக இருந்து வருவது போல் தென்பட்டாலும் கூட, ஏனைய குடும்பங்களுடன் அது இயக்க ரீதியான தொடர்புகளை ஸ்தாபித்து பராமரித்து வருகின்றது. ஒரு குடும்பத்துக்கும் மற்றொரு குடும்பத்துக்கு மிடையில் உறுதியான ஒரு பிரிவுக் கோட்டினை வரைவது கடினமாகும். குறிப்பிட்ட ஒரு குடும்பத்தின் இயல்பினை நிர்ணயம் செய்வதற்கு பங்களிப்புச் செய்யும் உறவுமுறையின் அடிப்படையில் இதனை நோக்க வேண்டும். அதாவது, ஒரு குடும்பத்தின் அங்கத்தவர் உள்ளடக்கம், பாலியல் உறவுகள், வீட்டு நடை முறைகள், பொருளாதார உபாயங்கள் மற்றும் முடிவெடுக்கும் முறைகள் ஆகிய அனைத்தும் இதில் முக்கியத்துவம் பெறுகின்றன. எனது வெளிக்கள பணிகளின் போது, உறவு முறை மற்றும் இனத்துவ தோழமை உணர்வு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு குடும்பங்களுக்கிடையே மிக நெருக்கமான உறவுகள் நிலவி வருவதனை அவதானித்துள்ளேன்.

பல நூலாசிரியர்கள் குடும்பம் என்பது குறித்து முன் வைத்துள்ள வரைவிலக்கணங்களை மேலே பார்த்தோம். "உறுப்பினர்கள் சமையல் தொடர்பான செலவுகளுக்கு பணமாக, பொருளாக அல்லது சேவைகளாக பங்களிப்புச் செய்து, உணவைப் பகிர்ந்து சாப்பிட்டு வரும் வீட்டு அலகு ஒன்று" என குடும்பம் என்ற பதத்துக்கு நான் வரைவிலக்கணம் வழங்க விரும்பு கின்றேன்.

என்னுடைய ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பெரும்பாலான குடும்பங்கள் உறவு முறையின் அடிப்படையில் அல்லது பிணைப்பு உறவுகள் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருந்தன. பல சந்தர்ப்பங்களில் ஒரே கூரையின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருவது அவதானிக்கப்பட்டது. எனவே, குடும்பம் என்பதற்கும் வசிப்பிட அலகு என்பதற்குமிடையில் ஒரு வேறுபாட்டினை சுட்டிக்காட்ட விரும்பு கின்றேன். வறுமை நிலவும் நகர்ப் பகுதிகளில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பொருளாதார காரணங்களுக்காக ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் ஒரு வசிப்பிடத்தை பகிர்ந்து கொள்வதே இதற்கு காரணமாகும். எனது வரைவிலக்கணத்தின் படி, ஒரு குடும்பம் என்பது ஒன்றாக வாழும் உறவு முறையைக் கொண்ட ஒரு குழுவைக் குறிக்கிறது. ஆனால், இவர்கள் அவசியமாக செலவுகளை சமமாக தம்மிடையே பகிர்ந்து கொள்ள வேண்டியதில்லை. இந்த குறுகிய வரைவிலக்கணமே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்பதனை இந்த ஆய்வுக்கான பேட்டிகளின் போது காண முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர், கல்வி மற்றும் அபிவிருத்தி

ஸ்வர்ணா ஜயவீர

கல்வி மற்றும் பயிற்சி என்பவற்றி பெண்களுக்குக் கிடைக்கக் கூடியதாகவிருக்கும் தற்போதைய வாய்ப்புக்கள் குறித்து இங்கு ஒரு மீளாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இந்த மீளாய்வு கல்வி வாய்ப்புக்களில் சமூக வர்க்கப் பரிமாணங்களையும், கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் பால் அடிப்படையில் நிலவி வரும் குறைபாடுகளையும் இனங் கண்டுள்ளது. பால் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ள பாத்தரங்கள் சமூக கட்டுப்பாட்டுக்கான கருவிகளாக் செயற்பட்டு வந்துள்ளதுடன், அபிலாஷைகளுக்கும் நடத்தை மாதிரிகளுக்குமிடையில் அவை முரண்பாடுகளையும் தோற்றுவித்துள்ளன. ஆண்/பெண் அடிப்படையில் அவரவர் வகிக்க வேண்டியிருக்கும் பாத்திரங்கள் குறித்த சில எடுகோள்களை சமூகம் பின்பற்றி வந்துள்ளது. இதன் விளைவாக, தொழில் கல்விக்கு ஊடாக வாய்ப்புக்கள் சமமற்ற நிலையில் பகிரப்படும் ஒரு நிலை அவதானிக்கப் பட்டுள்ளது. இந்த சமூக மனப்பாங்குகள் சமூக பொருளாதார யதார்த்தங்களை மூடிமறைத்துள்ளதுடன், மகளிரின் வாய்ப்புக்களின் மீது மிக மோசமான தாக்கங்களையும் எடுத்து வந்துள்ளன. மேலும், அபிவிருத்தி திட்டமிடலிலும் அது திரிபுகளை உருவாக்கியுள்ளது.

கல்விக்கும் பயிற்சிக்கும் அபிவிருத்திக்கும் இடையில் பன்முகப்பட்ட ஓர் உறவும் நிலவி வருகின்றது. இந்த உறவு முறையின் பால் ரீதியான பரிமாணங்களை அபிவிருத்தித் திட்டமிடுவோர் முக்கியமாகக் கவனத்தில் எடுப்பது அவசியமாகும். கல்வியிலும் பயிற்சியிலும் மகளிருக்கு சமமான வாய்ப்புக்களை அளிப்பது மட்டுமன்றி, இந்த வாய்ப்புக்களின் விளைவாக, வாழ்க்கைத் தரத்திலும் தொழில் பிரிவிலும் சிறந்த பெறுபேறுகளை எடுத்து வரக்கூடிய விதத்திலும் அவர்கள்அபிவிருத்தித் திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும். தனி நபர்கள் என்ற முறையிலும், அபிவிருத்தியின் இணையான பங்காளிகள் என்ற முறையிலும் மகளிருக்கு வலுவூட்டுவதே இத்தகைய திட்டமிடலின் குறிக்கோளாக அமைய வேண்டும். இந்த பின்னணியிலிருந்து நோக்கும் பொழுது நோக்கும் பொழுது, மூன்று முக்கியமான விடயங்களை இனங்காண முடிகின்றது. கல்வி பயனுள்ளதாக அமைவதற்கு இந்த மூன்று முக்கிய தேவைகளும் நிறைவு செய்யப்படுவது அவசியமாகும்.

வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுதல்; பால் அடிப்படையில் பாகுபடுத்தப்படாத தொழில் சந்தையொன்றில் மகளிர் ஊழியர் படையின் பங்களிப்பினை உயர்த்துதல்; பால் சமத்துவம் மற்றும் அடிப்படை உரிமைகள் என்பவற்றில் மகளிருக்கு அதிகளவில் வலுவூட்டுதல்.

## வாழ்க்கைத் தரம்

இலங்கையில் 1940 களின் நடுப்பகுதி தொட்டு கல்வியில் விரிவாக்கம ஏற்பட்டு வந்துள்ளது. இதனையடுத்து, நாட்டு மக்களின் கல்வி மட்டங்கள் உயர்ந்து சென்றன. இந்த மாற்றங்களின் விளைவாக, இலங்கையின் ஆயுள் எல்லையும் உயர்ந்து சென்றது. உயர்ந்த அளவில் தேசிய வருமானத்தைப் பெற்று வரும் பல நாடுகளின் மட்டங்களுக்கு இணையான விதத்தில் இலங்கையின் ஆயுள் எல்லை அதிகரித்துச் சென்றுள்ளது. 1940 களிலும் 1950 களிலும் முறையே 2.7 சதவீதமாகவும், 2.3 சதவீதமாகவும் இருந்து வந்த குடித்தொகை வளர்ச்சி 1970 களின் தொடக்கத்தில் 1.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. சாதகமான கல்விக் கொள்கைகளின் விளைவாக பெண் பிள்ளைகள் பாடசாலையில் நீண்ட காலத்தை செலவிடக் கூடிய ஒரு நிலைமை தோன்றி இருந்தமையே பிரதானமாக குடிசனவியல் போக்கில் ஏற்பட்ட இந்த மாற்றத்துக்கு பங்களிப்புச் செய்திருந்தது. மகளிரின் உயர்கல்விச் சாதனைகள் அதிகரித்துச் சென்றதுடன் இணைந்த விதத்தில், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு என்பவற்றை கருத்தில் கொண்டு திருமணம் பின்போடப்பட்டு வந்தது. இரு தசாப்த காலமாக பெண்களின் சராசரி திருமண வயது 25 வருடங்களாக இருந்து வந்துள்ளதுடன், சராசரி குடும்ப அளவு சுமார் மூன்று பிள்ளைகள் என்ற அளவுக்கு வீழ்ச்சி கண்டுள்ளது. எழுத்தறிவு பெற்றிருப்பதன் சாதாரணமாக, மகளிர் சுகாதார சேவைகளை மிகவும் தாக்கமான முறையில் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். மகளிர் என்ற முறையில் தமது உரிமைகள் குறித்த விழிப்புணர்வைத் தூண்டுவதில் கல்வி அமைப்பு பெருமளவுக்கு பங்களிப்புச் செய்யாதிருந்த போதிலும் கூட, மகளிரின் அரசியல் ஆர்வம் வரவர அதிகரிதத்துக் கொண்டு வந்துள்ளது. தேர்தல்களின் போது இந்த விழிப்புணர்வை மிகவும் தெளிவாகக் காண முடிகிறது.

இலங்கை 1940 களின் போதும் 1950 களின் போதும் முற்போக்கான சமூகக் கொள்கைகளை பின்பற்றி வந்துள்ளது. மேலும், 1970 கள் தொடக்கம், அடிப்படைத் தேவைகள் கருதுகோளுக்கு அப்பால் நோக்கக் கூடிய அரசியல்அர்ப்பணிப்பும் தரிசனமும் சர்வதேச ரீதியில் ஊக்குவிக்கப்பட்டு வந்துள்ளது. இந்த சாதகமான போக்குகளின் விளைவாகவே மேலே எடுத்துக் காட்டப்பட்ட முன்னேற்ற நிலைகள் தோன்றியிருந்தன. துரதிர்ஷ்டவசமாக, 1980 களின் போது இந்த அர்ப்பணிப் புணர்வு பலவீனமடைந்ததுடன், உலக வங்கியினாலும் சர்வதேச நாணய நிதியத்தினாலும் திணிக்கப்பட்ட அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கைகளினால் இந்த முன்னேற்றம் தாமதப்படுத்தப்பட்டது. இந்த நிகழ்வுப்போக்கின் போது, பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்து வந்த சமூகக் குழுவினர் தொடர்ந்தும் கல்வி அமைப்புக்கு வெளியே இருந்து வந்தனர். எவ்வாறிருந்தபோதிலும், இலங்கை, சிறுவர் உரிமைகள் குறித்த ஐ.நா.சாசனத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தாட்சிப்படுத்தி உள்ளதுடன், சிறுவர்களுக்கான நடவடிக்கைத் திட்டமொன்றையும் அறிமுகப்படுத்தி உள்ளது. 2000 ஆவது ஆண்டளவில் அனைவருக்கும் கல்வி என்ற கோட்பாடு இப்பொழுது உலக அளவில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, இந்தப் பின்னணியில், கட்டம் கட்டமான ஓர் அடிப்படையில் கட்டாயக் கல்விக்கான ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்தி, செயற்படுத்துவது அபிவிருத்தித் திட்டமிடுவோரின் ஒரு பொறுப்பாக இருந்து வருகின்றது. ஐந்தாண்டுக் கல்வி வெறுமனே எழுத்தறிவைப் பெற்றுக் கொள்வதற்கு மட்டுமே போதுமானது என்பதும், சமூக பொருளாதா அபிவிருத்திக்கு வசதி செய்து கொடுக்கக் கூடிய பொதுக் கல்வியை பெற்றுக் கொள்வதற்கு பத்தாண்டுகள் அவசியம் என்பதும் இப்பொழுது கண்டுணரப்பட்டுள்ளது. இத்தகைய ஒழுங்குவிதிகள் சிறுவர் உழைப்பினை ஒழித்து விடுவதற்கும், சிறுவர்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் ஏனைய துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாக்கப்படுவதனை குறைப்பதற்கும் உதவ முடியும்.

இலங்கை, கல்விக்கென 1960 களில் மொத்தத் தேசிய உற்பத்தியில் சுமார் 5 சதவீதத்தை ஒதுக்கி வந்தது. இது அந்தத் தசாப்தத்தின் நடுப்பகுதி அளவில் 2 சதவீதமாக வீழ்ச்சியடைந் திருந்தது. தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் இதே காலப்பிரிவில் கல்விக் கென ஒதுக்கப்பட்ட தொகை 16 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக வீழ்ச்சி கண்டிருந்தது. இதன் விளைவாக, கல்விச் சேவைகளில் ஒரு சீர்குலைவு நிலை தோன்றியதுடன், உயர் கல்வியிலும் தொழில் கல்வியிலும் தேக்கம் ஏற்பட்டது. கடந்த ஐந்து தசாப்த காலத்தின் போது நாட்டில் ஏற்பட்டு வந்துள்ள கல்வி முன்னேற்றத்தினால் மகளிரே பெருமளவுக்குப் பயனடைந்துள்ளனர். கல்வி வாய்ப்புக்கள் அவர்களுடைய சமூக பங்கினையும், அந்தஸ்தினையும் மேம்படுத்தின. இது தொடர்பாக வருங்காலத்தில் ஒரு பின்னடைவு ஏற்படாதிருக்கும் நிலையை உத்தரவாதப்படுத்திக் கொள்வது மிக முக்கியமானதாகும்.

## மகளிரும் ஊழியச் சந்தையும்

நடு 1950 கள் தொடக்கம், நாட்டில் இடம்பெற்று வந்த கல்விக்கும் பொருளாதாரக் கொள்கைகளுக்கு மிடையில் சில முரண்பாடுகள் நிலவி வந்தன. இதன் விளைாக, தொழில் வாய்ப்புக்களிலும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிலும் மகளிர் தமக்கு உரிய பங்கினை பெற்றுக் கொள்ள முடியவில்லை. இது தெளிவாகவே ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே ஒரு பாரபட்ச நிலையை தோற்றுவித் திருந்தது. இலங்கையைப் பொறுத்த வரையில், மகளிரின் கல்விச் சாதனைகளுக்கும் வேலை வாய்ப்புக் களுக்குமிடையில் ஒரு சாதகமான நேர் கோட்டுத் தொடர்பு நிலவி வரவில்லை என்ற உண்மையை அபிவிருத்தி திட்டவியலாளர்கள் உணர்ந்து கொள்வது அவசியமாகும். கடந்த இரு தசாப்த காலங்களில் இடம்பெற்று வந்துள்ள பாதகமாக மாற்றங்கள் சீர் செய்யப்பட்டு, பால் சமத்துவ கருது கோளின் அடிப் படையில்அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் மகளிர் ஒருங்கிணைக்கப்பட வேண்டுமானால் கொள்கை வகுப்போரும் திட்ட மிடுவோரும் இந்த விடயத்தை முழுமையாக அறிந்து கொள்வது அவசியமாகும். அதற்கென அனைத்துமடங்கிய பால் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று இருந்துவர வேண்டும். அத்தகைய நிகழ்ச்சித்திட்ட மொன்று அபிவிருத்தி திட்டமிடலுக் கான புதிய நோக்குகளை மேம்படுத்து வதற்கான அடிப்படையாக இரு கூறுகளை கொண்டிருத்தல் வேண்டும். கல்விக்கும் வேலை வாய்ப்புக்கு மிடையிலான உறவு முறையில் பால் ரீதியான பரிமாணங்கள் குறித்து விழிப்புணர்வை உருவாக்குதல், அபிவிருத்தித் திட்டங்களிலும் கொள்கைகளிலும் அடிச்சரடாகக் காணப்படும் தப்பெண்ணங்களும் பால் ரீதியாக ஆண்களும் பெண்களும் வகிக்க வேண்டியிருக்கும் பாத்திரங்கள் குறித்த எடுகோள்களும் குறித்த நோக்கு.

ஊழியர் படையில் மகளிரின் நிலை தொடர்பான பல அம்சங்கள் குறித்து அபிவிருத்தித் திட்டவிய லாளர்கள் அறிந்து கொள்ள வேண்டும். இந்த நிலைமைகள், கல்வி மட்டங்களை

அட்டவணை 1

இலங்கையில் வேலையில்லாத் திண்டாட்டம்

| வருடம் | மொத்தம் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 1963[1] | 7.3 | 8.9 | 7.6 |
| 1969/70[2] | 13.9 | 11.4 | 21.2 |
| 1971[3] | 18.7 | 14.3 | 31.1 |
| 1973[4] | 24.0 | 18.9 | 36.3 |
| 1973[5] | 17.4 | 13.7 | 26.8 |
| 1975[6] | 19.9 | 14.3 | 32.9 |
| 1978/79[7] | 14.7 | 9.2 | 24.9 |
| 1980/81[8] | 15.8 | 12.4 | 23.0 |
| 1981[9] | 17.8 | 13.2 | 31.8 |
| 1981/82[10] | 11.7 | 7.8 | 21.3 |
| 1985/86[11] | 14.1 | 10.8 | 20.8 |
| 1990[12] | 14.0 | 9.1 | 23.4 |
| 1993 | 13.8 | 10.2 | 21.0 |

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிவரங்கள், பல்வேறு சமூக- பொருளாதார ஆய்வுகள்

உயர்த்தியதன் விளைவாக கிட்டிய ஆதாயங்களை இல்லாமல் செய்து வருகின்றன. பொருளாதாரத்தின் முறை சாராத் துறைகளில் பெருந் தொகையான மகளிர் உழைத்து வருகின்றனர். ஆனால், உத்தியோக பூர்வ ஊழியர் படை புள்ளி விவரங்களில் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. எனினும், உத்தியோகபூர்வ ஊழியர் படையில் மகளிரின் பங்கேற்பு 1960 கள் தொடக்கம் துரித வேகத்தில் அதிகரித்து வந்துள்ளது. குறிப்பாக, 1980 களின் போது ஆண் ஊழியர் படையின் அதிகரிப்பு வேகத்திலும் பார்க்க கூடிய வேகத்தில் பெண் ஊழியர் படை அதிகரித்து வந்துள்ளது.

குடும்பப் பராமரிப்பில் மகளிர் நிர்ணயகரமான ஒரு பங்கினை ஆற்றி வருவதனை ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. மகளிர், ஊழியர் படையில் 2025 வது ஆண்டு வரையில் தொடர்ச்சியாக அதிகரிப்பு ஏற்பட்டு வரும் என எறியம் இடப்பட்டுள்ளது. 1970 கள் தொடக்கம், இடைநிலைப் பள்ளி வகுப்புகளில் ஆண் பிள்ளைகளிலும் பார்க்க பெண் பிள்ளை களே அதிகமாக சேர்ந்து படித்து வருகின்றனர் என்ற உண்மையும் அபிவிருத்தி திடடமிடலின் போது கவனத்தில் எடுக்கப்படுவது அவசியமாகும்.

மகளிர் கல்வித்துறையில் பல சாதனைகளை ஈட்டிக் கொண்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும் பேரண்டப் பொருளியல் சக்திகளால் அவர்கள் மிக எளிதில் ஊறுபடத்தக்க நிலையில் இருந்து வருகின்றனர். ஊழியர் படை ஆய்வுகளின் போது கேள்விகளுக்கு அளிக்கப்பட்ட பதில்களை அடிப்படையாகக் கொண்ட வேலையில்லாத் திண்டாட்டம் குறித்த புள்ளி விவரங்கள் இந்நிலைமையை நன்கு பிரதிபலித்துக் காட்டுகின்றன. பெருகிவரும் ஊழியர் படையை உறிஞ்சிக் கொள்ளும் திறனை பொருளாதாரம் கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாக, 1960 களின் கடைசிப்பகுதி தொடக்கம் நாட்டில் வேலையில்லாத்திண்டாட்டம் பெருகி வந்துள்ளது (அட்டவணை 1). 1970 களின் முடிவின் போது இதில் ஓரளவுக்கு ஒரு சிறிய வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது; ஆனால், 1980 களின் நடுப்பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டம் மீண்டும் பெருகத் தொடங்கியதுடன், 1990 இல் அது 14% ஆக இருந்தது. இக்கால கட்டம் முழுவதிலும் மகளிரின் வேலையின்மை விகிதம் ஆண்களின் வேலையின்மை விகிதத்திலும் பார்க்க இரு மடங்காக நிலவி வந்துள்ளது. உதாரணமாக, 1990 இல் ஆண்களின் வேலையின்மை 9.1% ஆக இருந்து வந்த அதே வேளையில், பெண்களைப் பொறுத்த மட்டில் இது 23.4% ஆக இருந்து வந்தது. இடைநிலைக் கல்வி பெற்றுள்ள ஆண்களினதும் பெண்களினதும் வேலையின்மை விகிதமே மிக உயர்வாகக் காணப்பட்டது. இந்தத் தொகுதியிலும் கூட, பெண்கள் விகிதசமனற்ற நிலையில் பாதிக்கப்பட்டிருந்தனர். க.பொ.த.(சா.த.) கல்வியைப் பெற்றிருந்த ஆண்களின் வேலையின்மை 1985/86 இல் 14.4% ஆக இருந்து வந்ததுடன், பெண்களின் வேலையின்மை 35.6% ஆக இருந்து வந்தது; க.பொ.த.(உ.த.) தகுதி பெற்றிருந்தவர்களில் 18.7 % ஆண்களும் 44.9% பெண்களும் வேலையற்றோராக இருந்து வந்தனர். இந்த ஏற்றத்தாழ்வுகள் 1990 களிலும் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன.

பள்ளிக் கல்வியை அதிகளவுக்குப் பெற்றிராத மகளிரைப் பொறுத்த மட்டில், அவர்கள் சார்புரீதியில் எளிதாக வேலைகளை பெற்றுக் கொள்ள முடிகிறது. ஆனால், இடைநிலைக் கல்வியைப் பெற்றிருக்கும் மகளிரால் அவ்வளவு எளிதில் வேலைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு முரண்பாடான நிலைமை இங்கு காணப்படுகிறது. பெண்கள் எழுத்தறிவு தொடர்பாகவும், பெண்கள் கல்விப் பங்கேற்பு தொடர்பாகவும் ஆகக் குறைந்த விகிதங்களை பதிவு செய்திருக்கும் பெருந்தோட்டத் துறையில் வேலையின்மை விகிதங்கள் குறைவாக உள்ளன. மேலும், வேலை கொள்வோரும் பயிற்சி முகவரகங்களைச் சேர்ந்தவர்களும் பால் அடிப்படையிலான சமூகக் கருதுகோள் ஒன்றினை கொண்டுள்ளனர். அதாவது, ஆண்களை அவர்கள் "சம்பாதிப்பவர்களாக" நோக்குகிறார்கள். திறன்கள் செறிந்த, அதிகளவுக்கு அனுகூலமளிக்கக் கூடியதாக இருக்கும் சிறந்த தொழில்களில் மகளிர் பிரவேசிப்பதனை தடுக்கக் கூடிய விதத்தில் அவர்கள் "ஆண்களுக்கான தொழில்கள்" எனவும், "பெண்களுக்கான தொழில்கள்" எனவும் ஒரு வேறுபாட்டை உருவாக்கியுள்ளார்கள்.

அதே வேளையில், கல்வி மட்டங்களுக்கும் சிறந்த வேலை வாய்ப்புக்களுக்குமிடையில் ஒரு தொடர்பு நிலவி வருவதனால், கல்வி, குடும்பங்களின் கண்ணோட்டத்தில் சமூக முன்னேற்றத்துக்கான ஒரு ஊடகமாக தொடர்ந்தும் கருதப்பட்டு வருகின்றது. மகளிர் அதிகளவுக்கு கல்வி வாய்ப்புக்களை பெறக்கூடியதாக இருந்தமையினால் தொழில்சார் துறைகளிலும், உப தொழில்சார் துறைகளிலும் இலிகிதர் போன்ற துறைகளிலும் அவர்கள் பெரும் எண்ணிக்கையில் பிரவேசித்துள்ளனர். தொழில்சார் மற்றும் உப தொழில்சார் துறைகளில் மகளிரின் பங்கேற்பில் தொடர்ச்சியாக அதிகரிப்பு ஏற்பட்டு வந்துள்ளது. ஆனால், இத்தொழில்களில் பெரும்பாலானவை சேவைத் துறைகளிலிலேயே உள்ளன.

இலங்கையில் 1980 களின் போது மகளிரின் கல்வி மட்டங்கள் பெருமளவுக்கு உயர்ந்து சென்றுள்ளன. பெருந்தொகையான மகளிர் ஊழியர் படையில் பிரவேசித்துள்ளனர். ஆனால், மகளிருக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கும் தொழில்களின் தரத்தில் குறிப்பிடத்தக்க ஒரு சீரழிவு நிலை ஏற்பட்டு வந்துள்ளது என்பது விசனமூட்டும் ஒரு விடயமாகும். 1981 இல் ஊழியர் படையிலிருந்த மகளிரில் சுமார் 80 சதவீதத்தினர் சம்பளம் பெறும் தொழில்களைப் புரிபவர்களாக இருந்து வந்தனர். ஆனால், இந்த விகிதம் 1985-86 இல் 58.4 % ஆகவும், 1990 இல் 55.6 ஆகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. இந்தப் பெண்களில் சுமார் அரைவாசிப் பகுதியினர் சமயாசமய தொழிலாளர்களாக இருந்தனர். மறுபுறத்தில், சம்பளம் பெறாமல் குடும்பத்துக்கு உழைத்து வந்த மகளிரின் சதவிகிதம் 1981 இல் 6.5% ஆக இருந்து 1990 இல் 25.1% ஆக அதிகரித்து இருந்தது. எனவே, 1980 களில் பெருகி வந்த மகளிர் ஊழியர் படையில் பெருந்தொகையினர் முறைசாராத் துறைக்கும் சமயாசமய தொழில்களுக்குமே தள்ளப்பட்டு

அட்டவணை 2 (அ)

கல்வி மற்றும் பால் அடிப்படையில் வேலையின்மை விகிதங்கள்

| கல்வி மட்டம் | 1985/86 | | | 1992* | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் |
| பள்ளிக் கல்வி இல்லை | 6.1 | 7.7 | 4.8 | 1.1 | 0.2 | 2.04 |
| பள்ளி ஆண்டுகள் 1 - 5 | 7.7 | 7.0 | 9.4 | 3.8 | 2.3 | 6.3 |
| பள்ளி ஆண்டுகள் 6 - 8 | 11.2 | 9.5 | 16.5 | 15.4 | 12.9 | 22.1 |
| பள்ளி ஆண்டுகள் 9 - 10 | 20.8 | 15.4 | 34.9 | | | |
| க.பொ.த. (சா.த.) | 22.3 | 14.4 | 35.6 | 19.8 | 13.2 | 31.5 |
| க.பொ.ந. (உ.த.) | 32.0 | 18.7 | 44.9 | 21.1 | 13.5 | 28.2 |
| பட்டம் | 6.3 | 3.3 | 10.2 | | | |
| பட்டப் பின் படிப்பு | 3.9 | 4.2 | 3.2 | | | |
| அனைத்து மட்டங்களும் | 14.1 | 10.8 | 20.8 | 13.3 | 10.1 | 19.8 |

* வட, கீழ் மாகாணங்கள் தவிர

மூலம் : ஊழியர் படை ஆய்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளார்கள் என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. மகளிரின் கல்விச் சாதனைகள் அதிகரித்து வந்திருக்கும் ஒரு சூழ்நிலையிலும் கூட இந் நிலைமை தோன்றியுள்ளது. பள்ளிக் கல்வியைப் பெறுவதில் ஆண்களும் பெண்களும் சம வாய்ப்புக்களை பெற்றிருக்கும் ஒரு நாட்டில் பெண்களில் சுமார் நான்கில் மூன்று பங்கினர் குறைந்த தரத்தைச் சேர்ந்த தொழில்களில் பெருமளவுக்கு செறிந்து காணப்படுகின்றனர்.

ஊழியர் படையின் பால் பிரிவில் கடந்த சில வருடங்களின் போது குறிப்பிடக் கூடிய மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, பிழைப்புதிய விவசாயம், பாரம்பரிய கிராமக் கைத்தொழில்கள், நவீன கைத்தொழில்களின் இணைப்புப் பிரிவுகள், கல்வி, சுகாதாரம் மற்றும் வீட்டுச் சேவைகள் போன்ற துறைகளில் மகளிர் ஒன்று திரண்டுள்ளனர். கலாசார ரீதியில் "ஆண்களுக் குரியவை" என பொதுவாகக் கருதப்பட்டு வரும் தொழில்களில் 5 சதவீதத்துக்கும் குறைவான மகளிரே ஈடுபட்டுள்ளனர். தொழில்நுட்பம் தொடர்ந்தும் ஆண்களுக்கு உரிய ஒரு துறையாக இருந்து வருகின்றது. வேளாண்மைத் துறையும் சிறு கைத்தொழிலகளும் இயந்திரமயமாக்கப் பட்டு வருவதனால் மகளிரின் தொழில்கள் ஒரு பாரிய அச்சுறுத்தலை எதிர் கொண்டுள்ளன. முகாமை மற்றும் முக்கிய முடிவுகளை எடுக்கும்தொழில்களை பொறுத்த வரையில், மகளிரின் பங்கு 1984 இல் 3.7% ஆக இருந்து 1992 இல் 17.5% ஆக அதிகரித்துள்ளது. ஆனால், அண்மைய வருடங்களில் இலங்கை நிர்வாக சேவைக்குள் பிரவேசிக்கும் பெண்களின் எண்ணிக்கையில் படிப்படியாக ஒரு வீழ்ச்சி ஏற்பட்டு வந்துள்ளது.

பால் சமத்துவத்தைக் கருத்தி தொண்டிராத அபிவிருத்தித் திட்டங்களே இத்தகைய ஏற்றத்தாழ்வு களுக்கு பெருமளவுக்கு பொறுப்பாக

அட்டவணை 2 (ஆ)

வேலை செய்வோர் மற்றும் வேலையற்றோர்

| கல்வி மட்டம் | 1981 வேலை செய்வோர் | | 1981 வேலையற்றோர் | | 1985/86 வேலை செய்வோர் | | 1985/86 வேலையற்றோர் | | 1992* வேலை செய்வோர் | | 1992* வேலையற்றோர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பள்ளி செல்லாதோர் | 8.5 | 23.7 | 5.4 | 3.8 | 7.1 | 20.6 | 4.9 | 4.0 | 4.4 | 9.9 | 0.1 | 0.8 |
| ஆண்டுகள் 1 – 5 (ஆரம்ப கல்வி) | 24.6 | 22.6 | 9.4 | 4.9 | 28.9 | 27.2 | 17.9 | 10.8 | 25.5 | 24.7 | 6.3 | 6.8 |
| ஆண்டுகள் 6–10 (நடுநிலைக் கல்வி) | 55.5 | 34.1 | 72.7 | 67.6 | 45.8 | 31.2 | 52.3 | 40.9 | 48.0 | 36.4 | 63.6 | 41.9 |
| க.பொ.த. (சா.த.) | 7.8 | 10.8 | 9.3 | 19.5 | 14.1 | 14.5 | 19.6 | 30.6 | 15.8 | 16.1 | 21.4 | 30.1 |
| க.பொ.த. (உ.த.) | 1.5 | 4.1 | 1.8 | 3.3 | 2.6 | 4.1 | 4.9 | 12.8 | 6.2 | 12.8 | 8.6 | 20.5 |
| பட்டமும் அதற்கு மேலும் | 1.3 | 2.4 | 0.4 | 0.6 | 1.5 | 2.3 | 0.5 | 0.8 | | | | |
| குறிக்கப்படாதது | 0.7 | 2.3 | 0.5 | 0.4 | - | - | - | - | | | | |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

* வட, கீழ் மாகாணங்கள் தவிர

மூலம்: தொகைமதிப்பு 1981,
ஊழியர் படை மற்றும் சமூக-பொருளாதார ஆய்வுகள்

அட்டவணை 3

ஊழியர் படை பங்கேற்பு விகிதம் , 1971, 1980/81, 1985/86

| | ஆண் 1971 | ஆண் 1980/81 | ஆண் 1985/86 | பெண் 1971 | பெண் 1980/81 | பெண் 1985/86 |
|---|---|---|---|---|---|---|
| பள்ளி செல்லாதோர் | 69.5 | 64.4 | 70.7 | 30.4 | 28.9 | 38.3 |
| தரங்கள் 1 – 4 | 96.8 | 64.3 | 64.1 | 27.5 | 21.4 | 29.3 |
| தரங்கள் 5 – 10 | 51.5 | 66.7 | 53.5 | 17.9 | 19.4 | 25.4 |
| சா.த.சித்தி | 62.0 | 73.8 | 79.2 | 54.2 | 43.0 | 46.1 |
| உ.த.சித்தி | 75.4 | 69.9 | 83.1 | 78.6 | 56.6 | 67.4 |
| பட்டம் | 86.2 | 95.7 | 91.9 | 69.2 | 85.7 | 86.7 |
| மொத்தம் | 68.4 | 66.8 | 61.2 | 26.0 | 25.8 | 32.5 |

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிவர திணைக்களம்

எந்த ஒரு வளர்முக நாடும் தனது எதிர்கால நலனை முன்னிட்டு மேற்கொள்ளக்கூடிய மிக முக்கியமான ஒரு முதலீடு பெண் பிள்ளைகளுக்கு கல்வியூட்டுவதாகும். நீண்ட காலத்தில், போஷாக்கிலிருந்து குடும்பத்திட்டமிடல் வரையில், சிறுவர் ஆரோக்கியத்திலுருந்து மகளிர் உரிமைகள் வரையில், அநேகமாக முன்னேற்றத்தின் அனைத்து அம்சங்களும், ஒரு நாடு அதன் பெண் பிள்ளைகளுக்கு கல்வியூட்டி வருகிறதா இல்லையா என்பதைப் பொறுத்தே நிர்ணயிக்கப்படுகிறது. கல்வி ஒரு பெண்ணுக்கு அதிக விழிப்புணர்வையும், அதிக தெரிவுகளையும், உயர் அளவில் தன்னம்பிக்கையையும் வழங்க முடியும். தனது கணவனின் பார்வையில் குடும்பத்தின் பார்வையில் சமூகத்தின் பார்வையில், கல்வி ஒரு பெண்ணின் மதிப்பையும் அந்தஸ்தையும் உயர்த்துகிறது. குடும்பத்திட்டமிடல் ஒரு பெண்ணுக்கு அதிக வாய்ப்புக்களையும், கூடிய நேரத்தையும், நல்ல ஆரோக்கியத்தையும் வழங்க முடியும்.

– யுனிசெப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து வந்துள்ளன என்பது மிகத் தெளிவாகும் (ஜயவீர, 1989). உலக வங்கி/சர்வதேச நாணய நிதிய கூட்டினால், திணிக்கப்பட்டிருக்கும் சீராக்கல் கொள்கைகளின் சுமைகளில் பெரும் பகுதியை மகளிர் ஏற்க வேண்டியுள்ளது. 1980 களில் நாட்டில் நிலவி வந்த வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் விலை வாசி உயர்வும் பெருந்தொகையான பெண்களை பொருளாதாரத்தின் முறை சாராத் துறைகளில் உறுதியற்ற தொழில்களுக்குள் தள்ளிவிட்டன. மேலும், பெருந்தொகையானோர் செல்வ வளம் மிக்க நாடுகளை நோக்கி வீட்டுப் பணிப்பெண்களாக குடிபெயர்ந்து சென்றுள்ளார்கள். அவர்கள் சொல்லொணாத் துயர்களையும் பல கசப்பான அனுபவங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நாட்டின் பொருளாதாரம் 1977 இன் பின்னர் தாராளமயமாக்கப்பட்டதனையடுத்து பெருந்தொகையான உள்ளூர் கைத்தொழில்கள் வீழ்ச்சியடைந்தன. கைத்தறி மற்றும் ஏனைய கிராமிய கைத்தொழில்கள் என்பவற்றில் இதுவரை காலமும் வேலை செய்து வந்த ஆயிரக்கணக்கான மகளிர் இதன் விளைவாகத் தொழில்களை இழந்தனர். மாற்று வேலை வாய்ப்புக்கள் மிகக் குறைந்த அளவிலேயே கிடைக்கக் கூடியதாக இருந்தன.

1980 களில் செயற்படுத்தப்பட்ட முன்னணி அபிவிருத்தசிச் செய் திட்டங்கள் தேர்ச்சி குறைந்த, மதிப்புக் குறைந்த தொழில்களில் மகளிர் ஊழியத்துக்கான கேள்வியை அதிகரிக்கச் செய்திருந்தன. துரிதப் படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சிறிய குடும்பப் பண்ணைகளில் மகளிரின் வேலைப்பளு அதிகரித்தது. ஆனால், திட்டமிடுவோர் அவர்களை வெறுமனே குடும்பப் பெண்களாக மட்டுமே கருதி வந்தமையின் விளைவாக விவசாய நவீனமயமாக்கலின் அனுகூலங்களும் பாரம்பரிய காணி உரிமைகளும் அவர்களுக்கு மறுக்கப்பட்டன.

இலங்கையின் தற்போதைய பிரதான அபிவிருத்தி உத்தி, புதிதாக தொழில் வளர்ச்சி கண்ட நாடு என்ற அந்தஸ்தினை (NIE Status) சாதித்துக் கொள்வதற்காக ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில்மயமாக்கலை எடுத்து வருவதாகும். இத்தகைய கைத் தொழில்மயமாக்கல் உத்தி பெருமளவுக்கு மகளிரையே நம்பி யுள்ளது. இந்த நவீன கைததொழில் களில் ஊழியர் படையில் 80 சதவீதத்துக்கு மேற்பட்டவர்கள் மகளிராவர். ஆனால், பாரிய பல்தேசிய நிறுவனங்கள் தமது உற்பத்திச் செலவை குறைத்துக்கொள்ளும் பொருட்டு ஊழியச் செறிவு மிகுந்த துறைகளில் மகளிரை ஒரு மலிவான ஊழிய மூலமாகப் பயன்படுத்தி வருகின்றன. மூன்று ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களுக்குள் அமைந்திருக்கும் தொழிற்சாலை களிலும் அவற்றுக்கு வெளியே அமைந்திருக்கும் பல தொழிற்சாலை களிலும் திட்டமிடுவோர் மலிவான மகளிர் ஊழியத்தின் ஒப்பீட்டு ரீதியான அனுகூல நிலையை நன்கு உணர்ந்து கொண்டுள்ளனர். அதன் காரணமாக, நடுநிலைக் கல்வி பெற்றுள்ள ஆயிரக் கணக்கான மகளிரை ஓரளவுக்குத் தேர்ச்சி தேவைப்படும் உற்பத்தி இணைப்பு வேலைகளில்அவர்கள் அமர்த்தியுள்ளார்கள். தமது திறன் களை மேம்படுத்திக் கொள்வதற்கோ அல்லது தொழில் முன்னேற்றத்தை பெற்றுக் கொள்வதற்கோ இந்த மகளிருக்கு எத்தகைய வாய்ப்புக்களும் அளிக்கப் படுவதில்லை. கைத்தொழில் அமைதியின் நலனை முன்னிட்டு தொழில் சட்டங்கள் மேலோட்டமான முறையில் அமுல் செய்யப்பட்டு வருவதுடன், தொழிற் சங்க நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கப் படுவதில்லை. தற்பொழுது காளான்கள் போல பெருகி வரும் உப ஒப்பந்த அடிப்படையிலான கைத்தொழில்களில் தொழில் முயற்சியாளர்கள் ஸ்தாபித செலவுகளை குறைத்துக் கொண்டுள்ள துடன், உப ஒப்பந்தக்காரர்கள்

அட்டவணை 4 (அ)

பிரதான தொழில் குழுக்களின் அடிப்படையில் வேலை செய்யும் குடித்தொகையினர்

| தொழில்குழு | 1985/86 மொத்தம் | 1985/86 மொத்த பகிர்வு % | 1985/86 ஆண் பகிர்வு % | 1985/86 பெண் பகிர்வு % | 1985/86 மொத்தத்தில் பெண்கள் % | 1990 மொத்தம் | 1990 பகிர்வு % | 1992* மொத்தம் | 1992* பகிர்வு % |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தொழில்சார், தொழில்நுட்ப | 272,890 | 5.3 | 3.8 | 8.7 | 49.6 | 462,939 | 7.8 | 451,772 | 8.7 |
| நிர்வாகம், முகாமையாளர் | 26,398 | 0.5 | 0.7 | 0.1 | 6.9 | 55.164 | 0.9 | 87.614 | 1.7 |
| இலிகிதர் மற்றும் அதனுடன் சம்பந்தப் | 280,503 | 5.5 | 5.9 | 4.6 | 25.3 | 155,991 | 2.6 | 213.515 | 4.1 |
| விற்பனை ஊழியர்கள் | 442,050 | 8.6 | 9.9 | 5.7 | 20.1 | 557,541 | 9.9 | 414,044 | 8.02 |
| சேவை ஊழியர்கள் | 241,501 | 4.7 | 4.2 | 5.9 | 37.7 | | | | |
| விவசாயம், கால்நடை, கடற்றொழில் காட்டுத்தொழில் | 2,438,226 | 47.5 | 44.9 | 53.4 | 33.9 | 1,507,403 | 25.3 | 1,603,551 | 31.1 |
| உற்பத்தி மற்றும் அதனுடன்சம்பந்தப் | 1,420,889 | 27.7 | 30.3 | 21.6 | 23.6 | 855,258 | 14.4 | 855.258 | 16.6 |
| ஆரம்ப தொழில்கள் | | | | | | 2,344,699 | 39.3 | 1,314,199 | 25.5 |
| வகைப்படுத்தப்படாதவை | 9,248 | 0.2 | 0.3 | 0.01 | 3.1 | 20,109 | 0.3 | 219,237 | 4.2 |
| மொத்தம் | 5,131,745 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 5,959,105 | 100.0 | 5,158,978 | 100.0 |

* வட, கீழ் மாகாணங்கள் தவிர

மூலம் : ஊழியர் படை ஆய்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபரிமிதமாக இலாபமீட்டியுள்ளார்கள். துண்டு அடிப்படையில் வழங்கப்பட்டு வரும் குறைந்த பட்ச கூலியை பெற்றுக் கொள்வதற்காக பெருந்தொகையான மகளிர் தமது வீடுகளில் நீண்ட நேரம் உழைத்து வருகின்றனர். அவர்களை இத்தகைய சுரண்டலிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு வழி முறைகள் இல்லை. எனவே, கைத்தொழில்மயமாக்கலை நோக்கிய பெரும் பாய்ச்சலின் அனுகூலங்கள் சமூகத்துக்கிடையே ஏற்றத் தாழ்வான ஒரு முறையில் பகிரப்பட்டிருக்கும் ஒரு நிலைமையே இப்பொழுது நிலவி வருகின்றது.

ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், கொடுகடன் நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், வேலை வாய்ப்பு மற்றும் வருமான உருவாக்கம் என்பவற்றின் மீது கவனம் செலுத்தி வரும் ஏனைய வகைகளைச் சேர்ந்த அபிவிருத்தி ஆதரவு முறைகள் என்பவற்றின் கூறுகளாக இருந்து வரும் சுயதொழில் நிகழ்ச்சித் திட்டங்களில் மகளிருக்கு பாரபட்சம் காட்டப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகிறது. ஐ.நா. பிரகடனம் செய்த மகளிர் தசாப்தம் மகளிரை அபிவிருத்தி நிகழ்வுப் போக்குக்குள் ஒருங்கிணைக்கும் நோக்கத்தினை கொண்டிருந்தது. இக் குறிக்கோளை சாதித்துக் கொள்வதற்காக மகளிருக்கான வருமான உருவாக்க செய்திட்டங்கள் ஊக்குவிக்கப்பட்டன. இது "அபிவிருத்தியில் மகளிர்" என்ற உத்தியை அடிப்படையாகக் கொள்டிருந்தது. எனினும், வளர்ச்சியடைந்த நாடுகளில் உருவாக்கப்பட்ட இந்த சித்தாந்தம் இலங்கை போன்ற நாடுகளில் வாழும் மகளிரை குறைநிரப்பு வருமான உழைப்போராகவே நோக்கியது. ஆனால், யதார்த்தத்தில் இந்த மகளிர் கூட்டு, முதல் நிலை அல்லது தனி வருமான உழைப்போர்களாக இருந்து வருகின்றனர். எனவே, இந்த அபிவிருத்தி உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த மகளிருக்கென குறித்தொதுக்கப்பட்டிருந்த செய் திட்டங்கள், ஒரு பசுமாட்டை அல்லது ஒரு சில கோழிக்குஞ்சுகளை அல்லது ஒரு தையல் இயந்திரத்தை வாங்குவதற்கென கடன்கள் என்ற வடிவில் சிறு தொகை மூல வளங்களையே வழங்கின. அவர்கள் தமது குடும்ப வருமானத்துக்கு குறை நிரப்பு செய்வதற்கு உதவும் நோக்கிலேயே இந்த உதவி வழங்கப்பட்டது. இத்தகைய கொடை உதவி செய்திட்டங்களின் விளைவுகள் குறித்து பல மீளாய்வுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. பயிற்சி, தொழில்நுட்பம், முகாமைத் திறன்கள் மற்றும் சந்தை தகவல் போன்ற உள்ளீட்டுத் தொகுதிகள் அவர்களுக்கு வழங்கப்படாவிட்டால் இந்த மகளிரும்

அட்டவணை 4 (ஆ)

கைத்தொழில் வாரியாக வேலைகளில் ஈடுபட்டுள்ளோர்

| கைத்தொழில்கள் | 1985/86 | | | | | 1990 | | 1992* | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | மொத்தப் பகிர்வில் % | ஆண் பகிர்வு % | பெண் பகிர்வு % | மொத்தத்தில் பேண்கள் % | மொத்தம் | பகிர்வு % | மொத்தம் | பகிர்வு % |
| விவசாயம், காட்டுத்தொழில், மீன்பிடி | 2,530,967 | 49.3 | 47.2 | 54.2 | 33.2 | 2,851,056 | 47.8 | 2,379,889 | 46.1 |
| சுரங்கமகழ்தல், கல்லுடைத்தல் | 66.726 | 1.3 | 1.6 | 0.6 | 12.9 | 161,351 | 2.7 | 52,452 | 1,01 |
| பொருளுற்பத்தி | 648,469 | 12.6 | 10.04 | 18.6 | 44.5 | 865,787 | 14.5 | 635,457 | 12.3 |
| மின்சாரம், வாயு, நீர் | 21,484 | 0.4 | 0.6 | 0.04 | 3.1 | 13,409 | 0.2 | 22,621 | 0.4 |
| கட்டடவாக்கம் | 226,913 | 4.4 | 6.04 | 0.6 | 4.6 | 183,074 | 3.1 | 248,596 | 4.8 |
| மொத்த, சில்லறை வியாபாரிகள் ஹோட்டல்கள் | 513,872 | 10.01 | 11.5 | 6.6 | 20.0 | 509,656 | 8.6 | 530,209 | 10.3 |
| போக்குவரத்து,. களஞ்சியப்படுத்தல் தொடர்பாடல் | 220,025 | 4.3 | 5.9 | 0.5 | 3.2 | 246,781 | 4.1 | 231,536 | 4.5 |
| நிதி, காப்புறுதி | 65,094 | 1.3 | 1.4 | 0.9 | 23.2 | 49,467 | 0.8 | 36,091 | 0.7 |
| சமூக சேவைகள்/தனிப்பட்ட சேவைகள் | 631,408 | 12.3 | 10.6 | 16.3 | 40.1 | 979,496 | 16.4 | 821,449 | 15.9 |
| வகைப்படுத்தப்படாதவை | 206,791 | 4.02 | 5.1 | 1.5 | 11.2 | 99,029 | 1.7 | 200,665 | 3.9 |
| மொத்தம் | 5,131,749 | 100.0 | 100.0 | 100.0 | 30.2 | 5,959,105 | 100.0 | 5,158,978 | 100.0 |

* வட, கீழ் மாகாணங்கள் தவிர

மூலம் : ஊழியர் படை ஆய்வு

அட்டவணை 5

தொழில் அந்தஸ்து

| தொழில் அந்தஸ்து | 1981 ஆ | 1981 பெ | 1985/86 ஆ | 1985/86 பெ | 1990 ஆ | 1990 பெ | 1992[1] ஆ | 1992[1] பெ |
|---|---|---|---|---|---|---|---|---|
| வேலை கொள்வோர் | 2.4 | 1.2 | 3.0 | 0.9 | 4.4 | 1.2 | 1.6 | 0.8 |
| வேதனம் பெறும் ஊழியர்கள் | 62.3 | 79.4 | 58.2[2] | 58.4[2] | 59.5 | 55.6 | 58.7 | 61.2 |
| தமக்காகவே உழைப்போர் | 32.5 | 12.9 | 29.6 | 17.7 | 28.4 | 18.1 | 31.6 | 14.2 |
| வேதனம் பெறாத குடும்ப உழைப்பாளர் | 2.8 | 6.5 | 9.2 | 23.0 | 7.7 | 25.1 | 8.2 | 23.8 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |


1. வட, கீழ் மாகாணங்கள் தவிர
2. ஒழுங்கான வேலை செய்வோர் ஆ 28.5, பெ 29.6
சமயாசமய ஊழியர்கள் ஆ 34.7, பெ 28.9

மூலம் : இலங்கை தொகைமதிப்பு 1981, ஊழியர்படை, சமூக-பொருளாதார ஆய்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய குடும்பங்களும் தொடர்ந்தும் தாழ்ந்த ஒரு பிழைப்பூதிய மட்டத்திலேயே இருந்து வருவார்கள் என்பதனை இந்த ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. இலங்கையை பொறுத்தவரையில், வருமான உருவாக்க நிகழ்ச்சித்திட்டங்களில் பயிற்சி என்பது பெருமளவுக்குப் புறக்கணிக்கப்பட்ட ஓர் அம்சமாக இருந்து வந்துள்ளது. இதன் விளைவாக மகளிருக்கு தமது திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் கிட்டவில்லை. எனவே, நாட்டின் அபிவிருத்தித் திட்டமிடலில் மகளிர் முழுமையாக ஒருங்கிணைக்கப்



படுவதற்கு இந்தக் காரணிகள் இடையூறுகளாக இருந்து வந்துள்ளன. அபிவிருத்தித்திட்டமிடல் மகளிர் தொடர்பான இத்தகைய அணுகு

முறை மேற்கொள்ளப்படுவதற்கு ஆண்/பெண் பாத்திரங்கள் தொடர்பான சில தப்பெண்ணங்களும், தவறான எடுகோள்களும் வழிகோலியுள்ளன. (அ) ஆண் முழுமையாக சம்பாதிப்பவராக இருந்து வருதல்; மற்றும் தங்கியிருக்கும் குடும்பப் பெண்; (ஆ) மகளிரை இரண்டாந்தர அல்லது குறை நிரப்பு சம்பாதிப்பவர்களாகக் கருதுதல்; (இ) ஒவ்வொரு பாலுக்கும் பொருத்தமான தொழில்கள்; (ஈ) மகளிரை அபிவிருத்தியின் முகவர்களாக நோக்காது, சேவைகளின் நுகர்வோர்களாகக் கருதுதல் இத்தகைய தப்பெண்ணங்களும் எடுகோள்களுமாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மகளிர் ஏற்றத்தாழ்வான நியதிகளின் கீழ் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் ஒருங்கிணக்கப்பட்டுள்ளனர். எனவே, இந்தப் பின்னணியில் பின்வரும் வழி முறைகள் மேற் கொள்ளப்படுவது அவசியமாகும்:

(அ) திட்டமிடுவோர் ஆண்/பெண் பாத்திரங்கள் குறித்து கொண்டிருக்கும் எடுகோள்களை மாற்றிக் கொள்ளக்கூடிய விதத்தில் அவர்களுக்கு உணர்வூட்டுவதற்காக முயற்சிகளை மேற்கொள்ளல்.

(ஆ) கல்விக்கும் பொருளாதார திட்டமிடுபவர்களுக்கும் இடையே மிக நெருக்கமான தொடர்புகள் வளர்க்கப்படுதல் வேண்டும்.

(இ) திட்டமிடல் நிகழ்வுப்போக்கில் உள்ளூர் மகளிரின் பங்கேற்புப் பெறப்படுதல். அனைத்து பொருளாதார அபிவிருத்தி திடடங்கள் மற்றும் நிகழ்ச்சித்

( 30 ஆம் பக்கம் பார்க்க)

அட்டவணை 6

இலங்கை நிர்வாக சேவை

| | 1984 மொத்தம் | பெண் | பெண் % | 1988 மொத்தம் | பெண் | பெண் % | 1992 மொத்தம | பெண் | பெண் % |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வகுப்பு I | 162 | 6 | 3.7 | 178 | 12 | 6.7 | 229 | 40 | 17.5 |
| வகுப்பு II தரம் I | 327 | 47 | 14.4 | 274 | 59 | 21.5 | 665 | 73 | 11.0 |
| வகுப்பு II தரம் 2 | 1141 | 138 | 12.1 | 1147 | 185 | 26.5 | 833 | 91 | 10.9 |
| மொத்தம் | 1630 | 191 | 11.7 | 1599 | 256 | 16.0 | 1727 | 204 | 11.8 |

மூலம் : பொது நிர்வாக அமைச்சு

### மகளிரின் பணி

- உலகெங்கிலும் வாழும் மகளிர், சம்பளமற்ற வீட்டு வேலைகள், சிறு அளவிலான வியாபாரம் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் என்பவற்றின் மூலம் தமது சமூகங்களின் செல்வம், சேமநலன் என்பவற்றுக்கு பாரிய பங்களிப்புகளை செய்து வருகின்றனர். பெரும்பாலும், தமது குடும்பங்களின் அனைத்துப் பொறுப்புக்களையும் சுமக்கும் குடும்பத் தலைவர்களாகவும் அவர்கள் இருந்து வருகின்றனர்.
- மகளிர் உலகத் தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பங்கினராக விளங்கிய போதிலும் அவர்கள் ஆண்களைவிட குறைந்த சம்பளம் பெறும் தொழில்களிலே அமர்த்தப்படுகின்றனர். மகளிரின் வீட்டுப் பணிகள் சமூகத்தால் குறைவாக மதிப்பீடு செய்யப்படுவதுபோல், அவர்கள் வெளியுலகத் தொழில்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுதும் அவர்களின் ஆற்றல்கள் குறைவாக மதிக்கப்படுகின்றன.
- ஆண்களுக்கு அளிக்கப்படும் அதே வகையான உதவி, ஊக்கம், உற்சாகம் என்பன அளிக்கப்படும் பட்சத்தில், விவசாய உற்பத்தியில் மகளிர், குறைந்த பட்சம் ஆண்களுக்கு இணையான உற்பத்தித் திறனைப் பெற்றுக் கொள்வார்கள் என்பதனை சாட்சியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.
- மனைவியாகவும் தாயாகவும் மகளிர் குடும்பத்தில் ஆற்றும் பங்கு முழு மனித சமுதாயத்தினதும் நலனுக்கு அத்தியாவசியமானதாக கருதப்பட்டாலும் கூட, அது கொடுப்பனவற்ற, உரிய மதிப்பளிக்கப்படாத பணியாகவே விளங்குகிறது.
- மகளிர் உலக உணவின் அரைவாசியை உற்பத்தி செய்கின்றனர்; எனினும், அவர்களுக்குச் சொந்தமாக நிலம் இல்லை. கடன் வசதிகளைப் பெறுவது கடினம்; விவசாய ஆலோசகர்களாலும் செயற்திட்டங்களாலும் அவர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

மூலம்: உலக மகளிர் அறிக்கை, 1985.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் சூழ்நிலையில் மகளிர்: வட இலங்கை அனுபவம்

பொன்மலர் ராஜேஸ்வரன்

1983 ஆம் ஆண்டு முதல் வடக்கு கிழக்கில் நிலவி வரும் உள்நாட்டு யுத்தம் மக்களின் சமூக பொருளாதார வாழ்க்கையில் மோசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வட-கிழக்கு மாகாண மக்களின் வாழ்வில் எல்லா துறைகளும் கடுமையாக சேதப்படுத்தப் பட்டுள்ளன. 1983ஆம் ஆண்டு ஆரம்பித்த இனக்கலவரத்துடன் இது வரை பெருந்தொகை மக்கள் உயிர் இழந்துள்ளனர். பத்து இலட்சத்துக்கும் அதிகமானோர் இடம் பெயர்ந் துள்ளனர்; அல்லது அகதிகளாக்கப் பட்டுள்ளனர். இவ்வகதிகள் பிரதான மாக தென் இந்தியா, ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா போன்ற நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். பாரிய அளவில் மூளைசாலிகள் வெளி யேற்றம் நடைபெற்றுள்ளது. சுகாதார முறை சீர்குலைந்து, சமூக மனோவியல் பிரச்சினைகள், போஷாக்கின்மை முதலிய புதிய சுகாதாரப் பிரச்சினை கள் தோன்றியுள்ளன. கடந்த 10 வருடங்களில் பெருந்தொகையான இளம் சந்ததியினர் பாடசாலை வாழ்க்கையை இழந்துள்ளனர்.

சமூகத்தின் முதுகெலும்பான விவசாயப் பொருளாதாரம் நாசப் படுத்தப்பட்டுள்ளது. தொடர்ச்சியான சலவரங்களால் வடகிழக்கின் பாரம்பரிய பொருளாதார நடவடிக்கைகள் வீழ்ச்சி கண்டுள்ளன. நிர்வாகச் சேவை சீர்குலைந்து, வங்கி முறை ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

யுத்தம் சகல மட்டத்திலும் பின்தங்கிய பெண்களுக்கு :

- தமது சுய உரிமைகளை அடை யாளம் காணவும்,
- தமதும் தம் குடும்பத்தினரதும் வாழ்க்கையைப் பாதிக்கும் விடயங்களில் தீர்மானம் எடுக்கும் வாய்ப்பினையும்,
- வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நிர்ப்பந்தத்தையும்,
- இறுதியாக தங்கிவாழும் நிலையி லிருந்து மீட்சி பெறவும் (பொதுவாக பெண்கள் வீட்டிற்கு வெளியே செல்லும் பொழுது பாதுகாப்பு நோக்கம் கருதி ஆண்களின் துணையை நாடுதல். இது கலாசார, ஒழுக் கவியல் மரபாகும்) அதிகாரம் அளித்துள்ளது.

யுத்தம் சூழ்நிலையை மாற்றி யுள்ளது :

- ஆண்கள் இயக்கத்தில் சேர்ந் துள்ளனர்.
- அவர்களில் சிலர் பாதுகாப்பு காரணங்களுக்காக வீட்டில் தங்கியுள்ளனர்.
- யுத்தத்தில் பலர் உயிர் இழந் துள்ளனர்.
- அகதிகளாக வெளியேறி யுள்ளனர்.
- தொழில் நிமித்தம் நாட்டை விட்டுப் புலம் பெயர்ந்துள்ளனர்.

இன்று பெண்கள் சமூக, ஒழுக்க வியல் மரபை மாற்றியுள்ளனா:

- அவர்கள் தம் அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொள்ள வீட்டை விட்டு வெளிக் கிளம்புகின்றனர்.

( 21 ஆம் பக்கம் பார்க்க)

**போரும் மகளிரும்**

மகளிருக்கெதிரான வன்முறை பல வடிவங்களைப் பெறுகிறது; குடும்ப வன்முறை, இனப் போராட்டங்கள், போர்கள், அரசியல் வன்முறை, பொருளாதார வன்முறை என இவற்றை விளக்கிச் சொல்லலாம். இவை தவிர, பொருளாதார கட்டமைப்புக்களும் கூட மகளிரை அடக்குமுறைக்கு உள்ளாக்கி வருகின்றன. அடக்குமுறை இயல்புகொண்ட கலாசாரங்கள் மற்றும் இனவாதம், உயர் தொழில்நுட்பத்தின் ஆதிக்கம் நிலவி வரும் அபிவிருத்திச் சித்தாந்தங்களின் பாதகமான விளைவுகள், மற்றும் மக்கள் தமது வாழிடங்களிலிருந்தும் இயற்கை மூலவளங்களிலிருந்தும் பலவந்தமாக வெளியேற்றப்படுதல் போன்றவற்றையும் உள்ளடக்கக்கூடிய விதத்தில் ‘வன்செயல்’ என்ற பதத்துக்கான வரைவிலக்கணத்தை விரிவாக்க வேண்டிய அவசியத்தை நாம் உணர்ந்துள்ளோம்.

போர் தொடர்பான முடிவுகளை எடுப்பதில் மகளிர் எந்த வகையிலும் பங்கேற்பதில்லை; ஆனால், அவர்களே அதனால் அதிகளவில் பாதிக்கப்படுகிறார்கள். போராட்டங்கள் இடம்பெறும்பொழுது தமது குடும்பங்களை அவர்கள் வைத்து, பாதுகாக்கிறார்கள். இவ்விதம் உயிர் வாழ்க்கைக்கான போராட்டத்தில் அவர்கள் ஈடுபட வேண்டியிருப்பதனால் அபிவிருத்தியில் செலவிடுவதற்கு அவர்களிடம் சக்தி இருப்பதில்லை. மகளிர் எப்பொழுதும் சமூக இயக்கங்களின் முதுகெலும்பாக இருந்து வருகின்றனர். ஆனால், அவர்களுடைய பங்களிப்புக்கு ஒரு போதும் உரிய மதிப்பளிக்கப் படுவதில்லை.

நன்றி : Seeds of Peace



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் முன்னேற்றம் : பாகிஸ்தான் சமுதாயத்தின் ஒரு நவீன கூறு

எம்.ஐ.லஷ்கர்

தேசிய மட்டத்தில் மகளிர் பங்களிப்பின் அளவைப் பொறுத்தே ஒரு சமூகத்தின் நாகரீகத் தன்மை நிர்ணயிக்கப்படுகிறது என பொதுவாக கருதப்படுகிறது. நாட்டில் மகளிரின் பங்களிப்பு அதிகரிக்கும் பொழுது அது நாகரீகத்தின் வளர்ச்சியாகக் கருதப் படுகிறது. நவீன சமூகங்களின் சிறப்பம்சம் அவற்றில் மகளிர் எல்லா முக்கிய துறைகளிலும் சேவைகளிலும் பங்கேற்பதாகும். வளர்முக நாடுகளில் எல்லாம் மகளிர் தமது அறிவுசார், பொருள்சார் முயற்சிகளுக்கு மேலும் அணிசேர்க்கும் பதவிகளை வகிக்க பெருமளவில் முன்வருகிறார்கள்.

வளர்முக நாடுகளில் ஒன்றான பாகிஸ்தானில், மகளிர் பாரம்பரிய தொழிற்துறைகளில் மட்டுமன்றி இதுவரை ஆண்களின் ஏகபோகமாகக் கருதப்பட்ட துறைகளிலும் பணியாற்ற பெருமளவில் முன்வந்துள்ளனர். ஆரம்பத்தில் ஆசிரியத் தொழிலில் திரண்டிருந்த அவர்கள் வைத்தியத் துறையின் பரவலாக்கலினால் இன்று வைத்திய தாதி தொழில்களிலும் நுழைந்துள்ளனர். இதுவரை காணப் பட்ட மானசீகத் தடைகள் நீக்கப்பட் டுள்ளமையால் இன்று பாகிஸ்தானிய மகளிர் எல்லாத் தொழிற்துறைகளிலும் இணைந்துள்ளனர். இன்று வழக்கறிஞர் களாக, விஞ்ஞானிகளாக, விவசாய நிபுணர்களாக, பொறியியலாளர்களாக, கட்டடக் கலைஞர்களாக மட்டுமன்றி முகாமை, கணணித் துறைகளிலும் அவர்களைக் காணக்கூடியதாக உள்ளது. ஜெட் விமானிகளாக மகளிர் தொழில் செய்துவரும் நாடுகளில் ஒன்றாக நாம் பாகிஸ்தானைக் காணலாம். பாகிஸ்தானிய நகரங்களில் கார்ச் சாரதிகளில் கணிசமானோர் பெண்களாக இருப்பது வியப்பூட்டும் விடயமல்ல.

தேசிய உற்பத்தியில் தமது பங்களிப்பை வழங்கும் மகளிரின் இந்த முனைப்பு, பெண்மணி ஒருவர் நாட்டுக்கு தலைமை தாங்க வாய்ப்பு கிடைத்ததன் மூலம் புது உத்வேகம் பெற்றுள்ளது. பாகிஸ்தானின் நீண்டகால இராணுவ ஆட்சிக்குப் பின்னர் மேற்கத்திய கல்வியைப் பெற்ற தாராண்மைவாத ஜனநாயகவாதி என்ற வகையில் திருமதி பூட்டோ பொதுவாக மகளிருக்கும் - குறிப்பாக பெண்ணியல்வாதிகளுக்கும்- ஒரு முன்மாதிரியாக இருந்து வருகிறார். சந்தர்ப்பவசமாக பங்காளதேஷ், இலங்கை போன்ற பெண் பிரதம மந்திரிகளை உருவாக்கிய நாடுகளுக்கு சமமான ஒரு தென்னாசிய நாடாகவும் அவர் பாகிஸ்தானை மிளிரச் செய்துள்ளார். ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பெண்மணி யொருவரை கொண்ட அரசாங்கம் எடுத்த முதல் முயற்சி, பல்வேறு தேசிய நடவடிக்கைகளில் வரையறை என்ற போர்வையில் இராணுவ நிர்வாகம் மகளிரின் கால்களுக்கு இட்ட விலங்குகளை அகற்ற எடுத்த முயற்சிகளாகும்.

இம்முயற்சிகளில் முக்கியமானது பாராளுமன்றத்தின் கீழ் சபையில் மகளிருக்கான விசேட பிரதிநிதித்து வத்தை மீண்டும் ஏற்படுத்துவதாகும். 1973ஆம் ஆண்டின் அரசியலமைப்பு தேசிய அசெம்பிளியில் பெண்களுக்கு 20 விசேட ஆசனங்களையும், நான்கு மாகாண அரசியலமைப்புகளிலும் இரு தவணைகளில் மொத்தம் 23 ஆசனங்களையும் பெற்றுக் கொடுத்தது. இடைக்காலப் பிரிவில் இராணுவ ஆட்சி பதவிக்கு வந்தமையால் இரண்டாம் தவணை நடைபெறவில்லை. இராணுவச் சட்ட நிர்வாகி ஜெனரல் ஸியாஹுல் ஹக்கின் இறுதிக்காலப் பிரிவில் கட்சிகள்அற்ற தேர்தல் முறையின் கீழ் அமைக்கப்பட்ட பாராளுமன்றத்தின் இறுதித் தவணையில் அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களுடன் மாற்று அட்டவணையின் கீழ் மகளிருக்கு விசேட ஆசனங்கள் வழங்கப்பட்டன. அக்காலப் பிரிவின் மறைவுக்குப் பின்னர் தற்சமயம் பாராளுமன்றத்தில் மகளிருக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்தில் இவ்வாசனங்களை நிரப்பும் முகமாக எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் அரசியலமைப்பில் மாற்றஞ் செய்ய திருமதி பெனாசிர் பூட்டோவின் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்ட போதும் அவை துரித பலனை அளிக்கவில்லை.

இரண்டாவதாக, புகழ்பெற்ற சமூக சேவையாளர் பேகம் ஸாரி ஸப்ராஸ் அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்ட மகளிர் அந்தஸ்து பற்றிய ஆணைக்குழுவின் சிபார்சுகள் புறக்கணிக்கப்பட்டது மட்டுமன்றி, 1980 களில் இராணுவ ஆட்சி அவற்றின் பிரசுரத்துக்கு தடை விதித்தது. தற்சமயம் பெனாசிர் பூட்டோ அரசாங்கத்தால் அவை தோண்டி எடுக்கப்பட்டு பிரசுரிக்கப்பட் டுள்ளதுடன், புது யோசனைகள் மேலதிகமாக புகுத்தப்பட்டு படிப்படியாக அமுலுக்கு கொண்டு வரப்படுகின்றன.

இராணுவ ஆட்சிக் காலத்தில் மகளிர் மீது விதிக்கப்பட்ட வரை யறைகள் சிலசமயம் சமயச் சட்டங்களின் வியாக்கியானங்களுக்கு உட்படுத்தப்பட்டன. இது தேசிய வாழ்வில் உண்மையான பங்களிப்பை விரும்பும் மகளிருக்கு ஆத்திரமூட்டுவ தாகவும் வெறுப்பூட்டுவதாகவும் அமைந்தது. ஒரு வரையறையின் படி பெண் விளையாட்டு வீரர்கள், கோஷ்டிகள் தேசிய, சர்வதேச போட்டிகளில் பங்கு கொள்ளாமல் தடுக்கப்பட்டன. பெனாசிர் பூட்டோ அரசாங்கம் இன்று இவ் வரையறை களை வாபஸ் பெற்றுள்ளதுடன், பல்வேறு மகளிர் விளையாட்டு கோஷ்டிகள் தேசிய, சர்வதேச போட்டிகளில் பங்குகொள்ளத் தயாராகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிருக்கு நீதி வழங்கும் பொருட்டு பல நிர்வாக முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. பாரம்பரிய நிதி-நிர்வாக முறைகளின் கீழ் இத்தகைய நியாயங்களை பெறமுடியாது. ஏனெனில், அவர்களின் கீழைத்தேய பாரம்பரிய வழக்கங்களின் படி மகளிர் தமக்கு இழைக்கப்படும் பல்வேறு வகையான அநீதங்கள், குற்றங்கள் பற்றி ஆண் ஆதிக்கத்தின் கீழுள்ள பொலிசாருக்கு முறைப்பாடு செய்ய முடியாது. இத்தகைய விடயங்கள் அதிகரித்து வருவதைக் கண்ட பெனாசிர் அரசாங்கம் பெண் பொலிசாரைக் கொண்ட தனியான பொலிஸ் நிலையங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தது. இதுவரை எல்லா பிரதான நகரங்களிலும் பெண் பொலிஸ் நிலையங்கள் நிறுவப் பட்டுள்ளன. இப் பொலிஸ் நிலையங்கள் பொதுவாக பெண்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளமையால் ஏனைய எல்லா நகரங்களிலும் இவை நிறுவப்பட வேண்டும் என்ற கோஷம் நாடு பூராவும ஒலித்து வருகிறது.

உயர் நீதிமன்றங்கள் உட்பட எல்லா மட்டத்திலுமான நியாய சபைகளிலும் மகளிரை நீதிபதிகளாக நியமிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதன்படி, பல்வேறு நீதிமன்றங்களில் இன்று பெண் நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந் நடவடிக்கைகளால் இன்று சட்டத் தொழில் துறையில் பெருமளவு ஈடுபட்டுள்ள மகளிர் வழக்கறிஞர்கள் தமது சட்டப்பயிற்சியில் பாரியதொரு நோக்கெல்லையைக் காண்கின்றனர். அவர்கள் இதுவரை ஆண்கள் ஆதிக்கத்திற்கு உட்பட்ட நீதித் துறையின் சிவில், குற்றவியல் சட்டத் துறைகளில் தமது வாழ்வுக்காக போராடி வந்துள்ளனர். இளம் பெண் பட்டதாரிகளை இத்துறை பெருமளவு ஈர்த்துள்ளமையால் அவர்கள் நாட்டின் சட்டக் கல்லூரிகளை நாடிச் செல்வது அதிகரித்த வண்ணம் உள்ளது. தனியார் துறையிலும் கூட சட்ட மாணவிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமுகமாக சட்டக் கல்லூரிகள் காளான்கள் போல் பெருகி வருகின்றன.

பொதுவாக மகளிர் நிலை உயர்த்தப்பட வேண்டும் என்ற ஏகோபித்த கருத்துக்கு ஏற்ப, அரசாங்கம் சமூக சேவைகளிலும் பெண்கள் ஈடுபட வழிவகுத்துள்ளது. அரசாங்கம் தற்சமயம் அமுல்படுத்தும் சமூக நடவடிக்கைத் திட்டம் மூலம் பெண்களின் நிலையை உயர்த்தும் நோக்கத்துடன் படிப்பறிவை அதிகரிக்கவும், போஷாக்கு, சுகாதார நலன்களைப் பேணவும் அடிப்படை சமூக-பொருளாதார தேவைகளை பெற்றுக் கொள்ளவும் வழிவகுத் துள்ளது. இத்திட்டத்தின் பிரதான குறிக்கோள் பாலர் கல்வியாகும்; இதில் குறிப்பாக கிராமப்புற பெண் பிள்ளைகள் மீது கவனம் செலுத்தப் பட்டுள்ளது. இச் செய்திட்டம் அமுல் நடத்தப்பட்ட பின்னர் பாலர் பாடசாலைகளில் பெண் பிள்ளைகளின் பங்களிப்பு 53 வீதத்திலிருந்து 81 வீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளதுடன் வயது வந்த பெண்கள் கல்வி 25% இலிருந்து 40 வீதமாக உயர்ந்துள்ளது. பெண் பிள்ளைகளுக்கான புது ஆரம்ப பாடசாலைகள் மற்றும் தற்போதைய பாடசாலைகளில் வகுப்பறை வசதிகளை அதிகரித்தல் என்பன மூலம் 3.4 மில்லியன் வெற்றிடங்களை ஏற்படுத்தி அவர்களை பாடசாலை களுக்கு அனுமதிக்கும் அளவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

சுகாதாரத் துறையில், குழந்தை மரணவீதத்தை ஆயிரம் பிறப்புக்களுக்கு 86 என்ற நிலையிலிருந்து 65 ஆகவும், மகப்பேற்று தாய் மரணத்தை ஒரு இலட்சம் பிற்ப்புக் களுக்கு 300 இலிருந்து 150 ஆகவும் குறைப்பதற்கும், மகளிர் ஆயுட்காலத்தை 61.2 வருடங்களிலிருந்து 63.3 வருடங்களாக அதிகரிக்கவும் எதிர்பார்க்கப் படுகிறது. குடிநீர் தட்டுப்பாடு காரணமாக இன்று பாகிஸ்தானிய கிராமிய பெண்கள் நாள்தோறும் வெகு

### தெற்காசிய மகளிர் எழுச்சி

பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான, இலங்கை போன்ற தென்னாசிய நாடுகளில் சமூக பொருளாதாரப் புரட்சி உத்வேகம் பெற்றுள்ளது. மகளிர் பெருமளவில் தமது பாரம்பரிய வீட்டு, வெளிக்கள வேலைகளைத்துறந்து ஊழியச் சந்தைக்குச் செல்கின்றனர். சம்பளம் பெறும், ஊழியர்படையில் பெண்களின் விகிதாசாரம் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் வேகமாக அதிகரித்துள்ளது.

- பங்களாதேஷில் கடந்த தசாப்தத்தில் ஊழியர் படையில் சேரும் மகளிர் தொகை வருடத்திற்கு 7.5 சதவீதமாக அதிகரித்துள்ளது. பெண்கள் குடும்பத்திற்கு தலைமை தாங்கும் எண்ணிக்கை அதிகரிப்பு (விதவைகள், விவாகரதது பெற்றோர், பிரிந்தோர்) கிராமிய வறுமை அதிகரிப்பு, பாரம்பரிய ஒருமைப்பாடடு கட்டமைப்பு பலவீனமுறுதல் ஆகியன இடம் பெற்று வந்துள்ளது. நகரமயமாக்கல், ஏற்றுமதிக் கைத்தொழில்களின் அபிவிருத்தி மற்றும் நிர்மாணம் போன்ற துறைகளும் அரசாங்க ஊக்குவிப்புகளும் பெண் தொழிலாளர்களின் தேவையை அதிகரிக்கச் செய்துள்ளன.

- இலங்கையில் பொருளாதார ரீதியில் செயலூக்கமுள்ள ஒன்றரை மில்லியன் பெண்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமான தொகையினர் பயிற்றப்படாத அல்லது ஓரளவுக்கு பயிற்றப்பட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். 99.8 வீதமான மகளிர், பல்வேறு தொழிற்பயிற்சி நிலையங்களில் தையல்பயிற்சி பாடநெறிகளில் பயின்று வருகின்றனர். அவர்கள் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களிலுள்ள ஆடைத்தயாரிப்புத் தொழிற்சாலைகள், கைத்தொழில்கள் என்பவற்றிற்குத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்கின்றனர். அத்தோடு பொதுவான கல்வி, பயிற்சித்திட்டங்களில் உட்புக அவர்களுக்கு சம வாய்ப்புகளும் இருக்கின்றன. ஏற்றுக்கொள்ளத்தக்க சில தொழில்களில் அவர்கள் விரும்பி வரவேற்கப்படுகின்றனர்.

- பாகிஸ்தானின் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களின் 20,000 பட்டதாரிகளில் மகளிர் ஒரு வீதத்தினருக்கும் குறைவானவர்களாக இருப்பதுடன், இந்தியாவின் பல்தொழில்நுட்ப நிலையங்களில் 8.3 சதவீதமானோர் மகளிராவர். தொழிலாளர்களில் ஆண்களைவிட பெண்கள் உயர்மட்டக் கல்வி அறிவைப் பெற்று விளங்குகின்றனர்; இருப்பினும், அவர்கள் தொடர்ந்து குறைந்த வேலைவாய்ப்புக்களையும், பயிற்சியையும் குறைந்த சம்பளத்தையும் பெற்று வருகின்றனர். பெரும்பாலும் தற்காலிக தொழில்களையே செய்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைவிலிருந்து நீரைக் கொண்டு வர வேண்டியுள்ளது. கிராமங்களின் குடிநீர் வழங்கலை முன்னேற்றுவதன் மூலம் அவர்களின் இத்துன்பம் குறைக்கப்படும். நீர் வழங்கலைப் பொறுத்தவரை, இன்று நாட்டில் 47% வீதம் மட்டுமே பூர்த்தி செய்யப் படுகிறது; 1997-98 இறுதியில் இது 70 சதவீதமாக உயர்த்தப்படும்.

சமூக நடவடிக்கை திட்டக் காலத்தின் இறுதியில் குடும்பத்திட்டச் சேவைகள் நகர்ப்புறங்களில் 100 வீதமும், கிராமப்புறங்களில் 70 வீதமும் பூர்த்தி செய்யப்படும். உயர்ந்து காணப்படும் கிராமிய இலக்குகளை நோக்கமாகக் கொண்ட புதுத் திட்டத்தின் கீழ் 25 வயதுக்கு மேற்பட்ட 12,000 உள்ளூர் மகளிர் குடும்ப நலச் சேவையாளர்கள் உயர்நிலை பள்ளிகளில் பயிற்றுவிக்கப்பட்டு 2,000 அல்லது அதற்கு மேற்பட்ட சனத்தொகை கொண்ட கிராமங்களில் சேவையாற்ற அமர்த்தப்படுவர். இவைகள் யாவும் பாகிஸ்தான் மகளிரின் அந்தஸ்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துவதுடன், அவர்கள் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பெண்களின் அந்தஸ்தைப் பெறவும் வழிவகுக்கும்.

( 18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

- கல்வி கற்கப் புறப்பட்டுள்ளனர்.
- படைகளிடமிருந்து ஆண்களை பாதுகாக்க வெளியே வந்துள்ளனர்.
- நிவாரணப் பொருட்களைப் பெறுவதற்கு வெளியே செல்கின்றனர்.
- அரசாங்க அதிகாரிகள், இயக்கத்தினர், படையினரின் சட்ட திட்டங்களை கடந்து கொழும்பு வரை சென்று வருகின்றனர். கொழும்பிலும் நாட்டிற்கு வெளியேயும் வாழும் தமது குடும்ப அங்கத்தவர்களுடன் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளும் தேவை அவர்களுக்கு உண்டு.

### மகளிருக்கான பீஜிங் மாநாடு

இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் ஏற்படும் சிசு மரணங்களில் சுமார் ஆறில் ஒரு பங்கு புறக்கணிப்பினாலும், பாரபட்சத்தினாலுமே ஏற்படுகின்றது என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. உலகில் வாழும் எழுத்தறிவற்றவர்களில் சுமார் மூன்றிலிரண்டு பகுதியை மகளிர் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். மேலும், ஆண்களிலும் பார்க்க குறைவான ஒரு வேகத்திலேயே அவர்கள் எழுத்தறிவைப் பெற்று வருகிறார்கள். எய்ட்ஸ் ஆட்கொல்லி நோயை எடுத்து வரக்கூடிய எச்.ஐ.வி. வைரஸினால் பாதிக்கப்பட்டிருக்கும் வயது வந்தவர்களில் 40 சதவீதமானவர்கள் மகளிராவர். 2000 ஆவது ஆண்டளவில் சுமார் 1 கோடியே 30 இலட்சம் மகளிர் இந்த வைரஸினால் பீடிக்கப்பட்டிருப்பார்கள் என்றும், 40 இலட்சம் பேர் இதன் விளைவாக மரணமடைவார்கள் என்றும் உலக சுகாதார நிறுவன மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. மகளிர் உரிமைகள் தொடர்பான பல்வேறு சாசனங்கள், உலக மாநாடுகள் என்பவற்றுக்கு மத்தியிலும் கூட, இன்னமும் உலகெங்கிலும் வாழ்ந்து வரும் பல இலட்சக் கணக்கான மகளிர் வன்முறை, கற்பழிப்பு, சித்திரவதை, அவமதிப்பு மற்றும் கடுந்துன்பம் என்பவற்றுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றார்கள். ஆண்களினால் மகளிர் துன்புறுத்தப்படுவது ஒரு தொடர் கதையாக இடம் பெற்று வருகிறது. இந்தப் பின்புலத்தில், மகளிர் தொடர்பான நான்காவது உலக மாநாடு 1995 செப்டம்பெர் 4 – 15 இல் சீனாவில் பெய்ஜிங்கில் நடைபெறவுள்ளது. இந்த மாநாடு முக்கியமாக பின்வருவனவற்றில் கவனம் செலுத்தும்:

- ❑ பால் அடிப்படையிலான பாரபட்சத்தை ஒழிப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவதும், 21 ஆவது நூற்றாண்டுக்குள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான புதிய தோழமையுணர்வினை கட்டியெழுப்புவதும்).
- ❑ மகளிர் தொடர்பான 1985 நைரோபி மாநாட்டின் கருப்பொருளான "சமத்துவம், அபிவிருத்தி மற்றும் சமாதானம்" என்பன தொடர்பாக ஒரு தசாப்த காலத்தில் ஏற்பட்டு வந்துள்ள முன்னேற்றங்களை மதிப்பீடு செய்தல்.
- ❑ சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, குடும்ப வாழ்க்கை, அரசியல் மற்றும் மனித உரிமைகள் போன்ற துறைகளில் மகளிர் ஈட்டியுள்ள சாதனைகளை மீளாய்வு செய்தல்.
- ❑ மகளிர் முன்னேற்றம் எதிர்கொண்டு வரும் இடையூறுகளை கண்டறிவதற்கும், சிபார்சுகளைச் செய்வதற்கும் நடவடிக்கைத் திட்டமொன்றைப் பின்பற்றுதல். கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய முக்கிய துறைகள் : அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளல், மகளிர் உரிமைகள் தொடர்பான அர்ப்பணம், வறுமை, கல்வி, சுகாதாரம், மகளிருக்கு எதிரான வன்செயல்கள், ஆயுதப் போராட்டங்களினதும் ஏனைய வகைகளைச் சேர்ந்த போராட்டங்களினதும் தாக்கங்கள், பொருளாதார பங்கேற்பு, மகளிர் மேம்பாட்டுக்கான பொறிமுறைகள் போதிய அளவில் இல்லாமை. தொடர்பு சாதனங்கள், சுற்றுச் சூழல் மற்றும் அபிவிருத்தி.

மூலம்: மகளிலர், பொதுத்தகவல் திணைக்களம், ஐ.நா. மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறை மற்றும் பால் அடிப்படையில் வேலையின்மை

| துறை | 1973 | 1978/79 | 1981/82 | 1985/86 | 1993 |
|---|---|---|---|---|---|
| **நகரம்** | | | | | |
| மொத்தம் | 32.4 | 20.7 | 14.2 | 19.5 | 14.5 |
| ஆண் | 24.1 | 12.4 | 10.1 | 15.8 | 12.1 |
| பெண் | 55.0 | 37.7 | 25.1 | 27.9 | 20.3 |
| **கிராமம்** | | | | | |
| மொத்தம் | 24.5 | 14.6 | 12.0 | 13.2 | 13.7 |
| ஆண் | 18.3 | 8.7 | 7.3 | 9.5 | 9.7 |
| பெண் | 42.4 | 26.3 | 25.3 | 21.3 | 21.1 |
| **தோட்டம்** | | | | | |
| மொத்தம் | 12.0 | 5.6 | 5.0 | 7.8 | – |
| ஆண் | 14.3 | 5.7 | 6.4 | 9.0 | – |
| பெண் | 9.4 | 5.4 | 3.6 | 6.4 | – |
| **மொத்தம்** | | | | | |
| மொத்தம் | 24.0 | 14.7 | 11.7 | 17.1 | 13.8 |
| ஆண் | 18.9 | 9.2 | 7.8 | 10.8 | 10.2 |
| பெண் | 36.3 | 24.9 | 21.3 | 20.8 | 21.0 |

மூலம் : சுகாதார மகளிர் விவகார அமைச்சு

## துறை மற்றும் பால் அடிப்படையில் எழுத்தறிவு


| துறை | தொகை மதிப்பு 1946 | தொகை மதிப்பு 1971 | நுநி & சபொ ஆய்வு 1981/82 | ஊழியர்படை ஆய்வு 1985/86 | ஊப & சபொ ஆய்வு 1992 |
|---|---|---|---|---|---|
| **முழு நாடும்** | | | | | |
| மொத்தம் | 62.8 | 78.5 | 85.4 | 84.2 | 86.9 |
| ஆண் | 76.5 | 85.6 | 89.9 | 88.6 | 90.0 |
| பெண் | 46.2 | 70.9 | 81.1 | 80.0 | 83.8 |
| **நகரம்** | | | | | |
| மொத்தம் | 76.2 | 86.2 | 89.7 | 89.1 | 92.3 |
| ஆண் | 84.5 | 90.3 | 92.9 | 92.4 | 94.0 |
| பெண் | 65.7 | 81.5 | 89.8 | 86.1 | 90.6 |
| **கிராமம்** | | | | | |
| மொத்தம் | 60.1 | 76.2 | 86.0 | 84.6 | 87.1 |
| ஆண் | 74.7 | 84.1 | 90.1 | 88.5 | 89.9 |
| பெண் | 43.0 | 67.9 | 82.1 | 30.7 | 84.3 |
| **தோட்டம்** | | | | | |
| மொத்தம் | – | – | 64.8 | 59.4 | 66.1 |
| ஆண் | – | – | 78.0 | 74.5 | 79.0 |
| பெண் | – | – | 52.6 | 45.9 | 52.8 |

1- குடித்தொகை 5+ வருடங்கள் 2 - தோட்டததுறை கிராமும் துறியில் உள்ளடக்கப்பட்டுள்ளது

நுநி & சபொ நுகர்வோர் நிதி, சமூக, பொருளாதார ஆய்வு
ஊப & சபொ ஊழியர் படை, சமூக பொருளாதார ஆய்வு


# இன்றைய மகளிர்

முகாமையில் மகளிர் நிலை





### தொழில் முயற்சியாளர்

பல நாடுகளில், பொதுவாக தேசிய பொருளாதார புள்ளிவிவரங்களில் கணக்கிடப்படாத (பொருட்களிலான சிறு அளவிலான வியாபாரம் மற்றும் சேவைகள் போன்றவற்றை உள்ளடக்கிய) முறைசாராத் துறையில் மகளிரின் ஆதிக்கமே நிலவி வருகிறது. பல மூன்றாவது மண்டல நாடுகளில் முறைசாராத் துறை தேசிய செல்வத்தில் சுமார் மூன்றிலொரு பாகத்தினை உருவாக்குகிறது.




வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள மகளிர் % மூலம் : சதொதா




### தொழில் அந்தஸ்து

| தொழில் | 1981 ஆண் | 1981 பெண் | 1985/86 ஆண் | 1985/86 பெண் | 1990 ஆண் | 1990 பெண் | 1992 ஆண் | 1992 பெண் | 1993* ஆண் | 1993* பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வேலை கொள்வோர் | 2.4 | 1.2 | 3.0 | 0.9 | 4.4 | 1.2 | 1.6 | 0.8 | 3.3 | 1.6 |
| வேதனம் பெறும் ஊழியர் | 62.3 | 79.4 | 58.2 | 58.4 | 59.5 | 55.6 | 58.7 | 61.2 | 57.8 | 67.8 |
| சொந்தமாக உழைப்பவர் | 32.5 | 12.9 | 29.6 | 17.7 | 28.4 | 18.1 | 31.6 | 14.2 | 34.0 | 16.8 |
| வேதனம் பெறாத குடும்ப உழைப்பாளி | 2.8 | 6.5 | 9.2 | 23.0 | 7.7 | 25.1 | 8.2 | 23.8 | 5.0 | 13.9 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

1992, 1993 தரவுகள் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் நீங்கலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலை என்ன ?




### உயர் கல்வித்துறையில் மகளிர்

| வருடம் | பல்கலைக் கழக விரிவிரையாளர்களாக மகளிர் | மகளிர் பேராசிரியர்கள் |
|---|---|---|
| 1973 | 16.6 | 2.4 |
| 1984 | 24.5 | 8.3 |
| 1990 | 31.8 | 9.4 |

மூலம்: மகளிர் ஆய்வு மையம், கொழும்பு

### ஆய்வு நிறுவனங்களில் மகளிர்

| நிறுவனத்தின் பெயர் | மகளிர் எண்ணிக்கை | மகளிர் % | மொத்த ஆண்/பெண் |
|---|---|---|---|
| தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் | 25 | 30.12 | 83 |
| தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் | 9 | 25.71 | 35 |
| இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் | 10 | 22.22 | 45 |
| கமநல ஆய்வு ப.நி. | 12 | 21.05 | 57 |
| விஞ்ஞான, கைத்தொழில் ஆ.நி. | 19 | 32.76 | 58 |
| நீரியல் வளங்கள் முகவரகம் | 31 | 30.69 | 101 |
| மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் | 9 | 47.37 | 19 |


மூலம் : சுகாதார, மகளிர் விவகார அமைச்சு 1993


### கல்வித் தரம் மற்றும் பால் அடிப்படையில் வேலையின்மை விகிதங்கள்

| கல்வித் தரம் | 1985/86 | | | 1992 | | | 1993 | | | 1994 (முதல் காலாண்டு) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் |
| பள்ளி செல்லாதோர் | 6.1 | 7.7 | 4.8 | 1.1 | 0.2 | 2.0 | 1.4 | 2.4 | 0.5 | 1.0 | 1.4 | 0.7 |
| பள்ளி ஆண்டுகள் 1 – 5 | 7.7 | 7.0 | 9.4 | 3.8 | 2.3 | 6.3 | 7.0 | 10.3 | 3.8 | 11.8 | 14.9 | 9.0 |
| 6 – 8 | 11.2 | 9.5 | 16.5 | 15.4 | 12.9 | 22.1 | 39.0 | 44.3 | 33.9 | 45.4 | 52.2 | 39.1 |
| 9 – 10 | 20.8 | 15.4 | 34.9 | – | – | – | – | – | – | – | – | – |
| கபொத (சா/ த) | 22.3 | 14.4 | 35.6 | 19.8 | 13.2 | 31.5 | 28.8 | 24.4 | 33.0 | 25.4 | 22.5 | 28.1 |
| கபொத (உ/ த) | 32.0 | 18.7 | 44.9 | 21.1 | 13.5 | 28.2 | 23.9 | 18.6 | 28.9 | 16.4 | 9.1 | 23.1 |
| பட்டம் | 6.3 | 3.3 | 10.2 | – | – | – | – | – | – | – | – | – |
| பட்டப் பின்படிப்பு | 3.9 | 4.2 | 3.2 | – | – | – | – | – | – | – | – | – |
| அனைத்து தரங்களும் | 14.1 | 10.8 | 20.8 | 13.3 | 10.1 | 19.8 | 13.8 | 10.2 | 21.0 | 13.6 | 9.9 | 20.8 |

* வடக்கு, கிழக்கு மாகாணங்கள் நீங்கலாக

மூலம் : ஊழியர் படை ஆய்வுகள்




### இலங்கை நிர்வாக சேவை

| தரம் | 1979 | | | 1984 | | | 1988 | | | 1992 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | பெண் | பெண் % | மொத்தம் | பெண் | பெண் % | மொத்தம் | பெண் | பெண் % | மொத்தம் | பெண் | பெண் % |
| CLASS I | 165 | 3 | 1.8 | 162 | 6 | 3.7 | 178 | 12 | 6.7 | 229 | 40 | 17.5 |
| CLASS II GR.1 | 345 | 19 | 5.5 | 327 | 47 | 14.4 | 274 | 59 | 21.5 | 665 | 73 | 11.0 |
| CLASS II GR.2 | 1,035 | 95 | 9.2 | 1,141 | 138 | 12.1 | 1,147 | 185 | 16.1 | 833 | 91 | 10.9 |
| TOTAL | 1,545 | 117 | 7.6 | 1,630 | 191 | 11.7 | 1,599 | 256 | 16.0 | 1,727 | 204 | 11.8 |

மூலம் : சுகாதார, மகளிர் விவகார அமைச்சு 1993.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( 2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**இலங்கையின் ஜனாதிபதி**

அரசாங்கத்தில் காணி சீர்திருத்த/ ஜனவசம ஆணைக்குழுவின் தலைவராக கடமையாற்றினார். இது இலங்கையின் வரலாற்று முக்கியத்துவ மிக்க காணி சீர்திருத்த சட்டத்தை அமுல் நடத்திய அமைப்பாக இருந்தது.

சிங்களம், ஆங்கிலம், பமபரஞ்சு ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றுள்ள அவர் ஐக்கிய இராச்சியத்திலும் இந்தியாவிலும் பல்கலைக்கழக கௌரவ விரிவுரையாளராக பணியாற்றியுள்ளார். இலண்டன் கல்கலைக்கழகத்தில் ஆய்வாளராகவும் இருந்துள்ளார். உலக விவசாய தாபனத்தின் நிபுணத்துவ ஆராய்ச்சியாளராக பல நாடுகளில் கடமையாற்றிய இவரது பல ஆக்கங்கள் அத்தாபனத்தால் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

அரசியல் கூட்டமைப்பான பொதுஜன ஐக்கிய முன்னணியினதும் அதன் பிரதான அம்சமான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினதும் பிரதி தலைவராக அரசியல் அனுபவம் பெற்றுள்ள இவர், இலங்கையின் பிரதமராகவும், அதனையடுத்து ஜனாதிபதியாகவும் தேர்தலில் வெற்றி பெற முன்னர் சிறிது காலம் மேல் மாகாண சபையின் பிரதான அமைச்சராகவும் கல்வி, கலாசார அமைச்சராகவும் கடமையாற்றினார்.

1994ம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட இவர், இது வரைகால ஆகக் கூடிய பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

( 2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் பிரதம மந்திரி**

முககிய பங்கினை வகித்தார். எம்.ஆர்.டி. என சுருக்கமாக அழைக்கப்பட்ட இம்முன்னணி நாட்டில் பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்தி, மக்கள் பிரதிநிதிகளுக்கு ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் என அன்றைய ஆட்சியாளர் ஜெனரல் ஸியாவுல் ஹக்கை வற்புறுத்த மக்களை ஒன்று திரட்டியது. ஜனநாயகத்தை மீளமைக்கும் இவ்வேண்டுகோளுக்கு ஆட்சியாளர்கள் அடக்குமுறை நடவடிக்கைகளாலும் அரசியற் கட்சி தலைவர்களை கைது செய்வதன் மூலமும் பதிலடி கொடுத்ததோடு, 1981 மார்ச்சில் திருமதி பூட்டோ சிறையிலிடப்பட்டார். 1984 ஜனவரியில் கடும் சுகயீனம் காரணமாக மருத்துவ சிகிச்சைக்கு ஐக்கிய இராச்சியத்திற்கு அனுப்பப்படும் வரை அவர் இச்சிறை வாசத்தை அனுபவித்தார். வெளிநாட்டிலிருந்து பாகிஸ்தான் இராணுவ ஆட்சிக்கு எதிரான எதிர்ப்புப் போராட்டத்தினை அவர் வழி நடத்தினார். ஜனநாயகத்தை மீளமைக்கும் போராட்டத்தை பல்வேறு சர்வதேச அரங்குகளில் ஒலிக்கச் செய்வதில் திருமதி பூட்டோ முக்கிய பங்கின வகித்தார்.

ஜெனரல் ஸியாவுல் ஹக் 1988 ஆகஸ்டில் விமான விபத்தொன்றில் அகால மரணம் அடைந்ததைத் தொடர்ந்து பாகிஸ்தானின் அரசியல் நிலவரம் மாறத் தொடங்கியது. 1988 நவம்பர் 16ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் பாகிஸ்தான் மக்கள் கட்சி பெரும்பான்மையான ஆசனங்களில் வெற்றி பெற்றதுடன், பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாக்கான் அவர்களால் திருமதி பூட்டோ அரசாங்கம் அமைக்க அழைக்கப்பட்டார். மொஹர்ரமா பெனாஸிர் பூட்டோ பாகிஸ்தானின் பிரதமராக முழு ஆட்சிக் காலத்திலும் கடமை ஆற்ற ஜனரஞ்சக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட போதிலும், திரை மறைவு சதிகளால் ஆட்சி செய்வது கடினமாயிற்று. எனினும், அவர் சவால்களுக்கு முகம்கொடுக்க தீர்மானித்ததுடன், மக்களை அரஜாகத்திலிருந்து ஜனநாயகத்துக்கு இட்டுச் செல்லும் பணியினை ஏற்றுக் கொண்டார். அவரது அரசாங்கம் சுகாதாரம், கல்வி, குடிநீர் வசதி, வடிகால் அமைப்பு, வலு முதலிய சமூகத் துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தது. இப்பிரிவுகளுக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டமையால் ஜனநாயகம், சுதந்திரம் என்பவற்றின் பிரதிபலன்கள் பொது மனிதனைச் சென்றடைய வழி பிறந்தது. அத்துடன், அவரது அரசாங்கம் வலுவான ஒரு வெளிநாட்டுக் கொள்கையை கடைப்பிடித்தது. 1989 இல் ஐக்கிய அமெரிக்காவிற்கு செய்த விஜயத்தின் போது பிரதமர் மொஹர் ரமா பெனாஸிர் பூட்டோ புது ஜனநாயக நாடுகளின் கூட்டணியொன்று உருவாக்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

தனது ஆட்சிக் காலத்தின் அரைவாசிப் பகுதிக்கும் குறைவான காலம் பதவியிலிருந்து 1990 ஆகஸ்ட் 06ஆம் திகதி ஜனாதிபதி குலாம் இஷாக்கான் அவர்களால் அரசியல் அமைப்பிற்கு மாறாக அவர் பதவியிறக்கப்பட்டார். அவரது கட்சி மீண்டும் ஆட்சிக்கு வராது தடுக்கும் முகமாக ஜனாதிபதியாலும் காபந்து பிரதம மந்திரியாலும் திருமதி பூட்டோவிற்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. பல சோடித்த குற்றச்சாட்டுக்களின் கீழ் அவரது கணவர் ஆ ஸிப்அலி ஸர்தாரி இரு வருடங்களுக்கு மேலாக சிறையில் அடைக்கப்பட்டார்.

பேனாசிர் பூட்டோ 1990ஆம் ஆண்டு முதல் 1993 வரை எதிர்க்கட்சித் தலைவியாக கடமையாற்றினார். அவரது கட்சி 1990 அக்டோபரில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் செல்லுபடியாகும் தன்மை குறித்து அவ்வமயம் காபந்து பிரதமராக கடமையாற்றிய திரு. முஸ்தபா ஜோதியால் கூட இது பற்றி கேள்வி எழுப்பினார்.

1993 ஜூலையில் பிரதம மந்திரி நவாஸ் ஷெரீபின் அரசாங்கம் பாகிஸ்தானிய ஜனாதிபதியால் பதவி நீக்கஞ் செய்யப்பட்டு புதிதாக தேர்தல் நடாத்தப்பட்டது. 1993 அக்டோபரில் பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆட்சி மாற்றத் திற்கான புது நிகழ்ச்சி நிரலுடன் தேர்தலில் குதித்தது.

மொஹர்ரமா பெனாசிர் பூட்டோ இரு நூல்களின் ஆசிரியையாவார். அவரது பேச்சுக்கள், ஆக்கங்கள் என்பன பல தொகுப்புக்களாக ஒன்று திரட்டப்பட்டுள்ளன. 1988 இல் வியன்னாவில் மனித உரிமைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான புறா னோ கிறிஸ்கி விருதினைப் பெற்ற இவருக்கு 1989இல் ரெட்சிலிப் கல்லூரியால் விருது வழங்கப்பட்டது.

திரு.ஆஸிப் அலி சர்தாரியை திருமணம் செய்துள்ள பிரதமர் பூட்டோவிற்கு பிலாவல் என்ற பெயரில் ஒரு மகனும் பக்தாவார், அஸீபா என்ற பெயரில் இரு பெண்பிள்ளைகளும் உண்டு.

( 2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பங்களாதேஷ் பிரதம மந்திரி

1971 மார்ச்சில் ஆரம்பித்த பங்களாதேஷ் சுதந்திரப் போரின் போது சிட்டகொங் படைப்பிரிவின் மேஜராக கடமையாற்றிய அவரது கணவர், பாகிஸ்தான் படைகளின் அடக்குமுறைகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து சுதந்திர பிரகடனத்தை முதற்தடவையாக உள்ளூர் வானொலி நிலையத்தின் மூலம் ஒலிபரப்பச் செய்தார். விடுதலைப் போரில் மேஜர் ஸியா தனது "இஸட் படை" பிரிவிற்கு தலைமை தாங்கிய அதே சமயம், பேகம் ஸியா ஆக்கிரமிப்புப் படைகளால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். ஒன்பது மாத கால விடுதலைப் போர் முடிவடைந்து சுதந்திரமும் தன்னாட்சியும் கொண்ட நாடாக பங்களாதேஷ் 1971 டிசம்பர் 16ம் திகதி உதயமாகியபொழுது பேகம் ஸியா விடுதலை செய்யப்பட்டார்.

விளையாட்டுத் துறையிலும் அரசியற் துறையிலும் இயல்பாகவே ஆர்வம் காட்டிவந்த பேகம் ஸியா, பங்களாதேஷ் பெண்களுக்கே உரித்தான பாணியில் அடக்கமான வாழ்வை மேற்கொண்டதுடன், அவரது பெரும்பாலான நேரத்தை தனது இரு புதல்வர்களான தாரித் ரஹ்மான், அரபாத் ரஹ்மான் ஆகியோரின் நலனுக்காக செலவிட்டார். 1975இல் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் போது ஜெனரல் ஸியாவுல் ரஹ்மான் ஜனாதிபதியான போதும் பேகம் ஸியா அரசியலிலோ அல்லது அரச விவகாரங்களிலோ ஈடுபடவில்லை; 1981 மே 30 ஆந் திகதி சிட்டகொங்கில் ஏற்பட்ட புரட்சிச் சதியின்போது தனது கணவர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் பேகம் ஸியா பொது வாழ்விலும் அரசியலிலும் பிரவேசித்தார்.

படுகொலைக்குப் பின்னர் உப ஜனாதிபதி நீதியரசர் அப்துல் ஸத்தார் பங்களாதேஷின் பதில் ஜனாதிபதியாக கடமையேற்றதுடன், 1978 இல் ஜனாதிபதி ஸியாவால் உருவாக்கப்பட்ட பங்களாதேஷ் தேசிய கட்சி (பீ.உன்.பி.) க்கும் தலைமை தாங்கினார். நான்கு மாதங்களுக்குள் 1981 நவம்பரில் நடாத்தப்பட்ட பொதுத் தேர்தலில் நீதியரசர் அப்துல் ஸத்தார் அமொக வாக்குகளால் ஜனாதிபதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். எனினும், இராணுவ சட்ட நிருவாகியான ஜெனரல் எச்.எம். இர்ஷாத் நடாத்திய புரட்சிச் சதியினால் ஜனாதிபதியும் பி.என் .பி அரசாங்கமும் கவிழ்க்கப்பட்டதுடன், 1982 மார்ச் 24ஆந் திகதி இராணுவச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டது.

புரட்சி சதிக்குப் பின்னர் பி.என்.பி. தலைவர் அப்துல் ஸத்தார் கட்சியின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள தனக்கு உதவும் பொருட்டு பேகம் ஸியா அவர்களை பி.என்.பி. யின் உதவித் தலைவராக நியமித்தார். எனினும், வயது முதிர்ந்த கட்சித் தலைவர் 1984 பெப்ரவரி 12 இல் பேகம் ஸியாவிற்கு பி.என்.பி. யின் தலைமைப் பதவியை அளித்து விட்டு அரசியலில் இருந்து ஓய்வு பெற்றார். அதனைத் தொடர்ந்து, அவ்வாண்டு ஆகஸ்ட் 10 ஆந் திகதி பேகம் ஸியா கட்சியினால் பி.என்.பியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். பேகம் ஸியாவின் தலைமையின் கீழ் ஏழு கட்சிக்கூட்டணி ஒன்று உருவாக்கப்பட்டு ஜெனரல் இர்ஷாத்தின் எதேச்சதிகார ஆட்சிக்கு எதிரரக தொடர்ச்சியான போராட்டம் ஒன்று ஆரம்பமானது. இவ் வியக்கத்தின் ஒரே குறிக்கோள் ஜெனரல் இர்ஷாத்தை பதவி விலகப் பலவந்தப்படுத்தி, இடைக்கால அரசாங்கம் ஒன்றுக்கு ஆட்சியை ஒப்படைத்து, அதன் மூலம் தேசிய பாராளுமன்றத்திற்கு சுதந்திரமான, பாரபட்சமற்ற தேர்தல் ஒன்றை நடாத்துவதாகும்.

இர்ஷாத்தின் சட்டபூர்வமற்ற அரசாங்கத்திற்கு எதிரான நீண்ட எட்டு வருடப் போராட்டத்தில் பேகம் ஸியா விடாப்பிடியாக இருந்தார். தான் வரித்துக் கொண்ட கொள்கையில் உறுதியாக நின்றமையால் அவர் கடுமையான இன்னல்களுக்கு உள்ளானார். பல சந்தர்ப்பங்களில் அவரது பயணங்கள் தடைச் சட்டங்களால் கட்டுப்படுத்தப்பட்டன. எட்டு வருடங்களில் அவர் ஏழுமுறை சிறையிலிடப்பட்டார். எனினும் இவை எதற்கும் அஞ்சாத பேகம் ஸியா, ஜெனரல் இர்ஷாத்தைப் பதவி இறக்கும் போராட்டத்திற்கு தொடர்ந்தும் தலைமைத்துவம் கொடுத்து வந்தார். இறுதியாக, பெருகி வரும் மக்கள் எதிர்ப்புக்கு முகம் கொடுக்க முடியாமல் 1990 டிசம்பர் 06ஆந் திகதி ஜெனரல் இர்ஷாத் பதவியை இராஜினாமா செய்து, காபந்து அரசாங்கம் ஒன்றிடம் ஆட்சியை ஒப்படைத்தார். ஒன்பது வருடகால போராட்டம் முடிவுக் கட்டத்தை எட்டியது. பேகம் ஸியா பங்களாதேஷின் 12 கோடி மக்களின் தன்னிகரற்ற தலைவியானார்.

1991 பெப்ரவரி 27 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பேகம் ஸியா ஐந்து தொகுதிகளில் போட்டியிட்டு எல்லாத் தொகுதிகளிலும் வெற்றி பெற்றார். அவரது பங்களாதேஷ் தேசியவாத கட்சி (பி.என்.பி.) பாராளுமன்றத்தில் பெரும்பான்மை கட்சியாக தெரிவு செய்யப்பட்டது. 1991 மார்ச் 20 ஆந் திகதி அவர் ஜனாதிபதி முறையிலான அரசாங்கத்தின் பிரதம மந்திரியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

பேகம் காலிதா ஸியா பங்களாதேஷ் அரசியல் யாப்பில் திருத்தம் செய்து, ஜனாதிபதி முறையிலான ஆட்சியை பாராளுமன்ற முறையிலான ஆட்சியாக மாற்றி பிரதம மந்திரியை அரசாங்கத் தலைவராக ஆக்கியதுடன், பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறும் கபினட் முறையையும் ஏற்படுத்தி வரலாற்றுப் புகழ் மிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். பாராளுமன்ற அரசாங்கத்தின் கீழ் அவர் 1991 செப்டம்பர் 19ந் திகதி பிரதம மந்திரியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க நிதிக் கொள்கையின் பரிணாம வளர்ச்சி

## அறிமுகம்

அரச நிதிக்கொள்கை என்பது, பொருளாதாரமொன்றின் வரி சேகரிப்பு, செலவுகள், கடன்எடுத்தல்கள் மற்றும் அரச படுகடன் முகாமை என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட அரசாங்கப் பொருளாதாரக் கொள்கையின் ஒரு பாகமாக இருந்து வருகின்றது என பொருள் விளக்கம் தரமுடியும். அது நவீன அரச நிதி தொடர்பாக கட்டாயமாகத் தேவைப்படும் ஒரு கருவியாக மாற்றமடைந்துள்ளது. வளர்ச்சி யடைந்த நாடுகளைப் போலவே இலங்கையையும் உள்ளிட்ட வளர்முக நாடுகளிலும் அண்மைக் காலத்தில் அரச நிதிக் கொள்கையின் முக்கியத்துவம் பெருமளவுக்கு அதிகரித்து வந்துள்ளது. அரச நிதிக் கொள்கை பிரதானமாக பொருளாதாரத்திற்குள், நிதிகளின் பாய்ச்சல் தொடர்பாகவே கவனஞ் செலுத்தி வருகின்றது. வரி அறவிடுவதன் மூலம் நிதிகள் தனியார் துறையிலிருந்து அரச துறைக்கு மாற்றப்படுகின்றன. மறுபுறத்தில், அரச செலவினங்கள் அரச துறையிலிருந்து நிதிகளை மீண்டும் பொருளாதாரத்திற்குள் திருப்பிவிடும் பணியை மேற்கொள்கின்றன. வரி அறவிடுதல் போலவே அரச கடன்படல்களும் தனியார் துறையிலிருந்து அரச துறைக்கு நிதிகளை திசை திருப்பி வந்த போதிலும், இந்த மாற்றல்கள் தனியார் துறையின் மீது வெவ்வேறு விதங்களில் தாக்கங்களை எடுத்து வருகின்றன. அரச நிதிக்கொள்கை இவ்விதமாக தேசிய பொருளாதா ரத்தின் செயற்பாட்டில் மிக முக்கியமான தாக்கத்தை எடுத்து வருகின்றது. இக்கட்டுரையின் முக்கிய நோக்கம் 1948 தொடக்கம் இலங்கையின் அரச நிதிக் கொள்கை வளர்ச்சியடைந்து வந்திருக்கும் விதம் குறித்து சுருக்கமாக கவனத்தில் எடுப்பதாகும். சாஸ்திரீய, புதிய சாஸ்திரீய மற்றும் கீனிஸியவாத கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அரச நிதிக் கொள்கை செயற்பட்டு வந்தமை குறித்த கோட்பாட்டு ரீதியான விடயங்கள் இக்கட்டுரையின் முதலாவது பகுதியில் எடுத்து விளக்கப்படுகின்றன. கடந்த 45 வருட காலமாக இலங்கையின் அரச நிதிக் கொள்கையின் செயற்பாடு கட்டுரையின் இரண்டாவது பாகத்தில் சுருக்கமாக விளக்கப்படுகிறது.

## பாகம் I

### அரச நிதிக்கொள்கை வளர்ச்சியின் கோட்பாட்டு ரீதியான அம்சங்கள்

வளர்முக நாடொன்றில், அரச நிதிக்கொள்கை, உடனடியான மற்றும் துரிதமான பொருளாதார வளர்ச்சிக்கு உசிதமான முறையில் உருவாக்கப் படுதல் வேண்டும். இந்த பரந்த எதிர்பார்ப்பினைக் கருத்திற் கொண்டே அரச நிதிக்கொள்கையின் குறிக்கோள்கள் உருவாக்கப்படுகின்றன. அரச நிதிக்கொள்கையின் முதலாவது குறிக்கோள், பொது மக்களின் நேரடி மற்றும் மறைமுக நுகர்வுக்கு உச்ச வரம்புகளை விதிப்பதன் மூலம் ஒட்டுமொத்த சேமிப்பு மட்டத்தை உயர்த்துவதாகும். பொருளாதாரம் ஒரே இடத்தில் தேங்கிக் கிடக்கும் நிலையை மாற்றியமைத்து, நாட்டை துரித பொருளாதார வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும் பொருட்டு மூலதன உருவாக்கத்தினை உச்சப் படுத்துவது அதன் இரண்டாவது குறிக்கோளாகும். வளர்முக நாடொனறின் அரச நிதிக் கொள்கையின் மூன்றாவது குறிக்கோள் உற்பத்தித் திறன் குறைந்த துறைகளிலிருந்து உற்பத்தித்திறன் கூடிய துறைகளை நோக்கி மூலதன வளங்களை திசை திருப்புவதாகும். வளர்முக நாடொன்றின் பணவீக்கத் திலிருந்து பாதுகாத்துக் கொள்வது அரச நிதிக்கொள்கையின் நான்காவது குறிக்கோளாக இருந்து வர வேண்டும். பொருளாதாரத்தின் மீது நெருக்குதல்களை எடுத்து வரும் தெட்டத் தெளிவான பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை முடியுமான வரையில் ஒழித்துக்கட்டி, சமூகத்துக்குள் வருமானமும், செல்வமும் சமமான முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்வது அரச நிதிக் கொள்கையின் ஐந்தாவது குறிக்கோளாக அமைய வேண்டும்.

அரச நிதிக் கொள்கையின் பதரிணாம வளர்ச்சி மிகவும் தெளிவாகக் காணக்கூடியதாகவுள்ள மூன்று கட்டங்களை தாண்டி வந்துள்ளது. பழம் பொருளியலாளர்கள் குறிப்பிடும் பிரகாரம் அரச நிதிக் கொள்கைக்குள் வரையறுக்கப்பட்ட ஒரு செயற்பாடு நிலவி வர வேண்டியுள்ளதுடன், அரசாங்க வரவு செலவுத்திட்டம் சிறியதாக ஆனால், சமநிலையுடன் கூ"யதாக இருந்து வருதல் அவசியமாகும். முழு வேலைவாய்ப்பு நிலை ஏற்கனேவ சமூகத்தில் நிலவி வருகின்றது என அவர்கள் அனுமானித்துக் கொண்டிருந்தனர். உண்மையிலேயே அனைத்து விதமான சாஸ்திரீய பொருளாதாரக் கோட்பாடுகளிலும் இந்த முழு வேலை வாய்ப்பு தொடர்பான எடுகோளினைக் காண முடிகிறது. இவர்கள் குறிப்பிடுவது போல, சமூகத்துக்குள் ஏற்கனவே முழு அளவில் வேலை வாய்ப்பு நிலவி வரும் பொழுது பொருளாதார நடவடிக்கை களில் தலையிடுவதற்கு அரசுக்கு எவ்வித தேவையும் இருப்பதில்லை. அடம்ஸ்மித் மற்றும் அவரையொத்த ஏனைய பொருளியலாளர்களால் முன்வைக்கப்பட்ட பொருளாதார முறை "தலையிடாக் கொள்கை" என்றே பொதுவாக விளக்கப்படுகிறது. வருமானத்தை ஈட்டுவதிலும், செலவு செய்வதிலும் தனக்கு உச்சமட்ட நலன் கிட்டும் விதத்தில் நடந்து கொள்வதற்கு அனைவருக்கும் வாய்ப்பு கிடைத்தால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் மூலம் முழு சமூகத்தினதும் சேமநலன் மேம்படுகின்றது என்பதே இந்தப் பொருளியலாளர்களின் அடிப்படைக் கருத்தாகும். அடம்ஸ்மித் "தேசங்களின் செல்வம்" என்ற தனது நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"உற்பத்திப் பொருளுக்கு ஆகக்கூடிய பெறுமதியை பெற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் தனது மூலதனத்தை ஈடுபடுத்துவதற்கு ஒவ்வொருவரும் முயற்சிக்கின்றார். அரச துறையை வளர்ச்சியடையச் செய்வதற்கான எண்ணத்தை பொதுவில் எவரும் கொண்டிருப் பதில்லை. மேலும், தான் அதனை இந்த அளவுக்கு வளர்ச்சி யடையச் செய்து வருகின்றாரா என்பது குறித்தும் அவர் அறிவதில்லை. அவர் தன்னுடைய பாதுகாப்பினை மட்டுமே கருத்தில் கொண்டுள்ளார். தன்னுடைய நன்மையை மட்டுமே கருத்திற் கொண்டுள்ளார். இங்கு தனது விருப்பத்தின் ஒரு பாகமாக இல்லாத குறிக்கோள் ஒன்றை மேம்படுத்துவதன் பொருட்டு மறைமுக கரமொன்றினால் அவர் உந்தப்பட்டு வருகிறார். தன்னுடைய சொந்த அபிலாஷைகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் அவர் செய்வது என்னவென்றால், தான் உண்மையிலேயே அவ்வாறு செய்வதற்கு எண்ணியிருப்பதற்கும் மேலாக பயனுள்ள முறையில் சமூகத்தின் அபிலாஷைகளை அவரால் இடையறாது மேம்படுத்தப்படுவதாகும்."

பொருளாதார நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படு வதன் விளைவாக செயற்றிறன் அற்ற நிலை தோன்றும் என 18ஆம் நூற்றாண்டு தொடர்பாக பொருளியலாளர்கள் தர்க்கித்து வந்துள்ளனர். எவ்வாறிருந்த போதிலும், சந்தைப் பொருளாதாரம் ஒன்றினை, அரசாங்கத்திலிருந்து கிடைக்கக்கூடிய குறிப்பிட்ட சில சேவைகளின் உதவி அதற்குக் கிடைத்தால் மட்டுமே செயற்றிறன் கொண்ட முறையில் இயக்கிச் செல்ல முடியும் என்பதனை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். சுதந்திர தொழில் முயற்சி தொடர்பாக கருத்துத் தெரிவிப்பவர்கள் குறிப்பிடுவது போல, பின்வரும் விடயங்களே அரசொன்றின் அடிப்படைக் கருமமாக இருந்து வந்துள்ளன:

(அ) அரச பந்தோபஸ்து

(ஆ) ஒப்பந்த சட்டத்தை செயற் படுத்துவதும் சொத்துக்களை வைத்திருப்பவர்களின் உரிமை களைப் பாதுகாக்கும் பொருட்டு, சட்டத்தையும் ஒழுங்கையும் பராமரிப்பதற்கான அமைப் பொன்றை உருவாக்குவதும்.

(இ) (பாறைகள், நீர் விநியோகம், துறைமுகங்கள், தபால் சேவைகள் போன்ற) உள் கட்டமைப்பு வசதிகளை வழங்குவதும், ஏற்றுக் கொள்ளத் தக்க விதத்தில் புழக்கத்தில் விடக்கூடிய பணத்தை உரு வாக்குவது போன்றவையும்.

அரசுக்கென, வரையறுக்கப் பட்ட சில பணிகள் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தமையால், சாஸ்திரீய பொருளியலாளர் அரச நிதிக் கொள்கை தொடர்பாக அரசுக்கு வரையறுக்கப்பட்ட ஒரு சில பணிகளை மட்டுமே சிபாரிசு செய்திருந்தார்கள். அரசு ஆகக் குறைந்தபட்ச மட்டத்தில் வரிகளை அறவிடவேண்டும் என்றும், ஆகக்குறைந்த பட்ச மட்டச் செலவுகளை மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கூறினார்கள். அரச வரவுசெலவுத் திட்டம் சிறியதாக இருக்க வேண்டும் என்பதே இதன் கருத்தாகும். அவர்கள் அரசுக்கு ஒரு சிறிய வரவு செலவுத்திட்டத்தை மட்டுமன்றி சமநிலை வரவு செலவுத்திட்ட மொன்றையும் சிபார்சு செய்தார்கள். அரசாங்கத்தின் வருமானத்தைப் போலவே செலவினமும் வருடாந்த அடிப்படையில் ஈடு செய்யப்பட வேண்டும் என்பதே அதன் பொருளாகும். வரவு செலவு இடைவெளியை நிரப்புவதற்காக எந்த விதத்திலும் அரச கடன்படல்கள் மேற்கொள்ளப்படக்கூடாது. வருமானத்தில் மட்டுமன்றி செலவிலும் குறைந்தபட்ச மட்ட நிதிக் கொள்கை களைப் பின்பற்றி வரும் அரசாங்கமே சிறந்த அரசாங்கமாகுமென இந்த சாஸ்திரீய பொருளியலாளர்கள் கருதினார்கள். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஐக்கிய இராச்சியத் தின் அரச செலவினங்களில் இந்தக் கூறுகளே முக்கியத்துவம் பெற்றிருந்தன என்பதனை அட்டவணை 1 எடுத்துக் காட்டுகின்றது.

அட்டவணை 1

ஐக்கிய இராச்சியத்தின் அரச செலவின வளர்ச்சி (மொத்தத்தின் சதவீதமாக

| | 1790 | 1840 |
|---|---|---|
| நிர்வாகம் | 17 | 16 |
| தேசிய கடன் | 39 | 42 |
| பந்தோபஸ்து | 26 | 23 |
| சமூக சேவைகள் | 9 | 9 |
| பொருளாதார சேவைகள் | 9 | 9 |

மூலம்: பீகொக் மற்றும் வைஸ்மன், "ஐக்கிய இராச்சியத்தின் அரச செலவின வளர்ச்சி"

1790 இலும் 1840 இலும் தேசியக் கடன், முக்கியமாக யுத்தங்களுக்கென நிதிப்படுத்தலை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்ட கடன்படல்களை உள்ளடக்கியிருந்ததுடன், நிர்வாகச் செலவுகளில் சட்டத்தையும் ஒழுங்கை யும் பராமரிப்பதற்கான செலவுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. போக்கு வரத்து வசதிகள், நீர் விநியோகம், சுகாதார சேவைகள் போன்ற உள்கட்டமைப்பு வசதி களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் பொருளாதார சேவை களில் சேர்க்கப்பட்டிருந்தன.

அரச நிதிக் கொள்கை தொடர்பான புதிய சாஸ்திரீய கருத்தினை மார்சல் மற்றும் பிகோ ஆகியோர் பிரதிநிதித்துவம் செய் கின்றனர். பொருளாதார அமைப்பில் சமூக ஏற்றத்தாழ்வுகள் தீவிர மடைவதற்கும், அவை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கும் இக் கருத்து வழிகோலியது. அரச தலையீடற்ற முதலாளித்துவ பொருளாதாரமொன்றுக்குள், அரசாங்கம் தலையிடாக் கொள்கையை பின்பற்றி வரும் பொழுது உச்ச மட்ட சமூக சேம நலன் தொடர்பான குறிக்கோளை சாதித்துக் கொள்ள முடியாது. எனவே, சமூக சேம நலனை உச்ச மட்டத்தில் வைத்திருக்கும் பொருட்டு அரசின் தலையிடாக் கொள்கையை அகற்றி, பொருளாதார நடவடிக்கைகளில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமுகமான முறையிலான பணியொன்றை அரசு நிறைவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அரசு மிகவும் விரிவான, அதேபோல சுறுசுறுப்பான பங்கொன்றினை நிறைவு செய்ய வேண்டியுள்ளது என்ற கருத்தினை மார்சலும் பிகோவும் கொண்டிருந்தனர். ஆனால், இவற்றுடன் இணைந்த விதத்தில், பொருளாதாரத்தின் அரச நிதிச் செயற்பாடுகளை விரிவுபடுத்தாமல் இதனை செய்ய முடியாதிருந்தது. எனவே, இந்த நிலையில் பொருளாதாரத்தின் உச்ச மட்ட நலனை எட்டும் பொருட்டு, அளவில் பெரிய - வருமானங்கள் அதிகளவிலும் செலவுகள் அதிகளவிலும் காணப்படும் - வரவு செலவுத் திட்டமொன்றை அவர்கள் சிபார்சு செய்தார்கள்.

அரச நிதி அல்லது வரவு செலவுத் திட்டக் கொள்கையின் பணியை தெளிவுபடுத்தும் பாரம்பரிய முறை, பொருளாதாரத்துக்குள் இருக்கும் அடிப்படை மாதிரியொன்றை உபயோகிப்பதாகும். கெயின்ஸின் பொதுக் கோட்பாடு (General Theory) 1936 இல் வெளியிடப்பட்டதுடன் இணைந்து, அரச நிதிக் கொள்கையில் ஒரு முக்கிய மாற்றம் இடம்பெற்றது. இந்தக் கோட்பாட்டின் படி, வெளியீடு, வேலைவாய்ப்பு மற்றும் வருமான மட்டம் என்பன கூட்டுக் கேள்வி மட்டத்தின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்பட்டு வருகின்றன. கூட்டுக் கேள்வியின் கூறுகள் (y) பின்வரும் முறையில் விளக்கப்படுகின்றன: $(y = C + I + G + X - M)$

- C = நுகர்வுச் செலவுகள்
- I = தனியார் முதலீடு
- G = அரசாங்கத்தினால் பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றுக்கு மேற்கொள்ளப்படும் செலவு
- X = ஏற்றுமதிப் பொருட்களும் சேவைகளும்
- M = இறக்குமதி கொருட்களும் சேவைகளும்

தேசிய உற்பத்திக்கென மேற்கொள்ளப்படும் திட்டமிடப்பட்ட செலவு (உதாரணமாக, கூட்டுக் கேள்வி) நடப்பு விலைகளில் உள்ளீடுகளின் பெறுமதிக்கு சமமாக இருக்கும் பொழுது, பொருளாதாரம் சம நிலையில் இருக்கும். கெயின்ஸிய முறையின் அரச நிதிக் கொள்கையின் முக்கியமான பணி முழு வேலை வாய்ப்பு மற்றும் விலை உறுதிப்பாடு என்ற இரட்டைக் குறிக்கோளை நிறைவு செய்து கொள்வதற்காக கூட்டுக் கேள்வியை நெறிப்படுத்தி வருவதாகும்.

கெயின்ஸின் கேள்வி முகாமை கொள்கைகள், நவீன பொருளாதார சூழலுக்குள் செயற்பட்டு வரவில்லை என பெரும்பாலான பொருளியலாளர்கள் இப்பொழுது நம்புகின்றனர். கூட்டுக் கேள்வியை உயர்த்துவதன் மூலம், வேலை வாய்ப்புப் பிரச்சினைக்கு நிவாரணமளிப்பதற்காக அரச நிதிச் செயற்பாடுகளை பயன்படுத்துவதனால், அதிலும் பார்க்க உயர்வான பணவீக்க விகிதமென்று ஏற்பட முடியும். அதேபோல, கூட்டுக் கேள்வியை குறைப்பதன் மூலம் பண வீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு முயற்சிப்பதன் மூலம், ஏற்கனவே மிக மோசமான நிலையில் இருந்து வரும் வேலை வாய்ப்பு நிலைமை மேலும் மோசமடைய முடியும். ஆனால், வேலை வாய்ப்பு தொடர்பாக செயற்படுவதில் அரச நிதிக் கொள்கை முக்கியமான ஒரு கருவியாக இருந்து வர முடியும் என்ற கருத்துக்கு பெருமளவுக்கு ஆதரவு கிடைக்கின்றது. ஆதிகரித்து வரும் செலவுகள் அதிகரித்தளவிலான உற்பத்திக்கு வழிகோலுவதுடன், உயர்ந்த அளவிலான சம்பளங்கள் மற்றும் விலைவாசி ஏற்றம் என்பவற்றுக்கு அவை செலவிடப்பட்டு வரவில்லை என்பதனை உறுதி செய்யும் பொருட்டு, அரச நிதிக் கொள்கைக்கு மிகச் சிறந்த வருமான கொள்கையொன்றின் மூலம் ஆதர வளிக்கப்பட்டு வர வேண்டும் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

பொதுவாக நாணய கோட்பாட்டாளர்கள் என அறியப்படும் (Monetarists) பொருளியலாளர்கள் கொண்டுள்ள கருத்து, பொருளாதாரம் தொடர்பான கட்டுப்பாடு, பண நிரம்பல் தொடர்பான கட்டுப்பாட்டை செயற்படுத்துவதன் மூலமே மேற்கொள்ளப்பட்டு வர வேண்டும் என்பதாகும். தேசிய வருமானத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கு பண நிரம்பலில் ஏள்பட்டுவரும் மாற்றங்களே அடிப்படைக் காரணங்களாக இருந்து வருகின்றன என அவர்கள் நம்புகின்றனர். கெயின்ஸினால் வெளியிடப்பட்ட அரச நிதி கேள்வி முகாமை நடவடிக்கைகள் உறுதியானவையாக இருப்பதற்குப் பதிலாக, உறுதியற்றனவயாக இருக்கக் கூடிய ஒரு போக்கு நிலவி வருகின்றது என இந்த நாணய கோட்பாட்டு வாதிகள் கருதுகின்றனர். கூட்டுக் கேள்வியை முகாமை செய்யும் நேரடி வழியொன்று என்ற முறையில் இவர்கள் அரச நிதிக் கொள்கையை நிராகரித்தபோதிலும் அரச நிதி நடவடிக்கைகள் என்பவற்றை பணக் கொள்கையின் ஒரு துணைக் கருவியாக நோக்குகிறார்கள். அரச துறையின் செலவுகள் மற்றும் கடன்கள் என்பவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடிய ஆற்றலிலேயே பண நிரம்பலை கட்டுப்படுத்துவது பெருமளவுக்குத் தங்கியுள்ளது.

பொருளாதாரத்தின் செயற்திறனை மேம்படுத்தும் உபாயம் என்ற முறையில் அரச நிதிக் கொள்கையை பயன்படுத்துவதற்கு எதிராக முன்வைக்கப்படும் வாதம், கடன் எடுப்பதற்கு ஊடாக பண நிரம்பல் செய்யப்படும் அரசாங்கச் செலவு அதிகரிப்புக்கள் தனியார் செலவுகளில் ஏற்படும் குறைவின் மூலம் பெருமளவுக்கு ஈடு செய்யப்பட்டுவிடும் என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அதிகரித்து வரும் அரசாங்கக் கேள்வியினால் தனியார் துறையின் கேள்வி பின்தள்ளப் பட்டுவிடும்.

எவ்வாறிருப்பினும், இதிலும் பார்க்க நேர்மாறான செல்வாக் கொன்றை செலுத்துவதற்கும் இடமுள்ளது. மந்த கால கட்டங்களின் போது அதிகரிக்கும் அரச செலவினம் பொருளாதார செயற்திறன் மட்டத்தை உயர்த்தும். பொருளாதாரம் விரிவடைந்து வரும் பொழுது முதலீடு செய்வது அவசியமானதாகவும், இலாபகரமானதாகவும் இருந்து வருவதனை தொழில் முயற்சியாளர்கள் உணர்ந்து கொள்வார்கள். எனவே இலாபத்தை ஈட்டிக் கொள்வதற்கு கூடிய வாய்ப்புக்கள் கிட்டுவதனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது முதலீடுகள் தூண்டப்படும் ஒரு சூழ்நிலையை எடுத்துவரும்.

## பாகம் II

## இலங்கையின் அரச நிதிக் கொள்கையின் செயற்பாடு

யுத்தத்துக்கு முற்பட்ட காலத்தில் இலங்கை அரசாங்கத்தின் பணிகள் வரையறுக்கப்பட்டவையாக இருந்து வந்தன. 1993இல் செலவிடப்பட்ட 28 சதவீதத்துடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது அக்காலத்தில் மொத்த அரச செலவு மொத்த தேசிய உற்பத்தியின் 14 சதவீதமாக மட்டுமே இருந்தது. இலங்கை சுதந்திரம் பெற்ற காலப்பிரிவில் 1947-48 தொடக்கம் 1952-53 வரையிலான காலகட்டத்துக்கான ஆறாண்டுத் திட்டமொன்றினை அரசாங்கம் ஆரம்பித்து வைக்கின்றது என நிதி அமைச்சர் பிரகடனம் செய்தார். இந்த ஆறாண்டுத் திட்டத்தின் நோக்கம் இலங்கை அதன் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களுக்காக இறக்குமதிகளில் தங்கியிருக்கும் நிலைமையை குறைத்துக் கொள்வதாகவே இருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட மிகவும் பிரமாண்டமான செய்திட்டம் கல்லோயா அபிவிருத்தித் திட்டமாகும். தேயிலையில் ஏற்பட்ட செழிப்பு நிலை காரணமாக சுதந்திரத்தின் பின்னர் முதற் தடவையாக 1953-54 நிதியாண்டு தொடர்பாக அரசாங்கத்தினால் மிகை வரவு செலவுத்திட்டமொன்றை சமர்ப்பிக்கக் கூடியதாக இருந்தது. இந்த வரவு செலவுத்திட்டம் 27 மில்லியன் ரூபா மிகையொன்றை காட்டியது. நிதி உறுதிப்பாட்டினை எடுத்து வரும் அதே வேளையில், விரைந்த பொருளாதார வளர்ச்சி ஒன்றை சாதித்துக் கொள்வதற்காக 1955-56 அரச நிதிக்கொள்கை நெறிப்படுத்தப்பட வேண்டும் என அரசாங்கம் அறிவித்தது. 1954-55 தொடக்கம் 1959-60 கால கட்டம் தொடர்பான ஆறாண்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டமொன்றினை 1955-56 வரவு செலவுத்திட்டம் முன்வைத்தது. இது தவிர, வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை தொடர்பாகவும் அரசாங்கத்தினால் ஒரு பிரகடனம் வெளியிடப்பட்டது. முக்கியமாக, 1955 இன் பின்னர் காணக்கூடியதாக இருந்த சாதகமற்ற சென்மதி நிலுவை நிலைமைகளே இதற்கு ஓரளவுக்குக் காரணமாக இருந்தன. புதிய அரசாங்கம் 1956-57 இல் சமர்ப்பித்த அரச நிதிக் கொள்கையின் அடிப்படைக் குறிக்கோள்கள், வரவுசெலவுத் திடடத்தின் மூலதனச் செலவுகளையும் தனியார் துறையில் செலவிடக்கூடிய வருமானங்களையும் சார்புரீதியில் நிலையான உயர்ந்த மட்டங்களில் வைத்துக் கொள்வதாகும். புதிய அரசாங்கம் போக்குவரத்து, காப்புறுதி மற்றும் வங்கித் தொழில் போன்ற பல துறைகளில் பெருந் தொகையான நடவடிக்கைகளை தேசிய மயமாக்கியது. 1960 ஆம் தசாப்தத்தின் தொடக்கத்தில் பெற்றோலிய இறக்குமதி மற்றும் விநியோகம் தேசிய மயமாக்கப்பட்டு, அரச கூட்டுத்தாபன மொன்றுக்கு வழங்கப்பட்டது. 1970 ஆம் தசாப்தத்தின் தொடக்கத்தில் 50 ஏக்கர்களுக்கு மேற்பட்ட அனைத்து தோட்டங்களும் வெளிநாட்டவர்களுக்கு சொந்தமான தோட்டங்களும் தேசியமயமாக்கப்பட்டு, அவற்றின் முகாமை அதற்கென உருவாக்கப்பட்ட அரச முகவரகங்களிடம் கையளிக்கப் பட்டது. 1970 களின் நடுப்பகுதி அளவில், தேசிய பொருளாதாரத்தின் பெரும்பகுதி அரச உரித்து மற்றும் முகாமை என்பவற்றின் கீழ் இருந்தது. 1977 இன் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு முன்னர், இலங்கையின் அரச நிதிக் கொள்கையின் அடிப்படை குணாம்சம், உணவு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற பொது சமூக நலத்துறைகளுக்கு முன்னுரிமை வழங்கி செயற்படுத்தப் பட்டு வந்த பகிர்ந்தளிக்கும் மற்றும் சேம நலன் அளிக்கும் குறிக்கோளாகவே இருந்தது.

கல்வி, சுகாதாரம், உணவு மானியங்கள் என்பவற்றுக்கென செலவிடப்பட்ட அரச செலவினம் 1954 இல் மொத்த தேசிய உற்பத்தியில் 6 சதவீதமாகவும், அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் 28 சதவீதமாகவும் இருந்தது. இது 1960-1973 காலப் பிரிவில் மொத்தத் தேசிய உற்பத்தியின் 10-13% ஆகவும் உயர்ந்து சென்றிருந்தது. அதன் பின்னர் 1978 இல் உணவு மானிய முறை திருத்தியமைக்கப்பட்டதனை அடுத்து இச்செலவில் கணிசமான அளவில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. பொதுவான சமூக சேவைகளை வழங்குவது தவிர, இலங்கை வரவு செலவுத்திட்டக் கொள்கையின் மற்றைய குணாம்சம் வறுமையொழிப்புக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு, வறிய மக்களுக்கு வழங்கப்பட்ட நேரடி மாற்றல்களாகும். அது மட்டுமன்றி, சமூக பொருளாதார உள்கட்டமைப்பு வசதி செய்திட்டங்களில் முதலீடு செய்வதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு மூல வளங்களை ஒன்று திரட்டும் பணியும், அரச நிதிக் கொள்கையினால் நிறைவு செய்யப்பட்டு வருகின்றது.

பொருளாதார தாராளமய மாக்கலுக்கு பிற்பட்ட கால கட்டத்தில் (1978-1994), விரைந்த பொருளாதார வளர்ச்சியையும், பொருளாதார அபிவிருத்தியையும் சாதித்துக் கொள்வதற்கு உசிதமான சூழ்நிலை யொன்றை உருவாக்கும் பொருட்டு இலங்கையின் அரச நிதிக் கொள்கை நெறிப்படுத்தப்பட்டிருந்தது. இந் நோக்கத்தினை நிறைவு செய்வதற்கென சேமிப்பு, முதலீடு என்பவற்றை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் நேரடி வரிச் சுமையை குறைப்பது வரிச் சீர்திருத்தங்களின் நோக்கமாக இருந்தது. எவ்வாறிருப்பினும், அரச வருமான திரட்டல் முயற்சியை மேற்கொள்வதற்கென 1977 க்கு பிற்பட்ட காலப்பிரிவின் போது 'வரி அறவீடு பெருமளவிற்கு மறைமுக வரிகள் மீது நம்பிக்கை வைத்திருந்தது. மொத்த வரி வருமானத்தில் மறைமுக வரிகளின் பங்கு 1978 இல் 41 சதவீதமாக இருந்து, 1993 இல் 80 சதவீதமாக உயர்ந்திருந்தது. மறுபுறத்தில், மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதம் என்ற முறையில் இலங்கையின் அரசாங்கச் செலவுகள் 1978 இல் 40 சதவீதமாக இருந்து, 1993 இல் 28 சதவீதமாக வீழ்ச்சியடைந் திருந்தது. மூலதனச் செலவுகள் 1978 இல் மொதேஉ யின் 24 சதவீதமாக இருந்து 1993 இல் 7 சதவீதம் வரையில் வீழ்ச்சியடைந்திருந்தமையே இதற்கான முக்கிய காரணமாகும்.

1977 க்குப் பிற்பட்ட காலப் பிரிவில் அரச நிதிக் கொள்கை செயற்பாட்டில் மிகவும் தெளிவாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணக் கூடியதாக இருந்த ஒரு விடயம், பாரியளவிலான வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைகளாகும். இது 1980 இல் மொஉஉ யில் 23 சதவீதமாக இருந்ததுடன், 1992 இல் ஆகக்குறைந்த மட்டமாக 7 சதவீதத்தினை பதிவு செய்திருந்தது. ஆனால், இக்கால கட்டம் முழுவதிலும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை சராசரியாக 13 சதவீதமாக இருந்து வந்துள்ளது. இப்பற்றாக்குறை 1980 இல் 23 சதவீதமாக இருந்ததுடன், 1988 இல் 16 சதவீதமாக இருந்து வந்தது. இந்த மட்டங்கள் இலங்கையின் அரச நிதி வரலாற்றில் முன்னர் ஒரு போதும் நிலவி வந்திராத உயர் மட்டங்களாக உள்ளன. எவ்வாறிருப்பினும், 1989 தொடக்கம் செயற்படுத்தப்பட்டு வந்த நிதி நடவடிக்கைகளின் விளைவாக வரவு செலவு திட்டப் பற்றாக்குறை மட்டம் கணிசமான அளவில் குறைக்கப் பட்டுள்ளது. வசெ திட்டப் பற்றாக்குறைகளை நிதிப்படுத்துவதற்கு வங்கிகளிலிருந்து பணம் பெற்றுக் கொள்ளும் முறையை முற்றிலும் ஒழித்தமை 1989 இன் பின்னர் இடம் பெற்று வந்துள்ள மிக முக்கியமான ஒரு மாற்றமாகும். வசெ திட்டப் பற்றாக்குறைகள் 1977 இன் பின்னர் இடையறாது அதிகரித்து வந்தன. இதன் விளைவாக, அரச கடன் அளவிலும் உயர் மட்டத்திலான அதிகரிப்பு ஏற்பட்டு வந்தது. 1977 இல் 24,986 மில்லியன் ரூபாவாக இருந்த மொத்த அரச கடன், 1994 இன் முடிவில் 548,563 மில்லியன் ரூபாவாக உயர்ந்து சென்றிருந்து. இது தவிர, வசெ திட்ட பற்றாக்குறைகள் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதனால் விலைவாசி ஏற்றம், வட்டி வீதுங்களில் அதிகரிப்பு உள்நாட்டுச் சேமிப்புக்களின் வீழ்ச்சி மற்றும் உற்பத்திசார் பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து மூலவளங்கள் விலக்கிக் கொள்ளப்படுதல் போன்ற பாதகமான விளைவுகள் தோன்று கின்றன.

மூன்றாண்டு கால வரவு செலவு கட்டமைப்பு மற்றும் ஆறாண்டு கால பொருளாதார திட்ட கட்டமைப்பு என்பவற்றின் அடிப்படையிலேயே 1995 இன் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக் கப்பட்டது. இது தொடக்கத்தில் நிதி உறுதிப்பாட்டு காலகடடத்தை கொண்டிருப்பதுடன், பின்வரும் அனைத்துமடங்கிய பரந்த பொருளாதார இலக்குகளை அடிப் படையாகக் கொண்ட பொருளாதாரச் சீர்திருத்தங்களையும் உள்ளடக்கி யுள்ளது :

(அ) 1995 இல் 6 சதவீதமாக இருக்கும் பொருளாதார வளர்ச்சி இலக்கினை 1997 அளவில் 7-8 சதவீதம் வரையில் படிப்படியாக அதிகரித்துக் கொள்ளல்.

(ஆ) 1995 இல் 7-8 சதவீதமாக இருந்து வரக் கூடிய பண வீக்கத்தினை 1997 அளவில் 5-6 சதவீதம் வரையில் குறைத்துக் கொள்ளல்.

(இ) 1995 இல் மொதேஉ யில் 6.4 சதவீதமாக இருந்து வரும் என கணக்கிடப்பட்டிருக்கும் வெளிநடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை 1997 இல் 5 சதவீதமாகக் குறைத்துக் கொள்ளல்.

வின்சன்ட் மர்வின் பெர்னான்டோ

( 17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திட்டங்கள் என்பன தொடர் பாகவும் அவை மகளிர் மீது எதிர்மறையான ஒரு தாக்கத் தினை ஏற்படாதிருப்பதனை உறுதி செய்யும் பொருட்டும் தாக்க மதிப்பீடுகள் மேற்கொள் ளப்படுதல்.

மகளிருக்கு வலுவூட்டுதல்

அபிவிருத்தித் திட்டமிடல் மகளிருக்கு வலுவூட்ட வேண்டுமானால், அதற்கு பொருத்தமான உத்திகள், முழுமையான கல்வி நிகழ்வுப்போக்கு, அதன் சமூகமயமாக்கல் கருமம், அறிவு மற்றும் திறன்கள் என்பவற்றை பகிர்ந்தளிப்பதில் அதன் பங்கு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிக் கொள்ள வேண்டும். மகளிருக்கு இவ்விதம் வலுவூட்டுவதற்கு பல வழிமுறைகளுக் கூடாக வசதி செய்து கொடுக்கலாம். கடந்த சில வருடங்களின் போது மகளிரின் பொருளாதார பாத்திரங்கள் விரிவடைந்து வந்துள்ளதுடன், கல்வி அமைப்பு தொழில் வாய்ப்புக்கள் தொடர்பான உயர் அபிலாசைகளை தோற்றுவித்துள்ளது. அதனால், வீட்டு வேலை பிரத்தியேகமாக பெண் களுக்கே உரிய வேலை என ஆண்க ளாலும் (பெரும்பாலான பெண்க ளாலும்) கருதப்பட்டு வருகின்றது. எனவே, இந்தச் சூழ்நிலையில், ஆண்கள் நாளொன்றுக்கு 9 மணித்தியாலங்கள் மட்டுமே வேலை செய்து வரும் அதே வேளையில், பெண்கள் தமது பல்வேறு பொறுப்பு களிலும் நாளொன்றுக்கு 14 மணித்தியாலங்கள் வேலை செய்து வருகின்றார்கள் என்பதனை ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. வீட்டு வேலைகளை நியாயமான ஒரு அடிப்படையில் பகிர்ந்து கொள்வதற் கென சமூக விழுமியங்களிலும் கண்ணோட்டங்களிலும் ஒரு மாற்றம் ஏற்படுவது அவசியமாகும். இதற்கென பாடசாலை பாடத்திட்டத்தினை ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தி, வேலைகளையும் பொறுப்புக்களையும் சமமான முறையில் பகிர்ந்து கொள்வது தொடர்பான கருதுகோள்களை பிள்ளைகளின் உள்ளங்களில் பதிய வைக்க முடியும்.

பால் சமத்துவத்தின் அடிப் படையில் மகளிரை அபிவிருத் தித்திட்டமிடலில் ஒருங்கிணப்பதற்கு பள்ளிக் கல்வியிலும் பல்கலைக்கழக கல்வியிலும் கல்வி வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான உத்திகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும். குறிப்பாக, கல்வி நிகழ்வுப்போக்கு பால் சமத்துவத்தை ஊக்குவிப்பதாகவும், மகளிருக்கு வலுவூட்டக்கூடியதாகவும் நிலைமாற்றமடையும் பொருட்டு பெண்களின் திறன்கள் வளர்க்கப் படுவது அவசியமாகும். மேலும், இறுதியில், மானிட அபிவிருத்தி கட்டமைப்புக்குள் ஆண்/பெண் ஏற்றத தாழ்வினை ஒழித்து விடுவதற்கு வகை செய்யும் விதத்தில் தேசிய அபிவிருத்தித் திட்டமிடலில் பால் விழிப்புணர்வினை மேம்படுத்துவது முக்கியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை இறப்பர் - சர்வதேச விலை உறுதிப்பாட்டு வழிமுறைகள்: வரலாற்று ரீதியான மீளாய்வு


ரஞ்சித் மலிகஸ்பே

(பணிப்பாளர் நாயகம்,

இலங்கை தேயிலைச் சபை)


(சென்ற இதழ் தொடர்ச்சி)

எனினும், பிரிட்டிஷ் அரசாங்கமும் அதேபோல டச்சு அரசாங்கமும் இத்தகைய திட்டங்கனை துவக்கி வைப்பதில் தயக்கம் காட்டி வந்தன. இந்த நிலையில், விலைகள் இடையறாது விழ்ச்சியடைந்து கொண்டு வந்தன. டச்சு அரசாங்கம் 1932 அளவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தை பேச்சு வார்த்தைகளுக்கு அழைத்தது. ஆரம்ப பேச்சுவார்த்தைகள் பயனற்றவையாக இருந்தன. இறப்பர் உற்பத்தியாளர்கள், இது தொடர்பாக தமே முன் முயற்சியை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இது 1934 இல் சர்வதேச இறப்பர் ஒழுங்குவிதிகளின் உருவாக்கத்துக்கு வழிகோலியது. ஏற்றுமதிகளை ஒழுங்குபடுத்தி, கையிருப்புக்களை குறைப்பதன் மூலம் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான முறையில், சாதகமான மட்டங்களில் விலைகளை உறுதிப்படுத்திக் கொள்வதே இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கமாக இருந்தது. கடந்த கால செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிக் கோட்டாக்கள், புதிய நடுகையை தடுத்தல், கையிருப்பை வருடாந்த உற்பத்தியின் ஐந்திலொரு பங்குக்குக் குறைத்தல் போன்ற பொறிமுறைகள் இதற்கென உபயோகிக்கப்பட்டன.

இந்த 1934 இன் பிரஸ்தாப ஒழுங்குவிதிகள் ஒரு குழுவினால் நிர்வகிக்கப்பட்டதுடன், பிரிட்டன், நெதர்லாந்து, இந்தியா, பிரான்ஸ் மற்றும் சியாம் போன்ற பிரதான உற்பத்தி நாடுகளால் 1938 அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. அக்கால கட்டத்தில் இறப்பர் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த 98 சதவீதமான பெருந்தோட்டங்கள் இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் வந்தன. முதல் தடவையாக இறப்பர் நுகரும் நாடுகளைச் சேர்ந்த மூன்று பிரதிநிதிகளும் இந்தக் குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டனர். இது இந்த ஒழுங்கு விதிகளின் ஒரு சிறப்பம்சமாகும்.

இந்த ஒழுங்குவிதிகளும் கூட விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டன. இவற்றின் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு பொறிமுறை சிறு அளவு உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு எதிராக, பாரிய ஐரோப்பிய உற்பத்தியாளர்களுக்கு சாதகமானதாக இருந்து வந்தது என்ற அடிப்படையில் 'The Strait Times of Malasia' என்ற பத்திரிகை 1937 இல் ஒரு தாக்குதலை தொடுத்திருந்தது. உள் நாட்டு சிறு உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தியை பெருந்தோட்டங்களின் உற்பத்தியிலும் பார்க்க துரித வேகத்தில் விஸ்தரித்துக் கொண்டு வரும் ஒரு வேளையில், இந்த ஒழுங்குவிதிகள் செயற்கையான முறையில் சிறு துறையின் அபிவிருத்தியை தடுத்துக் கொண்டிருந்தன எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

கட்டுப்பாடுகள் நிலவி வந்தமையினாலும், கேள்வி அதிகரித்து வந்தமையினாலும் இக்கால கட்டத்தின் போது இறப்பர் விலைகள் சாதகமானவையாக இருந்து வந்தன. 1938 இல் மட்டுமே விலைகளில் ஒரு மந்த நிலை காணப்பட்டது. தென் கிழக்காசியாவிலிருந்து வரும் வழங்கல்களை ஜப்பான் தடுத்து நிறுத்தியமையின் விளைவாக இந்த ஒழுங்கு விதிகள் 1941 இல் செயலிழந்தன. மேலும், 1941 இல் செயற்கை இறப்பர் (சிந்தெடிக் இறப்பர்) சந்தையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இதனை உடனடுத்து, இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இயற்கை இறப்பர் பெற்றிருந்த முக்கியத்துவம் மங்கத் தொடங்கியது. ஜப்பான் படையெடுப்பு காரணமாக இயற்கை இறப்பர் வழங்கலில் ஏற்பட்ட தடங்கல்களே சிந்தெடிக் இறப்பரின் தோற்றத்துக்கு வழிகோலிய முதன்மைக் காரணியாக இருந்து வந்தது. மேலும், சுமார் அரை நூற்றாண்டுக்கு மேலாக இயற்கை இறப்பர் உற்பத்தியாளர்கள் பின்பற்றி வந்த கட்டுப்பாட்டு முறைகளுக்கு நுகர்வு நாடுகள் காட்டிய எதிர் விளைவும் இதற்கு ஓரளவு காரணமாக இருந்தது. ஐக்கிய அமெரிக்காவின் கொள்வனவு படிப்படியாக குறைவடையத் தொடங்கியதுடன் இணைந்த விதத்தில், இயற்கை இறப்பர் தொடர்பான ஒழுங்கு விதிகள் இறுதியில் 1944 இல் கைவிடப்பட்டன.

இரண்டாவது உலகப் போர் பிரதான நுகர்வு நாடுகளுக்கான

அட்டவணை 1

இயற்கை இறப்பர் மற்றும் சிந்தெடிக் இறப்பர் என்பவற்றின் சந்தைப் பங்கு 1356-1975

| | இயற்கை | | சிந்தெடிக் | |
|---|---|---|---|---|
| வருடம் | உற்பத்தி (1000 தொன்கள்) | சதவீதம் | உற்பத்தி (1000 தொன்கள்) | சதவீதம் |
| 1956 | 1907 | 62.3 | 1153 | 37.6 |
| 1960 | 2098 | 53.4 | 1826 | 46.6 |
| 1965 | 2420 | 44.4 | 3020 | 55.6 |
| 1970 | 2990 | 34.6 | 5635 | 65.4 |
| 1975 | 3367 | 32.3 | 7027 | 67.7 |

மூலம் : இறப்பர் புள்ளிவிவர ஏடு, பல்வேறு இதழ்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை இறப்பரின் வழுங்கல்களில் தடங்கல்களை எடுத்து வந்தது. யுத்தத்தை அடுத்து வந்த காலப்பிரிவில் வழங்கலை அல்லது விலை உறுதிப் பாட்டினை பேணும் விடயத்தில் உற்பத்தி நாடுகள் எத்தகைய அக்கறையையும் காட்டவில்லை. இறப்பர் உற்பத்தி செய்யும் பெரும்பாலான நாடுகள் சுதந்திரம் பெற்றதனையடுத்து தமது அணுகுமுறையை உற்பத்திக் கட்டுப்பாட்டிலிருந்து, உற்பத்திப் பெருக்கததை நோக்கி மாற்றியமைத்துக் கொண்டமையே இதற்கான காரணமாகும் என அஸ்வோர்த் குறிப்பிடுகிறார்.

இயற்கை இறப்பர் தொடர்பாக மிக முக்கியத்துவம் வாய்ந்த இரு நிகழ்வுகள் இரண்டாவது உலகப் போரின் பின்னர் இடம் பெற்றன. சர்வதேச இறப்பர் ஆய்வுக் குழு 1944 இல் இலண்டனில் ஸ்தாபிக்கப்பட்டமை முதல் நிகழ் வாகும். இது பரஸ்பர கலந்தா லோசனை மற்றும் புள்ளிவிவரத் தரவுகளின் சேகரிப்பு போன்ற குறிக்கோள்களுடன் கூடிய, உற்பத்தி நாடுகளினதும் நுகர்வு நாடுகளினதும் ஓர் அரங்கமாக இருந்தது. விலைகளை அல்லது வழங்கலை ஒழுங்கு விதிகளுக்குள் எடுத்து வரும் எண்ணம் அப்பொழுது இக்குழுவிடம் இருக்க வில்லை. இறப்பர் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை ஒன்றினை பேசி முடிக்கும் விடயத்தினை மேற்கொள்வதற்கென இக்குழு 1952 இல் உபகுழு ஒன்றை அமைத்தது. இது துரதிர்ஷ்டவசமாக தோல்வி கண்டது.

உறுதியான, இலாபகரமான விலைகளைத் தமது பண்டங்களுக்குப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு சர்வதேச ஒழுங்குவிதி ஏற்பாடுகள் இருந்து வருதல் வேண்டும் என அனைத்துப் பிரதான பண்டங்களின் உற்பத்தி நாடுகளும் அதிகளவில் ஆர்வம் காட்டியமை இரண்டாவது நிகழ்வாகும். தகரம், சீனி மற்றும் கோதுமை என்பவற்றின் உற்பத்தி நாடுகள் உத்தேச சர்வதேச வர்த்தக நிறுவனத்தின் ஸ்தாபிதம் குறித்து உயர் நம்பிக்கைகளைக் கொண்டிருந்தன. இந்த நிறுவனத்தின் சாசனம் குறித்து 1946 இலும் 1948 இலும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. உற்பத்தி நாடுகள் மற்றும் நுகர்வு நாடுகள் என்பவற்றின் பங்கேற்புடனான பண்ட ஒப்பந்தங்களுக்கான ஷரத்துக்களை இந்த சாசனம் கொண்டிருந்தது. எனினும், ஐக்கிய அமெரிக்க வற்புறுத்தலின் பேரில், கடைசி ஆயுதமாக மட்டுமே - அதாவது, சாதாரண சந்தை சக்திகள் உற்பத்தியாளர்களின் கஷ்டங்களை தீர்த்து வைக்கத் தவறும் சந்தர்ப்பங்களில் மட்டுமே - பண்ட உடன்படிக்கைகள் பயன்படுத்தப்பட வேண்டும் என இறுதியில் இந்த சாசனம் ஏற்றுக் கொண்டது.

1960 களின் தசாப்தத்தின் போது உலக அரசியல் நிலையில் முக்கியமான பல மாற்றங்கள் ஏற்பட்டன. அதன் விளைவாக, முதல் நிலைப் பண்ட உற்பத்தி நாடுகளாக இருந்த வளர்முக நாடுகள் சர்வதேச விவகாரங்களில் ஓரளவுக்கு செல்வாக்குச் செலுத்தக் கூடிய சக்தியைப் பெற்றுக் கொண்டன. 1960 களின் தொடக்கத்தில் பெரும்பாலான வளர்முக நாடுகள் ஐ.நா.மன்றத்துக்குள் அனுமதி பெற்றன. 1963 இல் வளர்முக நாடுகளை உள்ளடக்கிய "77 குழு" தமக்கு அக்கறையுள்ள விடயங்கள் தொடர்பாக தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கு ஓர் அமைப்பாக உருவாகின. வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கான ஐ.நா.அமைப்பும் (அங்டாட்) 1964 இல் அதன் முதலாவது கூட்டத்தை ஜெனீவாவில் நடாத்தியது. இரண்டாவது கூட்டம் 1968 இல் புதுடில்லியில் இடம் பெற்றது. வளர்முக நாடுகள் தமது பண்ட வர்த்தகம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பன தொடர்பான பிரச்சினைகளை முன்வைப்பதற்கான பிரதான அரங்காக அங்டாட் மாற்றமடைந்தது.

1950 மற்றும் 1960 ஆகிய இரு தசாப்தங்களின் போதும் பல வேளாண்மைப் பண்டங்கள் தொடர்பாக சர்வதேச பண்ட உடன்படிக்கைகள் உருவாக்கிக் கொள்ளப்பட்டன. சீனி (1954 மற்றும் 1958), கோப்பி (1963) போன்ற வற்றிலான உடன்படிக்கைகள் விலை தலையீட்டு பொறிமுறைகளையும் தம்முள் அடக்கியிருந்தன. கோதுமை தொடர்பான உடன்படிக்கைகள் (1949 தொடக்கம் 1962 வரையில்) பல்பக்க ஒப்பந்தங்களை உள்ளடக்கியிருந்தன. இயற்கை இறப்பர் தொடர்பாக சர்வதேச சந்தைத் தலையீட்டுப் பொறிமுறை எதுவும் இக்காலப் பிரிவில் மேற்கொள்ளப் படாதிருந்தமை ஓரளவுக்கு வியப் பூட்டக்கூடிய ஒரு விடயமாகும். சிந்தெடிக் இறப்பர், சந்தைப் பங்கில் அதிக அளவினை பெற்று வந்த ஒரு நிலையில், இயற்கை இறப்பர் உற்பத்தி நாடுகள், விலைகளை அதிகரித்துக் கொள்வதன் மூலம் தமது சந்தைப் பங்கினை இழக்க நேரிடும் என்ற அடிப்படையில் இது தொடர்பாக தயக்கம் காட்டி இருக்க முடியும். சிந்தெடிக் இறப்பரின் சந்தைப் பங்கு 1956 இல் 37.6 சதவீதத்திலிருந்து 1970 இல் 65.4 சதவீதமாக படிப்படியாக அதிகரித்து வந்துள்ளதனை அட்டவணை 1 எடுத்துக் காட்டுகிறது.

1960 களின் தசாப்தத்தின் முடிவின் போது இயற்கை இறப்பரின் விலைகள் மிகத் துரிதமாக வீழ்ச்சி கண்டிருந்தன. கொரிய யுத்த செழிப்பு நிலையின் போது 1951 இல் ஒரு மெற்றிக் தொன்னின் விலை 3738 டொலர்களாக இருந்து வந்தது; இது 1960 இல் 2383 டொலர்களாகவும், 1968 இல் 1171 டொலர்களாகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. இந்நிலைமை குறித்து இயற்கை இறப்பர் உற்பத்தி நாடுகள் அதிகளவுக்குக் கவலையடைந்தன. மலேசியா, இலங்கைப் பிரதமர்கள் இயற்கை இறப்பருக்கு நியாயமான உறுதியான விலைகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு ஐக்கிய அமெரிக்காவிடமும் சர்வதேச அமைப்புக்களிடமும் கூட்டாக மகஜர் ஒன்றை சமர்ப்பிப்பதற்கு 1967 இல் இணங்கினர். ஆனால், இதன் பின்னரும் கூட பயன்கள் எதுவும் ஏற்படவில்லை. இயற்கை இறப்பர் உற்பத்தி நாடுகள் தமது சொந்த ஸ்தாபனத்தை - அதாவது, இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் அமைப்பை - நிறுவுவதற்கு 1970 இல் தீர்மானித்தன. ஆனால், இந்த அமைப்பு பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை முடிவு செய்வதில் ஆரம்பப் பேச்சுவார்த்தைகள் உறுதியான பெறுபேறுகளை எடுத்து வரவில்லை.

வளர்முக நாடுகளைப் பொறுத்த மட்டில் 1970 களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசாப்தத்தின் போது அவை சர்வதேச அரங்கில் மிகுந்த செயல் முனைப்புடன் இயங்கி வந்தன. 1971 இல் லிமாவிலும் 1972 இல் சந்தியாகோவிலும் இடம் பெற்ற அங்டாட் கூட்டங்களின் போது, வளர்முக நாடுகள் ஆரம்பப் பண்டங்களுக்கு அனுகூலமான நியதிகளையும், இலாபகரமான விலைகளையும் வேண்டி நின்றன. புதிய கொக்கோ உடன்படிக்கையை எடுத்து வருவதிலும், கோப்பி, தகரம், சீனி மற்றும் கோதுமை என்பன தொடர்பாக ஏற்கனவே நிலவி வரும் உடன்படிக்கைகளை மீண்டும் பேசித் தீர்ப்பதிலும் 1972 இல் அங்டாட் வெற்றி கண்டது. எனினும், 1973 இல் எண்ணெய் விலைகளை பன்மடங்கினால் அதிகரித்து ஒபெக் அமைப்பு ஈட்டிய வெற்றியினை அடுத்தே மிக முக்கியமான தூண்டுதல் கிடைத்தது. இது தமது முதல் நிலைப் பணடங்களுக்கு சிறந்த விலைகளை பெற்றுக் கொள்ளும்விதத்தில் பொருத்தமான முறையில் ஒருங்கிணைக்கப்பட்ட உற்பத்தியாளர் கூட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கு உற்பத்தி நாடுகளுக்கு ஊக்கமளித்தது.

எண்ணெய் விலையேற்றத்தின் பின் விளைவாக, பணவீக்கம் தோன்றியதுடன் இயற்கை இறப்பரினையும் உள்ளிட்ட அனைத்துப் பண்டங்களின் விலைகளும் அதிகரித்துச் சென்றன. ஆனால், வெகு விரைவில் இந்நிலை கைத்தொழில் உலகில் பொருளாதாரப் பின்னடைவொன்றை எடுத்து வந்தமையால் இறப்பருக்கான கேள்வியில் மீண்டும் வீழ்ச்சி ஏற்பட்டது. மலேசியாவில் 1974 இல் இறப்பர் விலைகள் பெருமளவுக்கு வீழ்ச்சி அடைந்தமையினால், இறப்பர் பயிரிடுவோர் கிளர்ச்சி செய்தனர். இதனையடுத்து அரசாங்கம் சந்தையிலிருந்து 104,000 தொன் இயற்கை இறப்பரை விலக்கிக் கொண்டதுடன், இறப்பர் பால் எடுப்பது தொடர்பாக கட்டுப்பாடுகளையும் அறிமுகம் செய்து வைத்தது. மலேசியா பிரதான வழங்குனர் நாடாக இருந்து வந்தமையினால், சர்வதேச விலைகளில் ஏற்பட்டு வந்த வீழ்ச்சியை இது தடுத்து நிறுத்தக் கூடியதாக இருந்தது. ஜகர்த்தா இயற்கை இறப்பர் ஒப்பந்தம் 1976 இல் முடிவாக்கப்பட்டதுடன், 100,000 தொன் கையிருப்பினை வைத்திருப்பதற்கும், ஏனைய வழங்கல் கட்டுப்பாட்டு வழிமுறைகளுக்குமான ஏற்பாடுகளைக் கொண்டிருந்தது. அடுத்து வந்த வருடங்களில் நல்ல விலைகள் நிலவி வந்தமையினால் இந்த ஒப்பந்தம் செயற்படுத்தப்படவில்லை.

அங்டாட் அமைப்பு நைரோபியில் இடம் பெற்ற அதன் நான்காவது கூட்டத் தொடரின்போது, பண்டங்களுக்கான ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொது நிதியமொன்றினை ஸ்தாபிப்பதற்குத் தீர்மானித்தது. இதன் விளைவாக, இயற்கை இறப்பரையும் உள்ளிட்ட ஆரம்பப் பண்டங்களை உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு ஒரு புதிய யுகம் உதயமாகியது. விலைகளை உற்பத்தியாளர்களுக்கு இலாபகரமானவையாகவும், நுகர்வோருக்கி நியாயமானவையாகவும் நிலைக்கச் செய்யும்பொருட்டு, கையிருப்புக்களைக் கட்டியெழுப்புவதற்கு இந்த நிதியத்திலிருந்து நிதிப்படுத்தல் அளிக்கப்படவிருக்கும் பண்டங்களில் இயற்கை இறப்பரும் ஒன்றாக இருந்தது. இந்தப் பொது நிதியத்துக்கு முதலில் 600 கோடி அமெரிக்க டொலர் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. நீண்டகாலமாக விலை ஆதரவு ஒழுங்குவிதிப் பொறிமுறை ஒன்றின்அவசியத்தை வலியுறுத்தி வந்த ஆரம்பப் பண்டங்களை உற்பத்தி செய்யும் நாடுகளைப் பொறுத்தவரையில் இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

விலை ஒழுங்குபடுத்தும் பொறிமுறைகளில் நுகர்வோரின் விருப்பங்களும் உள்ளடக்கப்படுதல் வேண்டும் என்ற விடயத்தை இக்காலப் பிரிவில் உற்பத்தி நாடுகளும் உணர்ந்திருந்தன. இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து அவர்கள் பின்பற்றி வந்த உற்பத்தியாளர்களை மட்டுமே மையமாக்கக், கொண்ட அணுகுமுறையிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டதாகும். நைரோபி மாநாட்டில் இடம்பெற்ற கலந்தாராய்வுகள் இந்த மாற்றத்துக்கு வழி கோலியிருந்தன. மலேசியா 1974 இல் சந்தையிலிருந்து ஒரு இலட்சம் தொன் இயற்கை இறப்பரை வாபஸ்பெற்றுக் கொண்டது. அதனையடுத்து விலைகள் அதிகரித்த பொழுது அது தனது முடிவை மாற்றிக் கொண்டது. மலேசியாவின் கோட்பாட்டு ரீதியான அணுகுமுறை விலை அதிகரிப்பினை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்றும், விலை உறுதிப்பாட்டினையே நோக்கமாகக் கொண்டிருந்தது என்றும் அங்டாட் செயலகம் ஒரு குறிப்பில் தெரிவித்திருந்தது.

இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் சங்கம் மேற்கொண்ட முன் முயற்சிகளின் விளைவாக 1979 இல் சர்வதேச இயற்கை இறப்பர் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. முன்னர், 1976 இல் இடம் பெற்ற உற்பத்தியாளர் உடன்படிக்கையின் முக்கிய பொறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு இந்நாடுகள் 1977 ஜனவரியில் அங்டாட் பூர்வாங்க மாநாட்டில் விலை உறுதிப்பாட்டுக்கான யோசனைகளை முன்வைத்திருந்தன. மேலும், இறப்பரை நுகரும் நாடுகளின் பங்கேற்பும் இதற்கு அவசியம் என உற்பத்தி நாடுகள் ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்தி வந்தன. தொடக்கத்தில் உற்பத்தி நாடுகளுக்கும் நுகர்வு நாடுகளுக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. கையிருப்பு சுமார் 4 இலட்சம் தொன்களாக இருந்துவர வேண்டுமென உற்பத்தி நாடுகள் கேட்டுக்கொண்ட ,அதே வேளையில், இது சுமார் 7 இலட்சம் தொன்களாக இருந்து வர வேண்டும் என ஐக்கிய அமெரிக்கா போன்ற நுகர்வு நாடுகள் வலியுறுத்தி வந்தன. ஆனால், பேச்சு வார்த்தைகள் முன்னேறிச் சென்ற பொழுது இந்த கருத்து வேறுபாடுகள் பெருமளவுக்குச் சுருங்கத் தொடங்கின. வருங்காலத்தில் இயற்கை இறப்பரின் வழங்கல் தொடர்ச்சி இடம் பெறும் என்ற உத்தரவாதம் நுகர்வு நாடுகள் தமது அணுகுமுறைகளை மாற்றிக் கொள்வதற்குத்தூண்டின. உற்பத்தி நாடுகளும் இதேபோல நெகிழ்ந்து கொடுத்தமையினால் 1979 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6 ஆந் திகதி சர்வதேச இயற்கை இறப்பர் ஒப்பந்தம் முடிவாக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் 13 இறப்பர் ஏற்றுமதி நாடுகளும் 50 இறக்குமதி நாடுகளும் கைச்சாத்திட்டன. சுமார் 4 இலட்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்களைக் கொண்ட ஒரு கையிருப்பும், சுமார் 150,000 தொன்களைக் கொண்ட மற்றொரு அவசர கால கையிருப்பும் மட்டுமே விலை உறுதிப்பாட்டு பொறிமுறை களாக இருந்தன.

இயற்கை இறப்பர் உற்பத்தியை 1982 இன் பின் அரைப்பகுதியில் 350,000 தொன்களால் குறைத்து விடுவதற்கு உற்பத்தி நாடுகள் தீர்மானித்தன. விலைகள் வீழ்ச்சி அடைந்திருந்தமையே இதற்கான காரணமாகும். ஆனால், வருட இறுதியில் விலைகள் விருத்தியடைந்த பொழுது இந்நிலைமை மாற்ற மடைந்தது.

சர்வதேச இயற்கை இறப்பர் ஒப்பந்தம் 1985 அக்டோபர் மாதத்தில் காலாவதியாகியது. புதிய ஒப்பந்தத்துக் கான பேச்சுவார்த்தைகளின் போது உற்பத்தி நாடுகளும் நுகர்வு நாடுகளும் பல்வேறுபட்ட கருத்துக்களை முன்வைத்தன. முதலாவது ஒப்பந்தத் தின் விலைகள் மிக குறைந்த மட்டத்தில் இருந்து வந்தன என்றும், இத்துறையில் மேலும் முதலீடுகளை ஈடுபடுத்து வதற்கு அது ஊக்குவிப்பினை அளிக்கவில்லை என்றும் உற்பத்தி நாடுகள் கருத்துத் தெரிவித்திருந்தன. எனவே, ஏனைய விலை மட்டங்களை இறுதியில் நிர்ணயிக்கும் குறிப்பு விலை 27 சதவீதத்தினால் உயர்த்தப்பட வேண்டும் என அவை யோசனை தெரிவித்தன. மறுபுறத்தில் நுகர்வு நாடுகள் கடந்த ஐந்தாண்டு காலத்தின் போது இந்த ஒப்பந்தம் செயற்பட்டு வந்திருக்கும் முறை குறித்து திருப்தி தெரிவித்தன. இந்தக் கருத்து வேறுபாடுகளின் விளைவாக பேச்சுவார்த்தைகள் நீண்டு கொண்டு சென்றதுடன், இதனையடுத்து முதலாவது ஒப்பந்தம் 1987 அக்டோபர் வரையில் மீண்டும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டது.

சர்வதேச இயற்கை இறப்பர் ஒப்பந்தம் 1989 ஜனவரி மாதத்தில் அமுலுக்கு வந்தது. முதலாவது ஒப்பந்தத்துடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது இது ஒரு சில மாற்றங்களை மட்டுமே கொண்டிருநதது. கையிருப்பு முறை மட்டுமே விலை உறுதிப்பாட்டு பொறிமுறையாக தொடர்ந்தும் இருந்து வந்தது. கையிருப்பு உச்ச வரம்பு 550,000 தொன்களாக நிர்ணயிக்கப் பட்டிருநதது. விலை மட்டங்கள் தொடர்பான கோட்பாடுகள் மாற்றமடையாதிருந்தன. விலை மட்டங்களை மீளாய்வு செய்து, திருத்தி அமைப்பது தொடர்பான விடயத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. விலை மட்டங்கள் பெருமளவுக்கு சந்தைப் போக்குகளை பிரதிபலிக்கக் கூடியவையாக இருந்துவர வேண்டும் என்ற நுகர்வு நாடுகளின் கோரிக்கை இதனை அவசியப்படுத்தியிருந்தது.

இந்த ஒப்பந்தம் இயற்கை இறப்பருக்கான விலைகளை உறுதிப் படுத்தியிருந்த போதிலும் இந்த விலை மட்டங்கள் இலாபகரமானவையாக இருந்து வரவில்லை என உற்பத்தி நாடுகள் கருதுகின்றன. இரண்டாவது ஒப்பந்தத்தின் செயற்பாடுகள் தொடர்பாக நுகர்வு நாடுகள் திருப்தி யடைந்திருப்பதுடன், மூன்றாவது ஒப்பந்தம் தொடர்பான பேச்சு வார்த்தைகளை விரைவில் ஆரம்பிப்பதில் அவை உற்சாகம் காட்டவில்லை. பாங்கொக்கில் 1993 அக்டோபரில் இடம்பெற்ற உற்பத்தி நாடுகளின் கூட்டத்தின் போது, இந்த ஒப்பந்தத்தை முறித்து விடுவதில்லை என்றும், அதற்குள் இருந்து கொண்டே நுகர்வு நாடுகள் மீது கடுமையான நிபந்தனைகளை விதிப்பதன் மூலம் போராடுவது என்றும் உற்பத்தி நாடு கள் முடிவு செய்தன.

இரண்டாவது ஒப்பந்தத்தின் பொருளாதார ஷரத்துக்கள் மீண்டும் பேசித் தீர்க்கப்பட வேண்டும என உற்பத்தி நாடுகள் இப்பொழுது கருதுகின்றன. இந்நோக்கத்துக்கென 1994 ஆம் ஆண்டின் போது விலைகளை மீண்டும் பேசித் தீர்ப் பதற்கான மாநாடுகள் இடம்பெற்றன. குறிப்பு விலை உயர்வாக இருக்க வேண்டும் என்பதும், ஏழு அடுக்கு விலைகள் சுருக்கப்பட வேண்டும் என்பதும் உற்பத்தி நாடுகளின் பிரதான கோரிக்கைகளாகும். 'குறிப்பு விலை மூன்று சதவீதத்தினால் உயர்த்தப்படுவதனை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியுமென உற்பத்தி நாடுகள் தெரிவித்துள்ளன. உற்பத்தி நாடுகளுக்கும் நுகர்வு நாடுகளுக்கும் இடையிலான பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

( 6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புபடுகிறது. அடிப்படைத் தேவைகளை வழங்குவதில் மகளிர் முக்கிய பாத்திரத்தை வகிக்க வேண்டும் என்பதை அது அங்கீகரிக் கிறது. எனினும், இப் பாத்திரம் பெரும்பாலும் விசேடமாக பொரு ளாதார விதிமுறைகள், நாட்டின் பொருளாதாரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே வரை யறுக்கப்படுகிறது. இங்கு மகளிரின் பாத்திரம் உற்பத்தியாளர்கள் என்ற வகையில் உள்ளடக்கப்படுகிறது.

செயற்திறன் அணுகுமுறையின் அடிப்படைக் கவனம் மகளிரை அபிவிருத்தித் துறைக்கு இட்டுச் செல்வதில் செலுத்தப்படுகிறது. மூன்றாம் உலக நாடுகளின் மகளிர் பங்களிப்பு அதிகரிப்பு இயல்பாகவே சம அந்தஸ்தின் அதிகரிப்புக்கு வழி கோலும் என இதன் மூலம் கருதப் படுகிறது. இவ் அணுகுமுறை ஒரு மாதிரியாக நடைமுறைக்கு வந்த 1970 களின் நடுப் பகுதியில் உலக பொருளாதாரம் வீழ்ச்சி அடையத் தொடங்கியது. இச் சூழ்நிலைக்கு முகங்கொடுக்க சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பவற்றால் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார உறுதிப்படுத்தல், சீராக்கல் கொள்கைகளை பல நாடுகள் அமுல் நடத்தத் தொடங்கின. அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கைகள் எனக் கூறப்பட்ட இக்கொள்கைகள், சென்மதி நிலுவைச் சமநிலையை மீளமைத்தல், ஏற்றுமதி அதிகரிப்பு, வளர்ச்சி வீதத்தை மீளமைத்தல் என்பவற்றிற்காக வளங்களை மீளப் பகிர்தலுக்கு வழி வகுத்தது.

இன்று ஒரு பாணியாகக் கருதப் படும் (ஆனால், புதியதல்லாத) அதிகாரம் அளித்தல் அணுகுமுறை மகளிர் அடக்குமுறையில் காரணிகள், முனைப்பு மற்றும் கட்டமைப்பு என்பவற்றை இனங்கண்டு, மகளிரின் நிலையை மாற்ற வழி வகுக்கிறது. மகளிருக்கு அதிகாரம் அளித்தல் அல்லது மகளிரின் சுயாதிபத்தியம என்பதை ஒருவர் தனது சொந்த வாழ்க்கையை தானே கட்டுப்படுத்

( 37 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியில் சமூக பாதுகாப்பு

டப்.பீ.அமரபந்து
(குடிசனவியல் பயிற்சி, ஆராய்ச்சி அலகு,
கொழும்பு பல்கலைக் கழகம்)

## 1. இலங்கையின் சமூக பாதுகாப்பு

மனித வாழ்க்கையானது தனது இருப்புக் காலத்தில் நோய் வாய்ப்படுதல், இயலாமை, சக்தியின்மை, முதுமைத் தளர்ச்சி முதலிய பல்வேறுவகையான இடஞ்சல்களுக்கு முகம்கொடுத்து, இறுதியில் மரணத்தில் முடிவடைகிறது. பெரும்பாலான வளர்முக நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது, இலங்கை தனது சனத்தொகையில் மரண வீதம், நோய்வாய்ப்படுதல் முதலியவற்றினை வீழ்ச்சியுறச் செய்வதில் குறிப்பிடத்தக்க வெற்றியை கொண்டுள்ளது. எனினும் இயலாமை, சக்தியின்மை, முதுமைத் தளர்ச்சி என்பனவற்றின் சமூகத்தாக்கங்கள் பற்றி மேலும் அவதானம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. இந்த ஸ்திரமற்ற தன்மையின் இறுதிநிலை பெரும்பாலும் நோய் வாய்ப்படுதல், விபத்துக்கள், வன்முறை என்பனவாக பரிணமித்து, தனி மனிதனின் மீது பொருளாதார பளுக்களைச் சுமத்தி, முழுச் சனத்தொகையின் மீதும் பாரிய சமூக விளைவுகளை ஏற்படுத்கின்றன. இத்தகைய எதிர்பாராத விளைவுகளிலிருந்து மனித வாழ்வினை பாதுகாத்துக் கொள்வதற்கென பெரும்பாலான வளர்ச்சியடைந்த நாடுகள் பல்வேறு வகையான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளன. பெறத்தக்க நிதிவளங்களை பிரயோகித்து, காலப்போக்கில் அதனைக் கட்டியெழுப்பி, தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படும் செயல்முறை என சமூக பாதுகாப்பின் கோட்பாட்டை விபரிக்கலாம். சமூகத்தின் ஒவ்வொரு தனி மனிதனும் தனக்கு முடியுமான அளவில் நேரடியாகவோ அல்லது மறைமுக மாகவோ ஒரு பொது நிதிக்கு தனது பங்களிப்பைச் செய்வதுடன், ஏதோ ஒரு வகையில் அரசாங்கமும் அதனை குறைநிரப்பு செய்கின்றது. கால ஓட்டத்தில் கட்டி எழுப்பப் படும் வளநிதி சந்தர்ப்பம் வரும்போது சமூக பாதுகாப்பு நலன் என்ற வகையில் சமூகத்திற்குள் மீளப்பாச்சப்படுகிறது.

இலங்கையின் ஒழுங்குபடுத்தப்பட்ட முதலாவது சமூக பாதுகாப்புத் திட்டம், அரச ஊழியர் ஓய்வூதியத் திட்ட மாகும். இது சனத்தொகையின் ஒரு சிறு பகுதியினரான அரச ஊழியர் களுக்கு முதுமைக் காலத்தில் ஓய்வூதிய நன்மைகளை வழங்குகின்றது. ஊழியர் சேமலாப நிதி, அரச, தனியார் ஊழியர்களுக்கு ஓய்வு பெறும்பொழுது அல்லது இயலாமையின் பொழுது மொத்தமாக ஒரு தொகையை வழங்குகிறது. இத்துறையின் சமூக பாதுகாப்பு நலன்கள் ஊழியர் நட்ட ஈட்டுத் திட்டம், வேதனச் சபைக் கட்டளைகள், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், சேவைக்கால கொடுப்பனவுத் திட்டம் என்பன மூலம் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளன. எனினும், சனத்தொகையின் ஏனைய பிரிவினரைப் பொறுத்தவரையில், சமூகப் பாதுகாப்பு நோக்கு சமூகத்தில் பரவலாக முன்னெடுத்துச் செல்லப் படவில்லை.

அதேசமயம் வங்கி முறை சேமிப்புக் கணக்கு வ்சதிகளை வழங்குகிறது. இதன் மூலம், மக்கள் தமது உழைப்பின் ஒருபகுதியை தமக்கு இயலுமான பொழுது சேமிக்கவும், காலப் பிரிவில் வட்டியாக பெற்றுக் கொள்ளவும் இயலுவதனால் தேவை ஏற்படும்பொழுது பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரு வளமாக இது கருதப்படுகின்றது. உண்மையில் இது உறுதியான சமூக பாதுகாப்பு கோட்பாடுகளின் அவதானத்தின் அடிப்படையில் நிர்ப்பந்தமாக செய்யப்படாவிடினும், காலத்தையும் வட்டியையும் அடிப்படையாகக் கொண்டு சனத்தொகைக்கு ஏதோ ஒரு வகையிலான சமூக பாதுகாப்பை வழங்குகிறது. ஆயுட்கால, விபத்து, சுகாதார காப்புறுதி வசதிகளை அறிமுகப்படுத்தியுள்ள காப்புறுதி நிறுவனங்கள் மேலும் முன்சென்று, வாழ்வின் ஸ்திரமற்ற தன்மையின் அபாய ஏதுவை கவனத்தில் எடுத்து அத்தகைய சந்தர்ப்பங்களில் காப்புறுதி செய்யப்பட்டவர்களுக்கு நட்டஈட்டினை வழங்குகின்றன. இடர்கள் ஏற்படாவிடின் காப்புறுதி முதிர்ச்சியடையும் பொழுது காப்புறுதிப் பணம் மீள அளிக்கப்படுகின்றது. வங்கிகள் பல்வேறு வகையான சேமிப்புத் திட்டங்களை ஓய்வூதிய, காப்புறுதி நோக்கின் அடிப்படையில் அறிமுகப் படுத்தியுள்ளன. இவ்வாறு வங்கிகளும் காப்புறுதி நிறுவனங்களும் கடந்த காலங்களில் சமூக பாதுகாப்பு சிந்தனைப் போக்கினை அறிமுகப் படுத்திய போதிலும், அவை சனத்தொகையின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவினருக்கு மட்டும் பெருமளவில் அல்லது குறைந்தளவில் நன்மை பயக்கின்றன.

இலங்கை சனத்தொகையின் முறை சாரா துறையினருக்கு அரச அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட முதல் சமூக பாதுகாப்பு முயற்சி விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டமாகும். 1987 இல் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப் பட்ட இத்திட்டத்தின் கீழ் தற்சமயம் சுமார் 235,000 விவசாயிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்துவம் பெற்றுள்ளனர். இத் திட்டம் 1991 இல் மீனவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. தற்சமயம் இந்த சமூக பாதுகாப்புமுறை சனத்தொகையின் 25 வீதத்தை (1991 இன்படி) பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், முறைசாரா துறையில் சுயதொழில் செய்வோர், தொழிலாளர்கள் என்போரையும் ஓய்வூதிய நன்மைகள் அற்ற வகையில் உள்ளடக்கத்திட்டமிடப்பட்டுள்ளது. திட்டமிட்டபடி இம்முறையின் கீழ் சுமார் 15 இலட்சம் சுயதொழில் புரிவோர் நன்மை அடைவர். இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் சமூக பாதுகாப்புத்திட்டம் கணிசமானளவு கவனத்தை ஈர்த்துள்ள இவ்வேளையில், இச் சிந்தனைப் போக்கை சனத்தொகை, நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி என்பனவற்றின் அடிப்படையில் நோக்குவது சாலப் பொருத்தமுடையதாகும்.

### 2. முறைசாரா துறை

பொருளாதார கொள்கையைப் பொறுத்தவரையில் சிறு வேறுபாடுகள் காணப்பட்டாலும், பொதுவாக எல்லா அரசாங்கங்களும் நாட்டின் பொருளாதாரத்தில் முறைசாராத் துறையின் முக்கியத்துவத்தை அங்கீகரித்துள்ளன. சுய நம்பிக்கையும் உற்பத்தி நோக்கமும் கொண்ட முறைசாரா தொழில் துறையினர் பொருளாதார அபிவிருத்திக்கு பெருமளவு பங்களிப்பைச் செய்கின்றனர். அதே சமயம் முறைசாரா துறையினர் பெரும்பாலும் தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பல்வேறு சமூக-பொருளாதார அபாய ஏதுக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

### 3. பொருளாதார அபாய ஏதுக்கள்

ஒரு வகையான நிச்சயிக்கப்பட்ட வருமானம்பெறும் முறைசார்ந்த துறையினருடன் ஒப்பிடும் பொழுது முறை சாரா துறையினர் பொருளாதார ரீதியில் மூலதன முதலீட்டு அபாய ஏது, சந்தை சக்திகளின் தீய பாதிப்புகள், தொழில் முயற்சிகளின் அபாய ஏதுக்கள் என்பவற்றிற்கு முகங்கொடுக்கின்றனர். பொருளாதார ரீதியில் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியின் பின்புலத்தில் முதலீட்டு ஊக்கு விப்புக்கள், உற்பத்தி மானியங்கள், நட்டங்களை ஈடு செய்யத்தக்க பொருத்தமான காப்புறுதித் திட்டங்கள், விலை ஸ்திரத்தன்மை முதலிய நடவடிக்கைகளின் மூலம் இவற்றிற்கு உதவி அளிக்க முடியும்.

### 4. சமூக அபாய ஏதுக்கள்

சமூக ரீதியில் முறைசாராத் துறை செயற்திறன் மிக்க சமூக பாதுகாப்பு முறையொன்று இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில், முறை சார்ந்த துறை தொழில்கள், பல்வேறு திட்டங்கள் மூலம் செயலிழப்பு, ஓய்வு மற்றும் முதுமைக்கால நலன் காப்பு போன்ற பரவலான சமூக பாதுகாப்பு முறைக்கு உரித்துடையதாக உள்ளது. ஏற்கனவே அமுல் நடத்தப்பட்டுள்ள மற்றும் தற்சமயம் திட்டமிடப்பட்டுள்ள சமூக பாதுகாப்புத் திட்டங்கள் என்பன சுய தொழில்துறை குழுவினருக்கு சமூக பாதுகாப்பினை வழங்க உதவியாக விளங்கும். முறைசார்ந்த துறையினருடன் ஒப்பிடும் பொழுது, முறைசாராத துறையிலுள்ளவர்களுக்கு வழங்கப்படும் சமூக பாதுகாப்பு ஓரளவுக்கு அவர்களின் தொழிலில் காணப்படும் பாதுகாப்பு அற்ற தன்மை பற்றிய பயத்தினை நீக்குவதாக அமைகிறது.

### 5. சுயதொழில்

திறந்த பொருளாதாரத்தைக் கடைப்பிடிக்கும் வளர்முக நாடுகளின் வேலையில்லாத் திட்டத்திற்கு சாத்தியமான தீர்வாகக் கருதப்படும் சுய தொழில் துறைக்கு தற்சமயம் வெகுவாக அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. முக்கியமாக சுய தொழில் மூலம் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தும் நோக்கத்துடன் புறக்கணிக்கப்பட்ட சமூகக் குழுக்களின் திறன்களை சுய உதவித் திட்டங்கள் (சனசவிய) மூலம் அடையாளம் காணல், உயர்வடையச் செய்தல், பயிற்சி அளித்தல், அபிவிருத்தி அடையச் செய்தல் முதலிய திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மக்களை சுயதொழிற் துறைக்கு ஆற்றுப்படுத்தல் செய்யும் பொழுது, பொருளாதார அபாய ஏதுக்களை குறைக்கும் அதேசமயம், சமூக பாதுகாப்பு அளிப்பதன் முக்கியத்துவத்தினையும் அங்கீகரிப்பது அவசியமாகும்.

### 6. சமூக கலாசார மதிப்புக்கள்

பெரும்பாலான மேற்கத்திய நாடுகள் தமது சனத்தொகைக்கான சமூக பாதுகாப்பை ஆயுட்கால கொடுப்பனவு, காப்புறுதி, ஓய்வூதியம் முதலிய பல்வேறு வகையான

**அட்டவணை 1**
**குடிசனவியல் குறிகாட்டிகள்**

| | சிறுவர் தங்கியிருப்பு விகிதம் | வயோதிபர் தங்கியிருப்பு விகிதம் | முதுமைச் சுட்டெண் |
|---|---|---|---|
| 1963 | 79.0 | 11.4 | 14.5 |
| 1971 | 71.3 | 11.5 | 16.2 |
| 1981 | 60.5 | 11.3 | 18.8 |
| 1991 | 51.4 | 13.3 | 26.0 |
| 2001 | 39.9 | 15.4 | 38.5 |
| 2011 | 36.4 | 19.8 | 54.5 |
| 2021 | 34.1 | 27.5 | 80.6 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிவர திணைக்களம்; குடித்தொகைப் பிரிவு, சுகாதார, மகளிர் விவகார அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்கள் மூலம் செயற்படுகின்றன. இவற்றிற்கு மேலதிகமாக முதியோர், வலது குறைந்தோர்களுக்கான பராமரிப்பு இல்லங்கள் முதலிய அமைப்புக்களையும் அரச, தனியார் துறையினர் நடாத்தி வருகின்றனர். இவை வளர்ச்சி அடைந்த நாடுகளின் தனிப்பட்ட ரீதியான சமுதான அமைப்பின் பயனாக ஏற்பட்ட சமூக மாற்றங்களுக்கு ஒத்தவையாகும். இந்நாடுகளில் பிள்ளைகள் தமது பெற்றோரை வீட்டில் வைத்து பராமரிக்கும் பண்பு ஒரு சமூக நடைமுறையாக இல்லாதிருப்பதால், பெரும்பாலான பெற்றோர்கள் வயோதிப இல்லங்களை நாடுவது ஒரு பிரதியீடாக கருதப்படுகின்றது. இந்நாடுகள் தமது பொருளாதார குறிக்கோள்களை ஈட்டுவதில் போதுமான சாதனைகளைச் சாதித்துள்ளபோதிலும் இன்னொருவகையில் அவர்கள் பல சமூகப் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளனர். இலங்கையைப் பொறுத்தவரையில் இச்சமூகத்தின் ஆரோக்கிய வாழ்விற்கு சமூக கலாசார மதிப்புக்களை பேணிக் காப்பது அத்தியாவசியமாக கருதப்படுவதுடன், பிரதானமாக சமூக ரீதியில் நிலைக்கத்தக்க அபிவிருத்தியின் முதற்படியில் இன்றியமையாத் தேவையாகவும் நோக்கப்படுகின்றது. எனவே, முதியோர் இல்லங்கள் நிர்மாணித்தலும் வயோதிபர்கள் அத்தகைய இடத்தில் வாழ்வதும் சமூக நலத்திற்கு உகந்ததாக கருதப்படமாட்டாது. வயோதிபர் இல்லங்கள் நிர்மாணித்தல் பெருமளவு மூலதனச் செலவுக்கு வழி வகுப்பது மட்டுமன்றி குடும்பப் பாரம்பரியக் கடப்பாடுகளைத் தளர்த்தி, பல்வேறு வகையான சமூக பிரச்சினைகளுக்கும் வழிவகுக்கும். எனவே, அவர்கள் பூரண சுதந்திர முடையவர்களாகவோ அல்லது பூரணமாக தங்கி வாழ்பவராகவோ மாறாமல் அவர்களுக்கு ஓரளவு கணிசமான நிதி உதவியை வழங்குவது விரும்பத்தக்கதாகும். இக்கணிசமான நிதி உதவி மூலம் அவர்களை தமது இல்லத்தில் வைத்து பிள்ளைகள் பராமரிக்க முடியும். வயது முதிர்ந்த பெற்றோர் தமது பேரன் பேத்திகளை பராமரித்து, குடும்பத்தில் நெருங்கிய பிணைப்பை வலுப்படுத்த இது உதவும். வயோதிபருக்கு கணிசமான தொகையை நிதி உதவியாக வழங்குவது அரச பணத்தை நன்கொடையாக வழங்கும் ஒரு மானிய முறையாக இருக்க வேண்டியதில்லை. இது ஒருவர் தனது இளம்பருவத்தில் சம்பாதித்த வருமானத்தின் ஒரு பகுதியை வழங்கியதன் மூலம் உருவான நிதியின் அனுகூலங்களை வயோதிப காலத்தில் பெற்றுக் கொள்ளும் சமூக பாதுகாப்புத் திட்டமாக கொள்ளப்பட வேண்டும். இத்தகைய பங்களிப்பு வகையிலான சமூகப் பாதுகாப்பு திட்டங்களுக்கு ஓரளவில் அரச மானியங்கள் வழங்கப்படுவதன் மூலம் சமூக பாதுகாப்பின் தேவைப்பாடுகள் நிவர்த்தி செய்யப்படும்.

**6. தேசிய சமூக பாதுகாப்பு மற்றும் ஓய்வூதிய திட்டத்தின் அவசியம்.**

மேற்குறிப்பிட்டவாறான சமூக ரீதியில் நிலைக்கத்தக்க அபிவிருத்தியின் நோக்கில் சமூக பாதுகாப்பின் அவசியம், சனத்தொகையின் எல்லாப் பிரிவினரையும் உள்ளடக்கிய ஒரு தேசிய ரீதியான சமூக பாதுகாப்பு திட்டமொன்றை உருவாக்குவதை வலியுறுத்துகின்றது. இப்பிரிவுகள் ஆயுட்கால நன்மைகளை வேண்டி நிற்பதுடன், அவ்வாறான எவ்வித நன்மைகளையும் பெறமுடியாத நிலையில் இருந்து வருகின்றன. இத்தகைய ஒரு தேசிய திட்டம் ஒன்றின் அவசியத்தை இலங்கையின் சனத்தொகை அமைப்பின் பின்னணியிலும் எம்மால் உணர முடிகின்றது. பிறப்பு, இறப்புவீத வீழ்ச்சிப் போக்கு, ஆயுட்கால நீடிப்பு என்பன இலங்கையின் சனத்தொகையின் குறிப்பிடத்தக்க போக்குகளாகும். கடந்த மூன்று தசாப்தங்களின் தரவுகளும் அடுத்துவரும் மூன்று தசாப்தங்களுக்கான சில சனத்தெரகை எறியங்களும் இத்தகைய போக்குகளை வெளிப்படுத்துகின்றன.

சனத்தொகையின் 15 வயதிற்கும் 59 வயதிற்கும் இடைப்பட்ட 100 பேர்களில் 15 வயதிற்குட்பட்டவர்களின் தொகை தொடர்ச்சியான வீழ்ச்சியைக் காட்டுகிறது. அதே வேளையில் வயோதிபர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 2001 ஆம் ஆண்டில் சனத்தொகையில் தலா 15 பேருக்கு ஒருவர் 65 வயதிற்கு மேற்பட்டவராக இருப்பதுடன், 2021 இல் இது ஒன்பது பேருக்கு ஒருவராக மாற்றமடையும். வயோதிப சனத்தொகைக்கு சமூக காப்பினை வழங்குவதில் தேசிய வரவு செலவுத்திட்டம் சுமக்க வேண்டியுள்ள பளுவினை சனத்தொகை மதிப்பீட்டு ரீதியில் குறிப்பிடப்பட்டுள்ள முதுமைக் கால பராமரிப்பு விகிதாசார மூலமும் அடையாளங்காண முடியும். எனினும், சமூக ரீதியில் நிலைக்கத்தக்க அபிவிருததிக்கு இத்தகைய சமூக நலன் முறைகள் அவசியமானவையாகும். இத்தகைய சுமையை நிவர்த்திக்கும் ஒரு வழி, வயோதிபர்கள் தமது இளமைக் கால சம்பாத்தியத்திலிருந்து பங்களிப்பு செய்யும் தேசிய சமூகப் பாதுகாப்பு ஓய்வூதித் திட்டமாகும். இதில் அரசு குறைநிரப்புச் செய்யவும் முடியும். அத்தகைய திட்டம் ஒன்று உருவாக்கப் படும் பொழுது கருத்திற் கொள்ள வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில், தேவை ஏற்படும் பொழுது இத்திட்டத்தின் பலன்களை பெறத்தக்கவகையில் அவர்களை இத்திட்டத்தில் சேரவும், நிலைத்து நிற்கவும் வாய்ப்பு அளிப்பதாகும். இல்லையெனில் இத்திட்டம் ஒரு எட்டாக்கனியாக திகழ்ந்து, ஒரு கோட் பாட்டு அப்பியாசமாக முடிவடையக் கூடும்.

( 34 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துதல் என வரையறுத்துக் கூறலாம். இக் கோட்பாடு ஒவ்வொரு தனி நபரினதும் அதிகாரம், சுய நிர்ணயம், சுதந்திரம், வாய்ப்பு என்பவற்றைக் குறிக்கிறது. எனினும், இக்கோட்பாடு இலங்கை உட்பட எந்தவொரு மூன்றாம் உலக நாட்டினதும் அரச கொள்கை உருவாக்கலில் குறிப்பிடத் தக்க தாக்கத்தை இதுவரை ஏற்படுத்த வில்லை.

இவ் அணுகுமுறை மேற்கிலிருந்து சுமத்தப்பட்ட கோட்பாடு அல்ல; மகளிர் பல்வேறு நிலைகளில் தமக்கு எதிரான அடக்குமுறை அமைப்புகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் சவாலாகத் திகழ வேண்டும் என்பதையே இக்கட்டுரை பிரதானமாக நிர்ப்பந்திக்கிறது. இவ் அணுகுமுறை அதிகாரம், அபிவிருத்தி என்பவற்றிற்கு இடையிலான பரஸ்பர

( 45 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சந்தை - நட்பு" கொள்கைகள் : ஒரு மதிப்பீடு

கலாநிதி லால் ஜயவர்தன

கலாநிதி லால் ஜயவர்தன தற்பொழுது இலங்கை ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகராக பணியாற்றி வருகின்றார். முன்னர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் பொருளியல் விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகமாகவும் (1982-85), பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸம்பேர்க் ஆகிய நாடுகளுக்கான (1978-82) தூதுவராகவும் அவர் கடமையாற்றியுள்ளார். தனது 41 ஆவது வயதில் திறைசேரியினதும் நிதி, திட்டமிடல் அமைச்சினதும் செயலாளர் (1975-1978) பதவியை வகித்த பெருமையும் அவருக்குண்டு.

வெற்றிகரமான பொருளாதார கொள்கை ஆக்கத்தின் மிக முக்கியமான ஒரு சிறப்பம்சம் காற்று வீசும் திசைக்கு ஏற்ப வளைந்து கொடுப்பதற்கான விருப்பமாகும்; அல்லது எல்லோரும் செல்லும் திசையிலிருந்து விலகிச் செல்வதற்கான ஆற்றலாகும். தற்பொழுது நிலவி வரும் பாரம்பரிய அமைப்புக்கள் குறித்து விமர்சன ரீதியாக நோக்குவதற்கும், ஆதரித்துப் பேசுபவர்களும் விமர்சகர்களும் நேர்மையான பகிரங்க விவாதத்தில் ஈடுபடக் கூடிய அரங்கமொன்றை ஸ்தாபிப்பதற்கும் என ஆராய்ச்சி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. பல்வேறு சித்தாந்தப் பள்ளிகளுக்கிடையிலான கருத்து மோதல்களிலிருந்து சமூகம் குறித்த ஒரு சிறந்த புரிந்துணர்வு தோன்றும் என்றும், அந்த நிலையில், பொருளியலாளர்கள் சிறந்த முறையில் பரிகாரங்களை விதித்துரைக்க முடியும் என்றும் எப்பொழுதும் நம்பப்பட்டு வந்துள்ளது. நான் கடந்த எட்டாண்டுகளாக அபிவிருத்திப் பொருளியல் ஆராய்ச்சிக்கான உலக நிறுவனத்தில் (WIDER) பணியாற்றி வந்துள்ளேன். இதுவே அங்கு நான் பெற்றுக்கொண்ட அனுபவமாகும். புதிய சாஸ்திரீய, கீனீசிய மற்றும் அமைப்பியல்வாத அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த பொருளியலாளர்களும் ஏனைய சமூக விஞ்ஞானிகளும், மானிடவியலாளர்களும், வரலாற்றாசிரியர்களும், தத்துவ ஞானிகளும் அரசியல் விற்பன்னர்களும் தமக்கு உசிதமான ஒரு இடம் என இந்நிறுவனத்தை கருதிக் கொள்ளக் கூடிய விதத்தில் அது தொடக்கத்திலேயே வடிவமைக்கப்பட்டிருந்தது. அவர்கள் அடிப்படை நாகரிகத்துடனும், சகிப்புத் தன்மை இயல்புடனும் ஒருவருடன் ஒருவர் உரையாடிவர வேண்டும் என்பது மட்டுமே அங்கு நிலவிய ஒரேயொரு நிபந்தனையாகும்.

இந்த நிறுவனத்தில் நான் கலந்து கொண்ட இறுதி ஆய்வு மாநாடு, உலக வங்கியின் ஆராய்ச்சித் திணைக்களத்தின் அனுசரணையினால் ஏற்பாடு செய்யப்பட்டு 1993 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி நடைபெற்றது. உலக வங்கியினால் ஆதரித்துப் பேசப்பட்டு வரும் அபிவிருத்தி சித்தாந்தம் மீது 'WIDER' நிறுவனத்தின் ஆராய்ச்சி அமைப்புக்களினால் முன் வைக்கப்பட்டிருந்த ஆக்கபூர்வமான விமர்சனங்கள் குறித்து கலந்துரையாடுவதே இந்த மாநாட்டின் நோக்கமாக இருந்தது. உலக வங்கியின் இந்த அபிவிருத்தி சிந்தாந்தம் "சந்தை-நட்பு" கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இந்த விடயம் தொடர்பாகவே நான் இப்பொழுது கவனம் செலுத்த விரும்புகிறேன். "சந்தை-நட்பு" கொள்கைகள் என்பதன் பொருள், அரசாங்கங்கள் சந்தைகளை அகற்றி விடுவதற்குப் பதிலாக அவற்றுக்கு நேரடியாக ஆதரவினை வழங்கும் ஒரு கட்டமைப்பாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சந்தைகளுடன் பகைமை பாராட்டாமல் நட்புணர்வுடன் நடந்து கொள்வதாகும். உலக வங்கி பொருளியலாளர்கள் இதனை மிகச் சிறந்த முறையில் சுருக்கமாக எடுத்து விளக்கியுள்ளனர்:

"அரசாங்கங்கள் தம்மால் சிறந்த முறையில் செய்ய முடியாத பல வேலைகளை - அதாவது, சந்தைகளை ஒழுங்கு படுத்துவது, பொருட்களை உற்பத்தி செய்வது போன்றவற்றை - மிதமிஞ்சிய அளவில் செய்து வந்துள்ளன. ஆனால், மிகச்சிறந்த முறையில் அவை செய்யக்கூடிய பேரண்டப் பொருளியல் உறுதிப்பாட்டினை பராமரித்தல், அவசியமான பொது முதலீடுகளை மேற்கொள்ளல் போன்ற பணிகளை அவை சிறிதளவில் மட்டுமே நிறைவு செய்துள்ளன. அரசாங்கங்கள் பல பணிகளை குறைவாக, ஆனால், சிறந்த முறையில் மேற்கொள்ள வேண்டிய தேவை இருந்து வருகின்றது."

சந்தை நட்புக் கொள்கை கட்டமைப்புக்குள் மானிட அபிவிருத்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நலன் போன்ற துறைகளிலும், அத்தியாவசியமான சமூக உள்கட்டமைப்பு வசதிகளிலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் அரசாங்கத்தின் தலையீடு வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும். இது தனியார் துறைக்கான மூலவள ஒதுக்கீட்டுப் பணியினை பெருமளவுக்கு சந்தைச் சக்திகளின் கைகளில் விட்டுவிடும். உண்மையிலே இந்தக் கட்டமைப்பு மோசமானது என்று கூறிவிட முடியாது. குறிப்பிடட சில சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் இது வியப்பூட்டத் தக்க பல சாதனைகளை எடுத்துவர முடியும். முக்கியமாக, 1977 ஐ உடனடுத்த காலகட்டத்தின் இலங்கையின் பொருளாதார செயற்பாடுகள் இதனை நன்கு நிரூபித்துக் காட்டுகின்றன. அப்பொழுது நான் திறைசேரியின் செயலாளராக கடமையாற்றி வந்தேன். இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வடிவமைப்பதில் சம்பந்தப்படும் நல்வாய்ப்பு அந்தப் பதவி வழியில் எனக்குக் கிட்டியிருந்தது. இலங்கையில் சுமார் மூன்று தசாப்த காலமாக குறிப்பிட்ட ஒரு திசையை நோக்கி வீசிக் கொண்டிருந்த காற்றுக்கு எதிர்த் திசையில் பயணிக்கத் தொடங்கியமையே இந்த அணுகுமுறையின் அடிப்படைக் கூறாக இருந்தது. சந்தை-நட்பு கொள்கைகளின் - நான் இங்கு இலங்கை குறித்துப் பேசவில்லை; பொதுவாகப் பேசுகிறேன்- பிரச்சினை அதன் அடிப்படை கோட்பாட்டுக் கட்டமைப்புடன் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. இதனை செயற்படுத்துவதற்கான ஊடகம் உறுதிப்படுத்தல் மற்றும் சீராக்கல் என்பன மீதான வாஷிங்டன் கருத்தொற்றுமை (Washington Consensus) என பொதுவாக வர்ணிக்கப்படுகிறது. இந்தக் கருத்தொற்றுமை பிரெட்டன்வூட்ஸ் நிறுவனங்கள், சர்வதேச நாணய நிதியம் உலக வங்கி என்பவற்றுக்கு மட்டும் பொதுவானதாக இருந்து வந்துள்ளது. வாஷிங்டனை மையமாகக் கொண்ட பல்வேறு கீர்த்திமிக்க சிந்தனைக் குழாம்களுக்கும் பொதுவான ஒரு கருத்தொற்றுமையாக இது இருந்து வருகின்றது. இந்த வாஷிங்டன் கருத்தொற்றுமை ஐந்து அடிப்படை கோட்பாடுகளுடன் சம்பந்தப்பட் டுள்ளது:

1. வரவு செலவுத்திட்டத்தை சமநிலையில் வைத்தல் ;

2. சார்புரீதியில் விலைகளை திருத்தியமைத்தல். இது செலாவணி விகிதத்தை சீராக்கம் செய்து கொள்வதுடன் சம்பந்தப்பட்டுள்ளது. வழமையாக நாணயப்பெறுமதி இறக்கம், வட்டிவீத அதிகரிப்பு என்பன இவற்றுடன் இணைந்து வருகின்றன.

3. வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு முதலீடு என்பவற்றை தாராளமயமாக்குதல்: இறக்குமதி கட்டுப்பாடுகளை ஒழித்தல், வெளிநாட்டு முதலீடுகளுக்கான திறந்த கதவுக் கொள்கை ஒன்றுடன் இணைந்த விதத்தில் தீர்வைகளை படிப்படியாகக் குறைத்தல் என்பவற்றுடன் இது சம்பந்தப்பட்டுள்ளது.

4. தனியார்மயமாக்கல்: உற்பத்தி சார் தொழில் முயற்சிகளில் அரச உரித்தினை ஒழிப்பதுடன் இது சம்பந்தப்பட்டுள்ளது.

5. உள்நாட்டுச் சந்தையை ஒழுங்கு படுத்துதல்.

உண்மையிலேயே, சந்தை-நட்புக் கொள்கைகளை வாஷிங்டன் கருத்தொற்றுமையை அமுல் செய்வதற்கு ஒப்பானவை என வரைவிலக்கணம் செய்ய முடியும். இந்தக் கட்டமைப்பு இரண்டு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றது. முதலாவதாக, வாஷிங்டன் கருத்தொற்றுமைக்குள் வரவு செலவுத்திட்டத்தை சமநிலையில் வைத்தல் என்பது, (சந்தைகள் நிறைவேற்றத் தவறும்) மானிட அபிவிருத்தி மற்றும் பொதுக் கட்டமைப்பு வசதிகள் என்பவற்றின் மீதான அத்தியாவசிய செலவுகளுடன் முரண்பட்டுச் செல்ல முடியும். ஆனால், இந்த நடவடிக்கைகளுக்குப் போதியளவில் வெளிநாட்டு நிதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டால் இந்த முரண்பாடு தோன்றாதிருக்கலாம். இரண்டாவது பிரச்சினை கிழக்காசியாவில் புதிதாகத் தொழில் வளர்ச்சி கண்ட நாடுகளின் மாபெரும் வெற்றியின் பின்னணியிலிருந்த மாற்றுக் கொள்கை கட்டமைப்பினை செயற்படுத்துவதில் அது பல விடயங்களில் முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றது என்பதாகும். இங்கு நான் கொரியா, தாய்வான், ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளையே குறிப்பிடுகிறேன். இந்த நாடுகளின் மும்மாதிரியை மலேசியா, தாய்லாந்து மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகள் மிகுந்த ஆர்வத்துடன் பின்பற்றி வருகின்றன.

### சந்தை-நட்புக் கொள்கைகளும் வரவு செலவுத்திட்ட சமநிலையும்

இந்த ஒவ்வொரு பிரச்சினையையும் தனித்தனியாக எடுத்து நோக்க விரும்புகிறேன். முதலாவது பிரச்சினையைப் பார்ப்போம்; அண்மையில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில், சோஷலிஸத்துக்கான லெனின் வரைவிலக்கணத்தை -அதாவது மின்மயமாக்கல் + சோவியத்துக்கள் = சோஷலிஸம் என்ற வரைவிலக்கணத்தை - நினைவு கூர்ந்த கலாநிதி காமினி கொரியா, அபிவிருத்தி குறித்த தனது சொந்த சமன்பாட்டை சமர்ப்பித்தார். என்னைப் பொறுத்தவரையில் அது மிகவும் கவர்ச்சிகரமான ஒரு சமன்பாடாக தென்பட்டது. "திறன்கள் + உள்கட்டமைப்பு வசதிகள் = அபிவிருத்தி" என அவர் குறிப்பிட்டார். இந்த இரண்டு துறைகளிலுமே வழமையாக சந்தைகள் தோல்வியடைந்து வருகின்றன. எனவே, இவற்றுக்கு பொது முதலீடு அவசியமாகும். சந்தை-நட்பு கட்டமைப்பு அதன் கோட்பாட்டு ரீதியான மட்டத்தில் அவசியமான பொதுத்துறை தலையீட்டுக்கு ஏற்பாடுகளை கொண்டுள்ளதுடன், நடைமுறையில், வரவுசெலவுத்திட்ட சமநிலையை எடுத்துவரும் பொருட்டு, பொது முதலீட்டுச் செலவுகளை தியாகம் செய்ய வேண்டிய ஒரு நிலைமை நிலவி வருகின்றது. உதாரணமாக, 1980 களின் போது வெளிச் சூழ்நிலை தொடர்ச்சியாக சீர்குலைந்து வந்த ஒரு பின்னணியில், இந்த வரவு செலவுத்திட்ட சமநிலை செலவுகளை பலமுறை முடக்க வேண்டி ஏற்பட்டது. ஆரம்ப பண்டங்கள் (உ-ம் கோப்பி, கொக்கோ) உற்பத்தி செய்து, ஏற்றுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வரும் ஒரு வளர்முக நாடு வெளி அதிர்ச்சிகளை எதிர்கொள்ளும் பொழுது சங்கிலித் தொடராகப் பல தாக்கங்கள் தோன்றுகின்றன. முதலில், அந்நாட்டின் ஏற்றுமதி சம்பாத்தியங்களில் செங்குத்தான ஒரு வீழ்ச்சி ஏற்படுகின்றது. இரண்டாவதாக, பணத்தை அச்சிடுவதன் மூலம் வரவுசெலவுத் திட்டச் செலவுகளை பராமரித்து வருவதற்கு ஒரு வீண் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. மூன்றாவதாக, ஒதுக்குகள் தீர்ந்து வரும் பொழுது இறக்குமதிகள் மிகக் கடுமையான முறையில் கட்டுப்படுத்தப் படுவதுடன், அதனை உடனடுத்து, பொருளாதாரத்தில் பல திரிபுகள் தோன்றுகின்றன. இவை நீடித்துச் சென்றால், அதன் விளைவாக உயர் அளவில் பணவீக்கம் ஏற்பட முடியும். இந்த நிலையில், சம்பந்தப்பட்ட நாடு உடனடியாகவோ அல்லது சற்று தாமதமாகவோ பிரெட்டன்வூட்ஸ் நிறுவனங்களுடன் உறுதிப்படுத்தல் மற்றும் சீராக்கல் நிகழ்ச்சித்திட்ட மொன்றை பேசித் தீர்ப்பதற்கு நிர்ப்பந்திக்கப் படுகின்றது. இந்த நிலையில், நிதிச் சமநிலையை எடுத்து வருவதற்கு அந்நாட்டுக்கு உடனடியாக கிடைக்கும் வழி, மானிட அபிவிருத்திச் செலவுகளை தியாகம் செய்வதாகும். இந்தக் கொள்கையின் மிக மோசமான பின்விளைவுகள் ஐ.நா.மன்றத்தின் அமைப்புக்களாலும் 'WIDER' நிறுவனத்தாலும் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகளில் விரிவாக எடுத்து விளக்கப்பட்டுள்ளன. டான்சானியா குறித்த 'WIDER' நிறுவனத்தின் ஆய்வு இதற்கான ஒரு சிறந்த உதாரணமாகும். சீராக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அந்நாட்டின் அபிவிருத்தி செலவினங்கள் மிகக் கடுமையான முறையில் குறைக்கப்பட்டதனால் கல்வி, சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதிகள் போன்றவற்றின் விரிவாக்கத்தினை - அவற்றுக்கான தேவைகள் அதிகரித்து வந்த போதிலும்-அது நிறுத்திக் கொண்டது.

உலக வங்கியினாலும் 'WIDER' நிறுவனத்தினாலும் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கத்தில் உரை நிகழ்த்திய இஸ்ரேல் வங்கியின் முன்னாள் ஆளுநரான கலாநிதி மைக்கல் புரூனோ, பொதுத்துறை உள் கட்டமைப்பு வசதிகளுக்கான முதலீடுகளும் இவ்விதமாக ஊறுபடத் தக்க நிலையில் இருந்து வருகின்றன என்பதனை சுட்டிக் காட்டினார்:

" மாற்று வரி ஏற்பாடொன்று இல்லாத ஒரு நிலையில், வரவு செலவுத் திட்டத்தை சமநிலையில் வைத்துக் கொள்வதற்கான நெருக்குதல், அரசியல் ரீதியான எதிர்ப்பு மிகவும் குறைவாகக் காணப்படும் சில துறைகளில் செலவினங்கள் வெட்டப் படுவதற்கு வழிகோலுகின்றது. ஆனால், இது தொடர்பான நீண்டகால பொருளாதார நட்டம் ஈடு செய்ய முடியாததாகும். இதற்குக் காரணம், குறிப்பாக (பாதைகள், தொலைத் தொடர்பு வசதிகள் போன்ற) உள்கட்டமைப்பு வசதிகள் மீதான முதலீடுகள் வெட்டப்பட்டு வருவதாகும். அரசாங்கத்தின் தலையீடு அத்தியாவசியமாக இருந்துவரும் துறைகளில் இது ஒன்றாகும். நீண்ட காலத்தில் தனியார் தொழில் முயற்சிகளின் வளர்ச்சிக்கும் இந்த உள்கட்டமைப்பு வசதிகள் அவசியமாகும்."

கலாநிதி புரூனோ சமீபத்தில் உலக வங்கியின் முதன்மை பொருளியலாளராகவும், வங்கியின் ஆராய்ச்சித் திணைக்களத்தின் உப தலைவராகவும் நியமனம் செய்யப்பட்டார். இது எதிர்கால பொருளாதார சீர்திருத்தங்களின் கண்ணோட்டத்தில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நியமனமாகும். பொருளாதார சீராக்கலின் சமூகப் பரிமாணங்களை பிரெட்டன் வூட்ஸ் நிறுவனங்கள் அங்கீகரிப்பது அவசியம் என ஐ.நா.வின் பல அமைப்புக்கள் கேட்டுக் கொண்டுள்ளன. மானிட அபிவிருத்தி மற்றும் அத்தியாவசிய உள்கட்டமைப்பு என்பவற்றிலான இடைவெளியை கொடை வழங்கும் சமூகம் நேர்மையுடன் எதிர்கொள்ள வேண்டும். வெளி அதிர்ச்சிகளின் விளைவாக ஒரு நாடு பொருளாதார கஷ்டங்களுக்குள் சிக்கும் பொழுது, செலாவணி விகிதம் மற்றும் வட்டி விகிதம் என்பன தொடர்பாக முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் தோன்றுகிறது. இந்தப் பிரிவுகளில் போதிய அளவுக்கு சீராக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்தால், கொடையாளிகள் வழங்கும் வெளி உதவியை ஓர் இருட்டுப் பொந்துக்குள் பணத்தைக் கொட்டுவதாகவே கருத வேண்டியுள்ளது. இந்த அச்ச உணர்வு காரணமாகவே "குழு-7" நாடுகள் முன்னைய சோவியத் யூனியனுக்கு உதவி வழங்குவதற்கு தயக்கம் காட்டி வந்தன.

**நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி**

மறுபுறத்தில், எதிர்பாராத வெளி அதிர்ச்சி ஒன்றின் விளைவாக வளர்முக நாடொன்று கஷ்ட நிலையில் சிக்கிக் கொள்ளும் பொழுது, தனது பொருளாதார மீட்சிக்கும் வளர்ச்சிக்கும் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும் செல்வழியினை, அடிப்படை பேரண்ட பொருளியல் தீர்மானங்களை எடுப்பதன் மூலம் அது மேற்கொள்கின்றது. அந் நாட்டின் மானிட அபிவிருத்தி தொடர்பான தேவைகளையும், அத்தியாவசியமான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வேண்டிய தேவைகளையும் உடனடியாக நிறைவு செய்வது அவசியமாகும். இந்த பிரச்சினையை சமாளிப்பதற்கு முன்வைக்கப்பட வேண்டிய தீர்வு, படிப்படியான ஓர் ஒழுங்கில் வரவு செலவுத்திட்டத்தில் சமநிலையை எடுத்து வருவதாகும். வாஷிங்டன் கருத்தொற்றுமையின் - விலைகளை சரியான மட்டத்தில் நிலைநிறுத்துதல், மானிட அபிவிருத்திக்கான வெளி நாட்டு நிதி ஆதரவு, அத்தியா வசியமான பொது கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்ற - ஏனைய சம்பந்தப்பட்ட துறைகளில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களை கவனத்தில் எடுத்து, உதவி வழங்கும் சமூகம் இந்நாட்டுக்கு உதவிகளை வழங்க வேண்டும். ஒரு நாட்டுக்கும் அதன் கொடையாளிகளுக்குமிடையிலான பரஸ்பர கடப்பாடு, "நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கான சுற்றுச்சூழல் அமைப்பு" என்ற கருதுகோளில் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற யோசனை, 1991 இல் என்.எம்.பெரேரா நினைவுப் பேருரை நிகழ்த்தியபொழுது முதலில் என்னால் முன்வைக்கப்பட்டது. இந்த யோசனையை ஐ.நா.வின் பொருளாதார அபிவிருத்திக்கான மையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியுடன் ஏற்றுக் கொண்டதுடன், புவிக்கோள் தொடர்பான ரியோ மாநாட்டின் போது "மேலதிகமான ஒரு பங்கேற்பு : துரிதப்படுத்தப்பட்ட மற்றும் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கான ஒப்பந்தங்கள்" என்ற தலைப்பில் சமர்ப்பித்திருந்தது. அது சமர்ப்பித்திருந்த யோசனையின் சாராம்சம் வருமாறு :

"வளர்முக நாடுகள் அபிலாஷைகளுடன் கூடிய, துரிதப்படுத்தப்பட்ட நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை முன்வைத்து, கொடையாளி நாடுகள் மேலதிக நிதிப்படுத்தல் மூலம் இதற்கு எதிர் விளைவு காட்டினால், அது உதவி வழங்கப்படுவதற்கு வசதி செய்து கொடுக்கும்."

வளர்முக நாடுகள் தமது கொள்கைகளையும், உத்திகளையும் அவற்றை செயற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தையும் மிகவும் தெளிவான முறையில் முன்வைக்க வேண்டும். உற்பத்தி மட்டங்களில் விரைந்த வளர்ச்சியை எடுத்து வரும் முயற்சியில் பொருளாதார வாய்ப்புக்களை முழுமையாக பயன்படுத்திக் கொள்வதனை இயலச் செய்யும் வகையில் இந்த உத்திகள் வடிவமைக்கப்படும் அதேவேளையில், வறுமை ஒழிப்பு, அடிப்படைக் கல்வி மற்றும் கிராமிய உள் கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை நோக்கி முன்னுரிமைகள் நெறியப்படுத்தப் பட்டிருக்கும். இந்த உத்திகள் சர்வதேச நிறுவனங்களும் இரு தரப்பு உதவி முகவரகங்களும் அதிகரித்த அளவிலான நிதிப்படுத்தல வழங்குவதற்கான கடப்பாட்டுக்கான ஓர் அடிப்படையாக அமையும். வளர்முக நாடுகளும் உதவி வழங்கும் அமைப்புக்களும் நிலையான ஓர் அர்ப்பணிப்புணர்வுடன் செயற்பட்டு வருவது அவசியமாகும்.

இத்தகைய நிகழ்வுப்போக்கினை தற்போதைய ஆலோசனைக் குழுக்கள் மற்றும் வட்ட மேசை முறைகள் என்பவற்றுக் கூடாக ஒருங்கிணைக்க முடியும். எனினும், அவசியமாக இருக்கும் நிதிப்படுத்தலின் பரந்துபட்ட இயல்பின் அடிப்படையில் நோக்கும்

அட்டவணை 1

மானிட அபிவிருத்தி முன்னுரிமை ஒழுங்கில் பட்டியலிடப்பட்ட நாடுகள் (1988) [1]

| நாடு | பொதுச் செலவு விகிதம் (= அசெ/மொதேஉ) | சமூக செலவு ஒதுக்கு விகிதம் (= சசெ/அசெ) | சமூக முன்னுரிமை விகிதம் (மாஅமுசெ/சசெ) | மானிட செலவு விகிதம் (மாஅமுசெ, மொதேஉ) | மானிட செலவு அபிவிருத்தி முன்னுரிமை விகிதம் (=மாஅமுசெ/அசெ) |
|---|---|---|---|---|---|
| சிம்பாம்வே | 52 | 49 | 50 | 12.7 | 24.5 |
| தென் கொரியா | 16 | 30 | 77 | 3.7 | 23.1 |
| மொரோக்கோ | 29 | 42 | 52 | 6.3 | 21.8 |
| மலேசியா | 32 | 29 | 68 | 6.3 | 19.7 |
| தாய்லாந்து | 16 | 37 | 42 | 2.5 | 15.5 |
| பொஸ்ட்வானா | 51 | 37 | 41 | 7.7 | 15.2 |
| கொலம்பியா | 15 | 40 | 36 | 2.2 | 14.4 |
| கோஸ்டாரிக்கா | 41 | 50 | 26 | 5.3 | 13.0 |
| சிங்கப்பூர் | 35 | 35 | 35 | 4.3 | 12.3 |
| பிரேஸில் x | 34 | 32 | 38 | 4.1 | 12.2 |
| சியாரேலியோன் | 13 | 39 | 31 | 1.6 | 12.1 |
| பிலிப்பைன்ஸ் | 21 | 22 | 53 | 2.4 | 11.7 |
| மொரிஷஸ் | 27 | 40 | 29 | 3.1 | 11.6 |
| சீனா | 19 | 24 | 46 | 2.1 | 11.0 |
| ஜோர்தான் | 50 | 25 | 44 | 5.5 | 11.0 |
| குவைத் | 36 | 42 | 26 | 3.9 | 10.9 |
| பங்களாதேஷ் | 12 | 24 | 42 | 1.2 | 10.1 |
| சிலி | 33 | 50 | 19 | 3.1 | 9.5 |
| தான்சானியா | 29 | 15 | 55 | 2.4 | 8.3 |
| இலங்கை | 31 | 43 | 18 | 2.4 | 7.7 |
| நைஜீரியா x | 29 | 20 | 38 | 2.2 | 7.6 |
| இந்தியா x | 37 | 20 | 34 | 2.5 | 6.8 |
| ஆர்ஜன்டீனா x | 41 | 35 | 16 | 2.3 | 5.6 |
| பாகிஸ்தான் x | 25 | 21 | 14 | 0.7 | 2.9 |
| இந்தோனேஷியா x | 25 | 13 | 18 | 0.6 | 2.3 |
| x பாரிய சமஷ்டி முறைகள் | | | | | |
| சராசரி (அனைத்தும்) | 30.0 | 32.6 | 37.9 | 3.7 | 12.0 |
| (சமஷ்டியல்லாதவை) | 30.0 | 35.4 | 40.3 | 4.1 | 13.5 |
| ஆகக்கூடிய 4 (மாஅமுவி 20% < 1) | 32.3 | 37.5 | 61.8 | 7.3 | 22.3 |
| ஏனையன (மாஅமுவி > 20%) | 29.5 | 31.6 | 33.4 | 3.0 | 10.1 |
| (சமஷ்டியல்லாதவை) | 29.4 | 34.9 | 34.9 | 3.3 | 11.2 |
| ஐநாஅதி நியமம் | 25.0 | 40.0 | 50.0 | 5.0 | 20.0 |

விளக்கம்
மொதேஉ - மொத்த தேசிய உற்பத்தி
அசெ - அரசாங்க செலவினம்
சசெ - சமூகத்துறை (அரசாங்க) செலவினம்
மஅமுசெ - மானிட அபிவிருத்தி முன்னுரிமை செலவினம்

மூலம் : ஐ.நா. அபிவிருத்தி திட்ட அறிக்கை

பொழுது இதற்கு சிறப்பான ஒரு நிகழ்வுப்போக்கு அவசியமாக உள்ளது என்பதனை காண முடிகின்றது. இதன் மூலம் ஒப்பந்தம் செய்து கொள்ளும் தரப்பினர் காலத்துக்குக் காலம் ஒன்று கூடி, ஈட்டப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து கலந்துரையாடுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

மேலும், புதிதாகத் தோன்றிவரும பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்தும் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் அவை பேச்சுவார்ததைகள் நடத்தலாம்.

ரியோ புவிக்கோள் மாநாட்டின் இறுதி தீர்மானத்தின் நிகழ்ச்சி நிரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 இன் 33ஆவது அத்தியாயத்தில் "நிதிசார் மூலவளங்களும் பொறிமுறைகளும்" என்ற தலைப்பில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

"உலகின் அனைத்து நாடுகளுக்கு மிடையே-குறிப்பாக, வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கிடையே-ஓர் உறவினைக் கட்டி எழுப்புவதற்கும், நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி உத்திகளும், நீண்டகால குறிக்கோள்களுக்கு ஆதரவாக உயர்ந்த மட்டத்திலான, முன் உணரத்தக்க நிதிப்படுத்தலும் அவசியமாகும். இந்நோக்கத்துக்கென உதவி பெற்றுக் கொள்வதற்காக வளர்முக நாடுகள் தமது சொந்த முன்னுரிமைகளையும் தேவைகளையும் தெளிவாக முன்வைக்க வேண்டும். இந்த முன்னுரிமைகளை நிறைவு செய்யும் பணியில் வளர்ச்சி அடைந்த நாடுகள் கடப்பாடுகளை ஏற்க முன்வர வேண்டும். இது தொடர்பாக ஆலோசனைக் குழுக்களும் வட்ட மேசை அமைப்புக்களும் தேசிய அடிப்படையிலான ஏனைய பொறிமுறைகளும் முக்கியமான ஒரு பங்கினை வகித்து வர முடியும்."

ஒரு நாட்டின் அபிவிருத்தி உத்தி, நீண்ட காலப் பிரிவு முழுவதும் வியாபித்திருக்கும் என்ற புவிக்கோள் உச்சி மாநாட்டின் தீர்மானம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சர்வதேச நாணய நிதியம் ஒரு நாட்டுக்கு, அதன் கொள்கை கட்டமைப்பை சீர்திருத்திக் கொள்வதற்கு 3 வருட கால அவகாசம் வழங்கி வருகிறது. இப்பொழுது இந்தத் தீர்மானத்தின் விளைவாக, இக்கால அவகாசத்தை ஆகக் குறைந்தது 5 வருடங்களுக்கு நீடித்துக் கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

யுனிசெப் தாபனம் ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு இதற்கு இணையான ஒரு மாதிரியை உருவாக்கி உள்ளது. அடிப்படை மனித உரிமைகளின் இயல்பைச் சேர்ந்த சில மானிட அபிவிருத்தி முன்னுரிமைத் துறைகளை இந்த மாதிரி தனியாக எடுத்து நோக்குகிறது. சீராக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் பலிபீடத்தில் இவற்றை ஒரு போதும் பலியிட முடியாது என அது கருதுகிறது. சமூக அபிவிருத்திக்கான ஐ.நா.உச்சி மாநாட்டில் இந்தக் கருதுகோளுக்கு அவசியமான அரசியல் ஆதரவு கிடைக்கும் பட்சத்தில், தனித்தனி நாடுகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களில் இதனை உடனடியாகச் சேர்த்துக் கொள்ள முடியும். யுனிசெப் அமைப்பின் இந்த உலகளாவிய நோக்கு "20-20 தரிசனம்" என அழைக்கப் படுகிறது. உதவி வழங்குபவர்கள் தமது உதவியில் 20 சதவீதத்தினை முன்னுரிமை மானிட அபிவிருத்தித் தேவைகளுக்கு வழங்குவதற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள் என்பதே இதன் பொருளாகும். அதே வேளையில், வளர்முக நாடுகள் இதே நோக்கங்களுக்காக தமது வரவு செலவுத்திட்ட செலவினங்களில் 20 சதவீதத்தை ஒதுக்குவதற்குத் தீர்மானிக் கின்றன. இது தற்போதைய "10 க்கு 10" என்ற விகிதாசாரத்திலும் - அதாவது, முன்னுரிமை மானிட அபிவிருத்தித் தேவைகளுக்கான 10 சதவீத உதவி; வளர்முக நாடுகள் தமது வரவு செலவுத்திட்டங்களில் இவற்றுக்கென 10 சதவீதத்தை ஒதுக்குதல் என்பதிலும் - பார்க்க மாறுபட்டதாகும். இந்த முன்னுரிமை மானிட அபிவிருத்திச் செலவினங்கள் பின்வரும் நடவடிக்கைகளை உள்ளடக்கியிருக்கும்.

I. (அடிப்படை நோய்த்தடுப்புப் பராமரிப்பையும் உள்ளடக்கிய) ஆரம்ப சுகாதார பராமரிப்பு.

II. (பாலர் பாடசாலை, ஆரம்பக் கல்வி, எழுத்தறிவு மற்றும் வாழ்க்கைத் திறன்கள் என்பவற்றை உள்ளடக்கிய) அடிப்படைக் கல்வி.

III. குறைந்த செலவிலான கிராம மற்றும் உப நகர நீர் விநியோகமும் பொதுச் சௌக்கியமும்.

IV. போஷாக்கு ஆதரவு.

மேலே விளக்கப்பட்டுள்ளவாறு, "20-20 தரிசனம்" கொடையாளிகளுக்கும், உதவியைப் பெற்றுக் கொள்பவர்களுக் கிடையிலுமான ஓர் உலகளாவிய உடன்படிக்கையின் இயல்பினைக் கொண்டுள்ளது. தனிப்பட்ட வளர்முக நாட்டின் மட்டத்தில் அதனை ஓர் உடன்படிக்கையாக கூட்டிணைத்துக் கொள்வதற்கு, அடிப்படை மானிட அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கான வெளிநாட்டு சேமிப்பு ஆதரவினை பெற்றுக்கொள்ள வேண்டும். அந்நாட்டுக்கான உதவிகளில் 20% மும், அந்நாட்டின் வரவு செலவுத்திட்டத்தில் 20% ஒதுக்கீடுகளும் இந்த முன்னுரிமைகளுக்கென ஒதுக்கப்படுகிறது. இதனுடன் இணைந்த வகையில் பொருளாதார சீர்திருத்தப் பாதையில் மாற்ற முடியாத ஒரு நகர்வு இடம் பெறுகிறது. பொருளாதார சீர்திருத்தம் தொடர்பாக ஒரு நாட்டின் அர்ப்பணிப்பினை விளக்குவதற்கு அவசியமான மிக எளிய சூத்திரம் அது பிரெட்டன்வூட்ஸ் நிறுவனங் களால் ஏற்றுக் கொள்ளத்தக்க பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளது அல்லது இந்த நிறுவனங்களிடம் நல்ல பெயரை வாங்கியுள்ளது என்பதாகும்.

"20-20" தரிசனத்தின் மூலம் இலங்கை எவ்வாறு பயனடைய முடியும் என்பதை நோக்குவோம். ஐ.நா. அபிவிருத்தித்திட்டம் (UNDP) 1988 ஆம் ஆண்டு தொடர்பாக வளர்முக உலகின் 74 சதவீதமான நாடுகளை உள்ளடக்கிய விதத்தில் 25 நாடுகள் தொடர்பான தரவுகளை பகுப்பாய்வு செய்திருந்தது. ஆரம்ப சுகாதார பராமரிப்பு மற்றும் அடிப்படைக் கல்வி போன்ற முன்னுரிமை மானிட அபிவிருத்திச் செலவினங்களுக்கு ஒவ்வொரு நாடும் தனது மொத்த தேசிய உற்பத்தியில் ஒதுக்கும் செலவின் சதவீதத்தின் அடிப்படையில் முதலில் நாடுகள் வரிசைப்படுத்தப்பட்டன. இந்த ஒதுக்கு 5 சதவீதத்துக்கு அதிகமானதாக இருந்தால், அது உயர் மானிட செலவினமாகக் கருதப்பட்டது; இச் செலவு 3% க்கும் 5% க்கும் இடையில் இருந்தால் நடுத்தர மானிடச் செலவினமாகவும், 3% க்கும் குறைவாக இருந்தால் தாழ்ந்த மானிடச் செலவினமாகவும் கருதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த 25 நாடுகளில் இலங்கையையும் உள்ளிட்ட 12 நாடுகள் தாழ்ந்த மானிடச் செலவின வகையிலிருந்தன. ி சிம்பாவே, தென் கொரியா, மொரோக்கொ மற்றும் மலேசியா ஆகிய நாடுகள் தமது வரவு செலவுத்திட்டங்களில் முன்னுரிமை மானிட அபிவிருத்திச் செலவினத் துக்காக 20 சதவீத இலக்கினை நிறைவு செய்திருந்தன. ஒரு சில குறை வருமான நாடுகளும் நடுத்தர வருமான நாடுகளும் 10% க்குக் குறைந்த விகிதங்களைக் கொண்டிருந்தன. அவை இறங்குமுகமாக வரிசைப் படுத்தப்பட்டிருந்தன: பங்களாதேஷ் (10.1), சிலி (9.5), டான்சானியா (8.3), இலங்கை (7.7), நைஜீரியா (7.6), இந்தியா (6.8), ஆர்ஜன்டினா (5.6), பாகிஸ்தான் (2.9) மற்றும் இந்தோனேசியா (2.3). இந்தப்பிரிவில் முன்னுரிமை மானிட அபிவிருத்திச் செலவினத்துக்கு ஒதுக்கப்பட்ட வெளிநாட்டு உதவி அநேகமாக 10% க்கும் குறைவாக இருந்தது. இது பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளில் 10% க்கும் உயர்வாக இருந்தது : பங்களாதேஷ் (12.2), சிலி (9.5), டன்சானியா (10.2), இலங்கை (11.3), நைஜீரியா (0.6), இந்தியா (4.6), ஆர்ஜன்டினா (1.4), பாகிஸ்தான் (8.5), இந்தோனேசியா (2.6). "20-20" தரிசனத்தை ஏற்றுக் கொள்வதானது இந்த இரண்டு வகைகள் தொடர்பா கவும் நிதி ஒதுக்குகளில்அதிகரிப்புக்கள் ஏற்படுவதற்கு வழிகோல முடியும்.

கொடை உதவி வழங்கும் சமுகத்தை பொறுத்தவரையில், தற்போதைய உதவி மட்டத்தை மட்டும் மீள் பகிர்ந்தளிப்புச் செய்வதன் மூலம் அது எந்த அளவுக்கு தனது கடப்பாடுகளை நிறைவு செய்து கொள்ள முடியுமென்பதற்கு வரை யறைகள் உள்ளன. ஏனெனில், நோர்வே மட்டுமே உதவி வழங்குவது தொடர்பாக 20% இலக்கினை நிறைவு செய்துள்ளது. மேலும், சிறிய அளவில் உதவி வழங்கும் நாடுகள் ஒரு சில இந்த இலக்கினை ஓரளவுக்கு அண்மித்துள்ளன. பாரிய அளவில் உதவி வழங்கும் நாடுகள் 10% க்கும் குறைவான மட்டத்திலேயே செயற்பட்டு வருகின்றன. சில நாடுகளைப் பொறுத்தமட்டில், இது 4 சத வீதத்துக்கும் குறைவானதாக இருந்து வருகின்றது. அட்டவணை - 2 இல் தரப்பட்டுள்ள தரவுகள் இதனை எடுத்துக் காட்டுகின்றன. பல்பக்க உதவி முகவரகங்களின் செயற்பாடு அட்டவணை-3 இல் காட்டப்பட் டுள்ளது. உலக வங்கியும் பிராந்திய அபிவிருத்தி வங்கிகளும் இந்த முகவரகங்களில் அடங்குகின்றன. இந்த முகவரகங்கள் 20% இலக்கினை நிறைவு செய்வதற்கு இன்னும் எவ்வளவோ தூரம் செல்ல வேண்டியுள்ளது.

எவ்வாறிருப்பினும், வளர்முக நாடுகள் 20-20 தரிசனத்தை செயற்படுத்துவதற்கு தமது செலவு முன்னுரிமைகளில் மிக முக்கியமான

அட்டவணை 2

**இருபக்க உதவியில் மானிட முன்னுரிமைகள்**

| நாடு | உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி (அ.டொலர் பத்து இலட்சம்) | உ அ உ மொதேஉ யின் % ஆக | உதவி சமூகப் பகிர்வு விகிதம் | சமூக முன்னுரிமை விகிதம் | உதவி மானிடச் செலவு விகிதம் | மனித முன்னுரிமை களுக்காக மொஉஅஉ விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1990 | 1988/89 | 1988/89 | 1988/89 | 1988/89 |
| நோர்வே | 1,207 | 1.17 | 27.2 | 72.3 | 0.230 | 19.7 |
| பின்லாந்து | 846 | 0.64 | 38.0 | 41.4 | 0.100 | 15.7 |
| டென்மார்க் | 1,171 | 0.93 | 19.2 | 55.4 | 0.099 | 10.6 |
| நெதர்லாந்து | 2,580 | 0.93 | 21.1 | 44.5 | 0.087 | 9.4 |
| சுவீடன் | 2,007 | 0.90 | 17.0 | 41.5 | 0.064 | 7.1 |
| சுவிட்சர்லாந்து | 750 | 0.31 | 35.8 | 50.6 | 0.056 | 18.1 |
| கனடா | 2,470 | 0.44 | 23.8 | 45.9 | 0.048 | 10.9 |
| இத்தாலி | 3,395 | 0.32 | 18.0 | 47.3 | 0.027 | 8.5 |
| ஐக்கிய இராச்சியம் | 2,639 | 0.27 | 13.4 | 65.8 | 0.024 | 8.8 |
| பிரான்ஸ் | 6,277 | 0.52 | 11.0 | 35.9 | 0.021 | 4.0 |
| அவுஸ்திரியா | 389 | 0.25 | 13.4 | 60.6 | 0.020 | 8.1 |
| ஐக்கிய அமெரிக்கா | 10,166 | 0.19 | 16.4 | 50.4 | 0.016 | 8.3 |
| ஜேர்மனி | 6,320 | 0.42 | 8.9 | 21.4 | 0.008 | 1.9 |
| ஜப்பான் | 9,054 | 0.31 | 10.7 | 25.5 | 0.008 | 2.7 |
| அவுஸ்திரேலியா | 955 | 0.34 | 6.4 | 31.4 | 0.007 | 2.0 |
| மொத்தம் 15 அபிவிருத்தி உதவி வழங்கும் நாடுகள் | 50,226 | 0.35 | 14.8 | 43.7 | 0.023 | 6.5 |

* அடிப்படைக் கல்வி, ஆரம்ப சுகாதார பராமரிப்பு, பாதுகாப்பான குடிநீர், பொதுச் சௌக்கியம், குடும்பத் திட்டமிடல் மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை மானிட முன்னுரிமைகள் உள்ளடக்குகின்றன.

அட்டவணை 3

**பல்பக்க உதவியில் மானிட முன்னுரிமைகள் ***

| முகவரகம் | உதவி சமூகப் பகிர்வு | சமூக முன்னுரிமை விகிதம் | மானிட முன் னுரிமைகளுக்கான மொத்த உத்தியோக பூர்வ அபிவிருத்தி உதவியின் சதவீதம் |
|---|---|---|---|
| | 1988/89 | 1988/89 | 1988/89 |
| யுனிசெப் | 91.7 | 85.9 | 78.8 |
| வேளாண் அபி.நிதியம் | 16.8 | 100.0 | 16.8 |
| IDB (including special) | 27.8 | 54.4 | 15.1 |
| ASDB (including special) | 17.5 | 64.5 | 11.3 |
| உலகவங்கி/ சஅநி | 17.5 | 47.7 | 8.3 |
| ஆபிரிக்க அபிவிருத்தி நிதியம் | 16.6 | 32.4 | 5.4 |
| மொத்தம் | 19.1 | 49.1 | 9.9 |

மூலம் : ஐ.நா. அபிவிருத்தி திட்டம், மானிட அபிவிருத்தி அறிக்கை, 1992.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள் மதிப்பீட்டினை மேற்கொள்வது அவசியமாகும். இலங்கையில் மானிட அபிவிருத்தி முன்னுரிமைக்கான வரவுசெலவுத்திட்ட செலவினம் தற்போதைய மட்டமான 8% திலிருந்து 12 சதவீதமாக உயர்த்தப்படுதல் வேண்டும். அதே வேளையில், மொத்த வெளிநாட்டு உதவிகளில் முன்னுரிமைத் துறைகளுக்கான ஒதுக்கீடு தற்போதைய 8.5 சதவீத மட்டத்திலிருந்து 15.5 சதவீத மட்டத்துக்கு உயர்த்தப்பட வேண்டியிருக்கும். இலங்கையின் இராணுவச் செலவு இப்பொழுது ஆண்டொன்றுக்கு சுமார் 2000 கோடி ரூபா அளவில் - அல்லது மொத்த வரவுசெலவுத்திட்டச் செலவினத்தில் 15 சதவீத அளவில் - இருந்து வருகின்றது. இந்த இராணுவச் செலவுகளில் பெரும்பகுதியை மானிட அபிவிருத்தி முன்னுரிமை நோக்கங் களுக்காக திசை திருப்பி விடுவதன் மூலம் மட்டுமே இலங்கை இந்த இலக்குகளை நிறைவு செய்து கொள்ள முடியும். உண்மையிலேயே, இராணுவச் செலவினம், இவ்விதமாக மீள்பகிர்வு செய்யப்படுமானால் இலங்கையின் மானிட அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கான மொத்தச் செலவினமும், 20-20 தரிசனத்தின் கீழான தமது கடப்பாட்டின் ஒரு பாகம் என்ற முறையில் உதவி வழங்கும் சமூகத்தினால் நிதிப்படுத்தப் படும்.

ஆயுதப் பரிகரணத்துக்கும் வெளிநாட்டு உதவிக்குமிடையே பெருமளவுக்கு நேரடியான ஒரு தொடர்பினை எடுத்து வரக்கூடிய சாத்தியப்பாடு குறித்தும் இப்பொழுது சர்வதேச ரீதியில் சிந்திக்கப்பட்டு வருகின்றது. இராணுவ செலவினத்தி லிருந்து சேமித்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு டொலரையும் மேலதிக உதவி வழங்குவதற்காக பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற கருத்து இதில் மிக முக்கியமானதாகும். குறிப்பாக, இவ்விதம் சேமித்துக் கொள்ளப்படும் தொகைகளை முன்னுரிமை மானிட அபிவிருத்தி நோக்கங்களுக்கென குறித்தொதுக்க முடியும்.

**சந்தை நட்புக் கொள்கைகளும் கிழக்காசிய அபிவிருத்தி மாதிரியும்**

வாஷிங்டன் கருத்தொற்றுமை கருதுகோளின்அடிப்படையில் சந்தை தோல்வியடையக் கூடிய துறைகளில் போதியளவில் பொது முதலீடுகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகள் இதுவரையில் நோக்கப்பட்டன. வாஷிங்டன் கருத்தொற்றுமையின் இரண்டாவது பிரச்சினை, அதன் வேறு சில கோட்பாடுகள் கிழக்காசிய பொருளாதாரங்களினால் வெற்றி கரமான முறையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டிருக்கும் கொள்கை கட்டமைப்புடன் முரண்பட முடியும் என்பதாகும். இந்தப் பொருளா தாரங்களின் கொள்கை தொகுதிகளின் சிறப்புக் குணாம்சங்களை நான்கு தலைப்புக்களின் கீழ் தொகுத்து நோக்க முடியும். இந்த ஒவ்வொரு தலைப்பின் கீழும் கிழக்காசிய நாடுகளின் உபாயங்கள், சந்தை நட்புக் கொள்கை களிலிருந்து சில சந்தர்ப்பங்களில் கணிசமான அளவிலும், சில சந்தர்ப்பங்களில் ஓரளவுக்கும் வேறுபடடுக் காணப்படுகின்றன.

**(1) கைத்தொழில் உபாயமும் ஆதரவும்**

அரசாங்கத் தலையீடு மானிட அபிவிருத்திக்கும் அத்தியாவசிய பொது வசதிகளுக்கும் மட்டும் வரையறுக்கப் பட்டிருக்கவில்லை என்ற அணுகுமுறையை கிழக்காசிய நாடுகளின் மாதிரி தன்னகத்தே கொண்டுள்ளது. இது பிரெட்டன்வூட்ஸ் நிறுவனங்களின் சந்தை நட்புக் கொள்கைகளின் அணுகுமுறையி லிருந்து மாறுபட்ட ஓர் அணுகு முறையாகும். இத்தகைய தலையீடுகள் இன்றியமையாதவையென கிழக்காசிய நாடுகள் கருதி வருகின்றன. அது மட்டுமன்றி அரசாங்கம் கைத்தொழில் தெரிவினை சந்தைச் சக்திகளின் கைகளில் விட்டுவிடுவதற்குப் பதிலாக, வெற்றியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கு தலையிட வேண்டும் என்பது இந் நாடுகளின் அனுபவமாகவுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன்னாள் உப தலைவர் ஒருவர் இந்த அனுபவத்தை பின்வருமாறு சுருக்க மாகக் கூறியுள்ளார்:

"ஆசியாவின் புதிதாக தொழில் வளர்ச்சி கண்ட நாடுகளோ அல்லது ஜப்பானோ தமது கைத்தொழில்களில் எவை செழித்தோங்க வேண்டும் என்பதனையும், எவை தோல்வி யடைய வேண்டும் என்பதனை யும் தீர்மானிப்பதற்கான பொறுப்பினை சந்தைக்கோ அல்லது அந்நிய முதலீட்டாளர் களுக்கோ கையளிக்கவில்லை. மாறாக, இந்நாடுகள் சந்தை அபிவிருத்திகள் குறித்த எதிர்வு கூறல்களை அடிப்படையாகக் கொண்டும், தமது குழந்தைப் பருவத்திலுள்ள கைத்தொழில் களில் எவை உலகச் சந்தையில் போட்டி அனுகூல நிலை ஒன்றினை பெற்றுக்கொள்ள முடியும், எவை அந்த அனுகூல நிலையை பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும் போன்றன தொடர்பான மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு தமது கைத்தொழில் உபாயங் களை உருவாக்கிக் கொண்டி ருந்தன. இதில், முதலாவது தொகுதி கைத்தொழில்களுக்கு அந்நாடுகள் இறக்குமதிப் போட்டிகளிலிருந்து பாதுகாப் பளித்ததுடன், அவற்றின் வளர்ச்சியையும் போட்டியிடும் திறனையும் மேம்படுத்துவதற் கென ஏற்றுமதி ஊக்குவிப்புக் களையும் வரி நிவாரணத்தையும் ஏனைய நிதி உதவிகளையும் வழங்கிவந்தன."

பாதுகாப்புக்களை அனுபவித்து வரும் குழந்தைப் பருவ கைத் தொழில்கள் காலப்போக்கில் சர்வதேச ரீதியில் போட்டித் திறனைப் பெற்றுக் கொள்ளவதனை உறுதி செய்யும் பொருட்டு சந்தை நிர்ப்பந்தங்கள் பயன்படுத்தப்பட்டன. இந்த அடிப்படையில், அவற்றுக்கு வழங்கப்பட்டிருக்கும் மானியங்களை படிப்படியாக விலக்கிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அதே நேரத்தில், வீழ்ச்சியடைந்து கொண்டு வரும் கைத்தொழில்கள் தமது நடவடிக்கை களை பன்முகப்படுத்தி, ஊழியர்களை தொடர்ந்து வைத்துக் கொள்வதற்கு உதவுவதில் அரசாங்கம் தலையிட்டது. துரித, கட்டற்ற தாராளமயமாக்கல் வாஷிங்டன் கருத்தொற்றுமையின் ஓர் உள்ளார்ந்த பாகமாகும். இது மிகக் கடுமையான போட்டியை எடுத்து வருகிறது. கிழக்கு ஐரோப்பிய அல்லது இலத்தீன் அமெரிக்க கைத்தொழில்களால் இப்போட்டிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்குப்பிடித்து, உயிர் வாழ முடிவதில்லை. ஆனால், இக் கைத்தொழில்கள் கிழக்காசிய பாணியில் கையாளப் பட்டால் அவை நடுத்தர காலத்தில் வெற்றியடைய முடியும். கிழக்காசிய அணுகுமுறையின் சிறப்பம்சம் இது வாகும்.

ஜப்பானிய உதவி முகவரகமான கடல் கடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியம் "அமைப்பு ரீதியான சீராக்கலுக்கான உலக வங்கியின் அணுகுமுறையுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் - பிரதான பங்கேற்பு அமைப்பொன்றின் யோசனை" - என்ற தலைப்பில் அண்மையில் ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தது. இந்த அறிக்கை வாஷிங்டன் கருத்தொற்றுமையின் கொள்கைகளுக்கு சில சவால்களை முன்வைத்தது. இக் கொள்கைகள் நாடுகளை நிலையான வளர்ச்சிப் பாதையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமானால் அபிவிருத்தி குறித்த ஒரு நீண்டகால அணுகுமுறை அவசியமாகும் என்பதனை இந்த அறிக்கை வலியுறுத்துகிறது. அசீநிகள் சந்தைப் பொறிமுறையை அறிமுகப்படுத்தி, தனியார் துறை மீதான கட்டுப்பாடுகளை ஒழித்து விடுவதனால் மட்டும் நிலையான வளர்ச்சிக்கான தூண்டுதல் உருவாக்கப்பட முடியுமா என அது கேள்வி எழுப்புகிறது. நேரடியாக முதலீட்டு ஊக்குவிப்பினை நோக்கமாகக் கொண்ட மேலதிக வழிமுறைகள் இதற்கு அவசியம் என இது சுட்டிக் காட்டுகிறது. ஜப்பான் உலக யுத்தத்துக்கு பிற்பட்ட காலத்தில் பின்பற்றி வந்த முன்னுரிமை வரிச் சலுகை மற்றும் அபிவிருத்தி நிதி நிறுவனங்களின் கடனளிப்பு என்பவற்றை மையமாகக் கொண்ட நாணய மற்றும் நிதிக் கொள்கைகளின் மாதிரியைப் பின்பற்றியவையாக இவை அமைய வேண்டும் என்றும் இந்த அறிக்கை யோசனை தெரிவித்துள்ளது. ஜப்பானின் இக்கொள்கைகள், பாரிய கைத்தொழில்களுக்கு பாகங்களை உற்பத்தி செய்து வழங்கும் சிறு அளவுக் கைத்தொழில்களின் உருவாக்கத்துக்கு ஊக்கமளித்து வந்தன என்றும் அது குறிப்பிடுகின்றது. இதன் விளைவாக சுயதொழில்கள் பெருகி, வேலையில்லாத் திண்டாட்டம் தாழ்ந்த மட்டங்களுக்கு வீழ்ச்சி கண்டது.

இரண்டாவதாக, துரித, கண் மூடித்தனமான தாராளமயமாக்கலை பரிந்துரைக்கும் வாஷிங்டன் கருத்தொற்றுமையின் மூன்றாவது கருதுகோளுக்கு இந்த அறிக்கை சவால் விடுகிறது. தாக்கமான அபிவிருத்தியும் கைத்தொழில்மயமாக்கலும் திட்டமிடடு மேற்கொள்ளப் படும் அரச தலையீட்டுடன் சம்பந்தப்பட்டுள்ளன என்பதனை சுட்டிக்காட்டும் இந்த அறிக்கை, செயல்முனைப்பு மிகுந்த கைத்தொழில் ஏற்றுமதித்துறையொன்று வளர்ச்சியடைவதற்கு இடமளிக்கும் பொருட்டு, தெரிவு செய்யப்பட்ட சில உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு சார்புரீதியில் நீண்ட காலகட்டங்களுக்கு தற்காலிக பாதுகாப்பு வாங்கப்பட வேண்டும் என்பதனையும் வலியுறுத்துகிறது.

**(2) செலாவணி விகித கொள்கை**

கிழக்காசியா, ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கும், இறக்குமதிகளை ஊக்கமிழக்கச் செய்வதற்குமென வேண்டுமென்றே செலாவணி விகிதங்களை குறைவாக மதிப்பிட்டு வைத்திருந்தது. வெளிநாட்டுச் சந்தைகளைக் கைப்பற்றி பாரிய அளவிலான ஒதுக்குகளை கட்டியெழுப்பிக் கொண்ட பின்னரேயே செலாவணி விகிதத்தை மீள் மதிப்பீடு செய்வது தொடர்பான நிர்ப்பந்தங்களுக்கு அது தயக்கத்துடன் பணிந்தது. இதற்கு மாறாக, வாஷிங்டன் சருத்தொற்றுமை சந்தை செலாவணி விகிதங்களை பரிந்துரைக்கின்றது. இக் கொள்கை, ஒரு புறத்தில், அவசியமான ஏற்றுமதி ஊக்குவிப்புக்களை உருவாக்குவதில் தோல்வி கண்டு வருகிறது. மறுபுறத்தில், மிதமிஞ்சிய அளவிலான பெறுமதியிறக்கத்துக்கு அது வழி கோலுகின்றது. இதன் விளைவாக, இறக்குமதிச் செலவுகள் அதிகரித்து, செலாவணி விகித தூண்டற் பணவீக்கம் தோன்றுகிறது.

**(3) வெளிநாட்டு முதலீடு**

ஜப்பானைப் பின்பற்றிய 'NIC' நாடுகள் வெளிநாட்டு முதலீடு தொடர்பான தமது அணுகுமுறையில் சற்று மந்தமாக இருந்து வந்தன. லைசென்சுகள் மற்றும் சந்தையைப் பகிர்ந்து கொள்ளும் ஏற்பாடுகள் என்பவற்றுக்கூடாக தொழில்நுட்பத்தைப் பெற்றுக் கொள்ளவும், ஆட்களை வெளிநாடுகளில் பயிற்றுவிப்பதன் மூலம் திறன்களைப் பெற்றுக் கொள்ளவும் அவை விரும்பின.

(மிகுதி அடுத்த இதழில்)

---

( 37 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உறவுமுறைகள் தொடர்பான சில அடிப்படை கருத்துக்களைப் பற்றி கேள்வி எழுப்பு கிறது.

சுயாதிபத்தியம் அல்லது மகளிருக்கு அதிகாரம் அளித்தல் பற்றிய கோட்பாடு அதிகாரத்தை பூரண சுய நம்பிக்கை கொண்ட மகளிரின் ஆற்றலுடன் அடையாளம் காண்கிறது. மிக அத்தியாவசியமான பௌதீக, பௌதீக தன்மையற்ற வளங்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெறுவதன் மூலம் வாழ்க்கையின் தெரிவுகளை தீர்மானிக்கும் உரிமையையும் மாற்றத் திசைகளில் செல்வாக்கு செலுத்தாதையும் இனங் காண்கிறது. அதிகாரத்தை அதனுள்ளும் சமூகங்களுக்கு இடையிலும் மீளப் பகிர்வு செய்வதன் மூலம் மகளிருக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என அது வேண்டுகிறது.

அட்டவணை 1.1 சமூக அமைப்பினதும் கலாசார காரணிகளதும் பாதகமான தாக்கங்களையும் மகளிர் சுயாதிக்கம்/அதிகாரம் அளித்தல் தொடர்பான நவீனமயக் காரணியின் சாதகமான தாக்கங்களையும் காட்டுகிறது. இவ் அணுகுமுறையின் சவால் தன்மை காரணமாக இதற்கு தொடர்ந்து குறைந்தளவு ஆதரவே அளிக்கப்பட்டு வருகிறது. எனினும், ஒரு நாடு முழுமையான அபிவிருத்தியை அடைய வேண்டுமானால், அதன் சரிபாதி யான, பலவீனமான குடித்தொகையினருக்கு சுயாதிக்கமும் அதிகாரமும் அளிக்கப் படுவது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை அஞ்சல் அலுவலகத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு பெற்றுள்ளது. பதிவு எண் : QD/30/News/95

# பொருளியல் நோக்கு

பொருளியல் நோக்கு, கடந்த பத்தொன்பது வருட காலமாக, சமகால அபிவிருத்தி மற்றும் சர்வதேச சமூக, அரசியல், பொருளாதார விவகாரங்கள் தொடர்பான கலந்துரையாடல்களுக்கான ஒரு களத்தினை அளித்து வந்துள்ளது. அது அண்மையில், சிறப்பு அக்கறைக்குரிய பல தலைப்புக்களை உள்ளடக்கிய விசேஷ அறிக்கைகளை வாசகர்களுக்கு வழங்கியுள்ளது.

- ❖ இலங்கையில் வெளிநாட்டு முதலீடு
- ❖ சுற்றுலாத்துறையும் பொருளாதாரமும்
- ❖ இலங்கையில் பங்குச் சந்தை
- ❖ குடித்தொகையும் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியும்

பொருளியல் நோக்கு பிரதிகளை நாடெங்கிலும் உள்ள புத்தக நிலையங்களிலும் மக்கள் வங்கிக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

**பிரதி விலை : ரூ. 10/- ஆண்டு சந்தா : ரூ.120/-**
**ஆண்டு சந்தா (வெளிநாடு)**

தென்னாசியா - US$ 24
தென்கிழக்காசியா /ஆபிரிக்கா - US$ 24
ஜப்பான் - US$ 24
உலகின் ஏனைய பாகங்கள - US$ 33-

காசோலைகள் / காசுக்கட்டளைகள் "People's Bank Economic Review" என்ற பெயருக்கு வரையப்பட்டு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்:

ஆராய்ச்சிப் பணிப்பாளர், ஆராய்ச்சிப்பிரிவு,
மக்கள் வங்கி, தலைமையலுவலகம், கொழும்பு 2.
தொலைபேசி : 327082, 436940.

பொருளியல் நோக்கு - மக்கள் வங்கியின்
ஒரு சமூகப் பணித்திட்டம்

உரிய முறையில் "பொருளியல் நோக்கின்" பெயரைக் குறிப்பிட்டு, அதில் இடம் பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப் பிரசுரிக்கவோ முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at the Sumathi Book Printing (Pvt) Ltd, Colombo 14, Sri Lanka.